வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு வார மலர்

Eelanadu








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 121 | பக்கங்கள் : 20





07 மோடியின் வெற்றி உறுதி?





08 புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு அலை





09 'சூம்' வழியாக தலைவரை தேடும் தனிப்பெருங் கட்சி





10 பாட்டிப் பரீட்சைகளை வெறுக்கும் பட்டதாரிகள்


# தேசிய அரசை அமைப்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு

## 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் அவரே என்கிறார் ரவி



கொழும்பு, ஏப்ரல் 09

தேசிய இணக்கப்பாட்டு அரசொன்றை அமைப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய எதிர்பார்ப்பாக உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். 19

## தமிழ்க் கட்சிகள் இன்று வவுனியாவில் கூடுகின்றன

### சம கால விடயங்கள் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுவதற்காக

வவுனியா, ஏப். 09

சமகால அரசியல் நடவடிக்கைகளை ஒன்றிணைந்து எதிர்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் வகையில் வவுனியாவில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளுக்கான ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியாவில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை தமிழ்க் காங்கி ரஸ், தமிழ் 19

## புதிய சட்டத்தை எதிர்ப்பதனால் பழையதே தொடர்ந்தும் நீடிக்கும்

### கூறுகின்றார் நீதியமைச்சர்



கொழும்பு, ஏப். 09

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருகின்றோம். அவ்வாறிருக்கையில் இப்புதிய சட்டம் வேண்டாம் என்றுகூறி எதிர்ப்பு வெளியிட்டால், ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் நிலையேற்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ 19

## அரசுடன் இணையும் சஜித் தரப்புக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவோம்!

### சந்திரசேன எம்.பி. அறிவிப்பு

கொழும்பு, ஏப், 09

அரசாங்கத்துடன் இணையும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்து வோம்.

ஸ்திரமான அரசாங்கத்தை தோற்றுவிக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். 19

## சிறுமி கூட்டு வன்புணர்வு; 4 பேர் பொலிஸாரால் கைது

### யாழ். குருநகர் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 09

பதின்ம வயதுச் சிறுமியை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நிலையில் யாழ். சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியும் குற்றச்சாட்டப்பட்டவர்களும் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய 19 வயது முதல் 26 வயதுக்குட்பட்டவர்களே 14 வயதுச் சிறுமியை தொடர்ச்சியாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தியமை நேற்று 19

## வடக்கு, கிழக்கு, மலையக வாழ் மக்களுக்கு 58,000 பவுண்ட்ஸ்

### இங்கிலாந்து மாணவர்கள் திரட்டினர்

லண்டன், ஏப். 09

இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில உள்ள மக்களுக்கான சுத்தமான கிணறுகளைப் பராமரித்தல் மற்றும் விவசாயத் துறைக்கு உதவும் நோக்கில் இங்கிலாந்தின் சொலிஹூல் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் 19

## இலங்கை மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது



### எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, ஏப். 09

நாடு மீண்டும் எழுச்சி பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

வெலிமடைப் பகுதியில் மக்கள் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவங்களுக்கு இனி இடமில்லை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 09

ஈஸ்டர் தாக்குதல் போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

துரதிஷ்டவசமான இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளும் சட்ட நடவடிக்கைகளும் ஏற்கனவே இடம்பெற்று வருவதாகவும், எந்தவொரு பக்கச்சார்பற்ற வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு தேவையான பின்னணி அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

குறுகிய அரசியல் இலக்குகள் 19

## உள்ளூராட்சித் தேர்தல் நெருக்கடி; பிரதமரை சந்தித்த பின்னர் தீர்மானம்

### தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, ஏப். 09

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்ந்தும் நெருக்கடியாகவே காணப்படுகின்ற நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்திக்கவுள்ளனர்.

தவிர்க்க முடியாத காரணிகளால் கடந்த வாரம் பிரதமருடனான சந்திப்பு இடம்பெறவில்லை என்பதால், இவ்வாரம் நிச்சயம் குறித்த சந்திப்பு இடம்பெறுமெனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கடந்த வாரம் பிரதமரைச் சந்திக்கவுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும், அவ்வாறு எந்தவொரு சந்திப்பும் இடம்பெறாமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## தேசிய...

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒழுக்கமும் சட்டமும் இன்றி ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். எனவே மக்கள் இந்த நேரத்தில் மிகவும் புத்திசாலித்தனமாகவும், பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களைப் பலப்படுத்துவதற்கும் அன்றி நாட்டை அழிப்பதற்காகவே எதிர்க் கட்சிகளும் சில தொழிற்சங்கங்களும் செயற்படுகின்றன.

அரசியல் அறியாமை காரணமாகவே பல அரசாங்கம் தோல்வியை சந்திக்கின்றன - என்றார். (அ)

## ஈஸ்டர்...

மற்றும் பின்தங்கிய போக்குகளிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் அனைவரும் கைகோர்க்க வேண்டியது அவசியமானது என ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு ரணில் விக்கிரம சிங்க விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

## தமிழ்க்...

மக்கள் கூட்டணி மற்றும் புதிய மாக்ஸிஸ லெனினிச கட்சி என்பன கலந்து கொள்ளவுள்ளன.

தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள், காணி ஆக்கிரமிப்புக்கள், தமிழர் பாரம்பரியங்களை அழிக்கும் செயற்பாடுகள் உட்பட அரசியல் தீர்வு விடயங்களில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான கட்டமைப்பை உருவாக்கும் ஆரம்பக் கலந்துரையாடலாக இது இடம்பெறவுள்ளது.

## புதிய...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில் பாரிய எதிர்ப்பலை தோற்றம் பெற்றுள்ள நிலையில், அச்சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தாமதிக்கப்போவதாகக் கடந்த வாரம் அமைச்சர் விஜயதாஸ அறிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றீர்களா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் குறை கூறுகின்ற அனைவரும் அதன் ஒருசில கூறுகளை மாத்திரமே சுட்டிக்காட்டிப் பேசுகின்றனர். மாறாக அந்த சரத்துக்களின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டதன் பின்னர், அதில் என்ன குறைபாடு இருக்கின்றது என்பது பற்றி யாரும் கூறவில்லை.

அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டுவருகின்றோம். அவ்வாறிருக்கையில் இப்புதிய சட்டம் வேண்டாம் என்றுகூறி எதிர்ப்பு வெளியிட்டால், ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

இப்புதிய சட்டமூலத்தை எதிர்ப்பவர்கள் நீதிமன்றத்தை நாடலாம். அதனைத்தொடர்ந்து அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எனவே நாம் எதனையும் அரசியலமைப்புக்கு முரணான வகையில் செய்யமாட்டோம்-என்றார். (அ)

## சிறுமி...

பாதிக்கப்பட்ட சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையிலே தெரியவந்தது என்று பொலிஸார் கூறினர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் வேலைக்குச் சென்றிருந்த வேளைகளிலேயே சந்தேக நபர்கள் இந்தச் செயலை செய்துள்ளனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் சந்தேக நபர்களும் மருத்துவ பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (அ-03)

## இலங்கை...

நாடு கடந்த வருடம் போராட்டங்கள் காரணமாக பாரிய சரிவை சந்தித்திருந்தது.

காலிமுகத்திடல் போராட்டம், வலுவடைந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தின் கதவு அருகிலும் கூடாரங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது அந்த நிலைமை இல்லை. இந்தநிலையில், நாடு பொருளாதார ரீதியாக எழுச்சி பெற்றுள்ளது-என்றார். (அ)

## உள்ளூராட்சி...

தெரிவிக்கையில்-

நாளை பிரதமருடன் நிச்சயம் சந்திப்பு இடம்பெறும். கடந்த வாரம் தவிர்க்க முடியாத காரணிகளால் சந்திப்பு இடம்பெறவில்லை.

இந்த சந்திப்பின்போது நிதி நெருக்கடியின் காரணமாக எம்மால் அடுத்த கட்டமாக எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றமை தொடர்பில் பிரதமருக்கு தெளிவுபடுத்தப்படும்.

அதற்கமைய எடுக்கப்படும் முடிவுகளுக்கமையவே வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள், தபால் மூல வாக்கெடுப்பு உள்ளிட்டவை தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

இது குறித்து தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

இதன்போது தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும்-என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முதலில் கடந்த மார்ச்சில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் வரை காலம் தாழ்த்தப்பட்டது.

இம்மாதம் 25ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தமக்கான நிதி திறைசேரியினால் வழங்கப்படாமையின் காரணமாக இந்த திகதியிலும் தேர்தலை நடத்த முடியாது என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும், இரண்டாவது முறையாகவும் கால வரையறையின்றி தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமையால், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த பிரதமர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும், இரு வாரங்கள் கடந்துள்ளபோதிலும், பிரதமருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையில் இதுவரை சந்திப்பொன்று இடம்பெறவில்லை.

கடந்த வாரம் இந்த சந்திப்பு இடம்பெறும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டிருந்தபோதிலும், கடந்த வாரமும் சந்திப்பு இடம்பெறவில்லை.

இந்நிலையிலேயே நாளை திங்கட்கிழமை நிச்சயம் பிரதமருடனான சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பேராசிரியர் சோ.சந்திரசேகரம் நினைவுப் பேருரை கொழும்பில்

கொழும்பு, ஏப். 09

மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் நினைவையொட்டிய நினைவுப் பேருரை நிகழ்வு ஒன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத்தின் ஏற்பாட்டிலும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடனும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இந்த நினைவுப் பேருரை நிகழ்வு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஞாபகார்த்த மன்றத்தின் தலைவர் பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில், கொழும்பு தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நினைவுப் பேருரை நடைபெறும்.

நிகழ்வில் தாருஸ்ஸலாமிலுள்ள புருணை பல்கலைக்கழகம், புளோரிடா பல்கலைக்கழகம் என்பவற்றின் ஓய்வு நிலைப் பேராசிரியர் பி.ஏ.ஹூசைன் மியா, "இலங்கையில் உயர் கல்வி ஒரு வரலாற்று நோக்கு" எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார்.

மேலும், மேற்படி ஞாபகர்த்தமன்ற காப்பாளர் பேராசிரியர் மா.கருணாநிதி, நிகழ்வில் பேருரையாளர் பேராசிரியர் பி.ஏ.ஹூசைன்மியா பற்றிய அறிமுக உரையாற்றுவதுடன்.

ஞாபகர்த்த மன்ற செயலாளர் பேராசிரியர் ச.இந்திர குமார் நன்றியுரையும் பகர்வார். (அ-06)

# இளைஞனின் சடலம் மீட்பு!

எல்பிட்டிய எத்கதுர திவித்துரவத்த ஏரியில் உள்ள கட்டுபொல வயலில் இளைஞன் ஒருவர் கொன்று புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திவித்துரவத்தை பகுதியில் வசிக்கும் சாந்தகுமார சரத் குமார (வயது-21) என்பவரின் சடலமே நேற்று முன்தினம் பிற்பகல் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்கள் குழுவுடன் சென்ற இந்த இளைஞன் இரண்டு நாட்களாக காணாமல்போயுள்ளதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் அந்த பகுதியில் நாய் ஒன்று நிலத்தை தோண்டி, சடலத்தை இழுத்த நிலையில், சடலம் அடையாளம் காணப்பட்டது.

உயிரிழந்த இளைஞனின் நண்பனையும் காணவில்லை எனவும், அவரது தொலைபேசி இயங்கவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் பாதி புதைக்கப்பட்ட இடத்தில் அவரது பணப்பை காணப்பட்டதாகவும், அதற்கமைய, சடலம் இரண்டு நாட்களுக்கு முன்னர் காணாமல்போன இளைஞனுடையது என அடையாளம் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## வடக்கு, கிழக்கு...

மாணவர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து 58 ஆயிரம் பவுண்ட்ஸ் நிதியை திரட்டியுள்ளனர்.

குறித்த நிதி தொகையை, இரண்டு தொண்டு நிறுவனங்கள் ஊடாக இலங்கை மக்களுக்கான "சுத்தமான கிணறுகள்" என்ற திட்டத்தின் கீழ் வழங்கவுள்ளதாக இங்கிலாந்தின் சொலிஹூல் கல்லூரி அறிவித்துள்ளது.

குறித்த நிதி, 50 கிலோமீற்றர் மலையேற்றம் உட்பட்ட நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சொலிஹூல் பிரெப் கல்லூரியின் தலைவர் மார்க் பென்னி தலைமையிலான குழுவினால் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சனிக்கிழமையன்று இந்த நிதித்திரட்டும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஒரே நாளில் பெருந்தொகையான நிதி சேகரிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், தூய்மையான நீர் கிணறுகளை உருவாக்கவும், மரக்கறி விதை பொதிகளை வழங்கவும், நிலையான உற்பத்திக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த செயல்திட்டங்களை இங்கிலாந்து மற்றும் அமெரிக்க தொண்டு நிறுவனங்கள் முன்னெடுக்கவுள்ளதாகவும் சொலிஹூல் கல்லூரி அறிவித்துள்ளது.

முன்னரும் பல ஆண்டுகளாக, இலங்கையின் ஏழ்மையான பகுதிகளில் கல்வி, மருத்துவம் மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களுக்கு சொலிஹூல் கல்லூரி தமது நிதிப்பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அரசுடன் இணையும்...

அநுராதபுரம் பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக நிலையான அமைச்சரவையை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் பலமுறை வலியுத்தியுள்ளோம். பொதுஜன பெரமுனவின் 10 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கட்சி மட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சியின் தீர்மானத்துக்கு அமைய ஆதரவு வழங்கு கிறோம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக கடந்த 07 மாத காலத்துக்குள் எடுத்த கடுமையான தீர்மானங்களினால் நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது.

மக்களின் அடிப்படைப் பிரச்னைகளை வைத்து அரசியல் பிரசாரம் செய்த மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசியல் பிரசாரத்திற்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியினர் வன்முறையை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்தார்கள். அவர்களின் அரசியல் பின்னணி கொலை, கடத்தல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியதாக இருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியினரின் ஆரம்பகட்ட செயற்பாடுகளை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவின் கருத்துக்கள் கேட்பதற்கு அருமையாக இருக்கும். ஆனால் அக்கருத்துக்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றது.

பயங்கரவாதச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதால் தான் மக்கள் விடுதலை முன்னணியினர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் வெகுவிரைவில் அரசாங்கத்துடன் இணைவார்கள். அவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலி யுறுத்துவோம். ஸ்திரமான அரசாங்கத்தை தோற்றுவிக்க முழுமையான வழங்குவோம்-என்றார். (அ)

# இப்படியும் நடக்கிறது...!

'நெடுந்தீவுக்கு போயிருக்கிறீர்களா?'' - ஜேர்மனியிலிருந்து வந்திருந்த நண்பர் ஒருவர் கேட்டார்.

'கனகாலத்துக்கு முதல் ஒரு தடவை போயிருக்கிறேன்' என்றேன்.

'என்னுடைய நீண்டகால விருப்பமொன்று நிறைவேறியிருக்கிறது. நிச்சயம் பார்க்க வேண்டிய இடம். இப்போது பலரின் கவனத்தை ஈர்த்திருக்கும் வெடியரசன் கோட்டையும் பார்த்தேன். ஓர் இரவாவது தங்கினால்தான் அந்த ஊரின் வாசத்தை உணரமுடியும், தங்குவதற்கு நல்ல ஹோட்டலும் இருக்கிறது.''

- ஜேர்மனியிலிருந்து வந்திருந்த அந்த நண்பர் மிகுந்த புளகாங்கிதத்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

'எப்படி போனீர்கள், பிரயாணம் எப்படி?' என்று கேட்டேன்.

'நான் எதிர்பார்த்ததைவிட நன்றாகத்தானிருந்தது' - என்று சொன்ன அந்த நண்பர், 'ஆனால், அந்த பிரயாணத்தில் அந்த ஊர் மக்கள் அனுபவிக்கும் கஷ்டம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல' என்றார்.

'வடதாரகை' என்ற படகு சேவையிலிருக்கிறது. ஆனால், உங்களுக்கு ஒரு சமாச்சாரம் தெரியுமா, அந்தப் படகில் பிரயாணத்துக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை!' - இதைச் சொன்ன நண்பர், இது தொடர்பில் தான் அறிந்துகொண்ட இது தொடர்பான வியாக்கியானத்தையும் சொன்னார்.

மற்றையை ஊர்களில் வசிப்பவர்களைப்போல, அந்த ஊரில் வசிக்கும் மக்கள் தாம் நினைத்த நேரத்தில் தம்முடைய தேவைக்காக அங்கிருந்து புறப்பட்டு, வெளியூர்களுக்கு செல்ல வீதிப் போக்குவரத்து இல்லை. இந்த நிலையில், இதற்கான ஓர் அடையாள நிவாரணமாக, வீதி போக்குவரத்துக்கு பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபை, தனக்கு சொந்தமான அந்த படகுக்கு கட்டணம் அறவிடுவதில்லை.'

- தான் அறிந்துகொண்ட இந்த தகவலைச் சொன்ன நண்பர், இந்த பயணத்தில் பேணப்படும் முறைகேடுகளையும், அவற்றால் அந்த மக்கள் அனுபவிக்கும் அவலத்தையும் சொன்னபோது, பேசாமல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

புங்குடுதீவின் குறிகாட்டுவான்துறையிலிருந்து நெடுந்தீவுக்கான படகுச் சேவை நடைபெறுகிறது. இங்கிருந்துதான் நயினாதீவு படகுச் சேவையும் நடைபெறுகிறது. இந்த இரண்டு இடங்களுக்கும் செல்லும் பயணிகளுக்கான தங்குமிடம் தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இத்துறைமுகம் இருக்கிறது.

நெடுந்தீவு செல்லும் பயணிகளுடன் நண்பரும் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வரிசையான ஓர் ஒழுங்கில் அமர்ந்திருந்தார்.

வடதாரகை புறப்பட ஆயத்தமானது. பயணிகள் காத்திருந்த வாசல் திறக்கப்படவில்லை. கடற்படை வீரர் ஒருவர் அங்கு நின்றுகொண்டிருந்தார். ஆனால் அதேவேளை, திடீரென்று ஏராளமானவர்கள் படகில் ஏறுகிறார்கள். அதன்பின்னர்தான், காத்திருந்த பயணிகளுக்கான வாசல் திறக்கப்படுகிறது.

அந்தப் படகினுள் ஏறியவுடன் அதே தட்டில், சில ஆசனங்கள் இருக்கின்றன. மற்றையவை ஏற்கனவே ஏறியவர்களால் 'ஆக்கிரமிக்கப்பட்டு'விட்டன. அவை கூடுதல் வசதியானவை. ஏனையவை, படகின் முன்புறமும் பின்புறமும் படகின் கீழ் தட்டில் இருக்கின்றன. அவை மேல்தட்டில் இருப்பதுபோன்ற வசதிகள் இல்லாதவை.

பல படிகள் இறங்கிச் செல்ல வேண்டும். எல்லோருக்கும் இது அவ்வளவு எளிதானதல்ல. படகில் ஏறுவதற்கும், முதலில் பல படிகள் மேலே ஏறவேண்டும். பலருக்கு இதில் உதவி தேவைப்படும்.

வயதானவர்கள், நோயாளிகள், குழந்தைகளுடன் வருபவர்கள், பொருட் சுமைகளுடன் வருபவர்கள், பெண்கள் என இவர்கள் எல்லோருமே இப்படகில் பயணம் செய்பவர்கள். ஆனால், படகில் ஏற ஒழுங்காக காத்திருக்கும் இவர்கள் எவருக்கும் அந்த மேல் தட்டில் பெரும்பாலும் ஒருபோதும் ஆசனங்கள் கிடைத்துவிடுவதில்லை.

நண்பர் சொன்னவை இவை.

ஆக, என்ன நடக்கிறது?

நெடுந்தீவில் பணியாற்ற தினசரி பயணம் செய்யும் அரசாங்க உத்தியோகத்தர்களும், நெடுந்தீவுக்குச் செல்லும் சிங்களவர்களான உல்லாசப் பயணிகளும் கடற்படையினரின் அனுசரணையுடன் முன்னுரிமையைப் பெறுகிறார்கள். வசதியான இருக்கையுடன், இலவசமான பயணம் இவர்களுக்கு முன்னுரிமையாகிறது. இவர்கள் ஊர் மக்களுடன், ஒதுக்கப்பட்ட அத் தங்குமிடத்தில் காத்திருப்பதில்லை. படகில் இடமில்லை என்று, கடற்படையினரால் பின்னர் படகில் ஏறவிடாது தடுக்கப்படும் ஊர்மக்கள், முப்பதாயிரம் ரூபா வாடகையில் அமர்த்தப்படும் தனியார் படகுகளில், அத் தொகையைப் பங்கிட்டு பயணம் செய்வது அவர்களின் நிர்ப்பந்தம். குறிகாட்டுவானிலிருந்து காலை எட்டு மணிக்குப் பின்னரான 'வடதாரகை'யின் அடுத்த நெடுந்தீவு சேவை, மாலை நான்கு மணிக்கே.

உல்லாசப் பயணிகளுக்கும், அரச தங்குமிடத்துடன் நெடுந்தீவில் பணியாற்ற விசேட கொடுப்பனவையும் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இந்த விசேட சலுகை.

வெடியரசன் கோட்டையை பௌத்தமயமாக்கப்போவதாக அங்கே போராட்டம் நடத்தப் போனவர்கள் முப்பதாயிரம் கொடுத்துப் போனார்களோ, அல்லது வடதாரகையில் கடற்படையின் அனுசரிப்புடன் போனார்களோ தெரியவில்லை.

வெடியரசன் கோட்டை சமாச்சரத்தை விட இது மிகவும் கொடியது.!

**- ஊர்க்குருவி.**

# வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் சான்றோர் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 09

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வாவின் நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு எஸ். மகேந்திரன் தலைமையில் வலி.மேற்கு பிரதேச சபையில் (வழக்கம்பரை அம்மன் கோயில் அருகாமையில்) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபர்கள், கலைஞர்கள், ஊடக வியலாளர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கான ஒழுங்குகளை பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், பிரதித் தலைவர் அருள்ராஜ் மற்றும் திருமதி ஆனந்தி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரசுக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்கமுடியாத நிலைமை

## சுட்டிக்காட்டுகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஏப். 09

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஊடாக மக்களின் ஜனநாயக உரிமை மீறப்படும் அதேநேரம் அரசுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலை ஏற்படும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்களை கடும் அடக்கு முறைக்கு தள்ளிவிடுவதற்கு ஜனாதிபதிக்கு இச்சட்ட மூலம் அதிகாரம் வழங்கும் என்பதனால் அதனை தோற்கடிக்கவேண்டும் என அதன் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



இச்சட்டமூலத்தினால் போராட்டத்தில் ஈடுபடும் சாதாரண விவசாயி முதல் ஊடகவியலாளர்கள் வரை கடும் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சமூக வலைத்தளங்களில் அரசாங்கத்துக்கு விரோதமான கருத்துக்களை தெரிவித்தால் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் எச்சரித்தார்.

ஆகவே ஜனநாயக உரிமைக்கு விரோதமாக அமைந்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிச்சியமாக தோற்கடித்தே ஆகவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# சுற்றுலாத்துறை மூலம் மார்ச் மாதத்தில் அரசுக்கு 200 மில்லியன் டொலர் வருவாய்

கொழும்பு, ஏப். 09

சுற்றுலாத்துறையின் மூலம் மார்ச் மாதத்தில் 200 மில்லியன் டொலர் வருவாய் கிடைத்துள்ள நிலையில் இந்த காலாண்டில் மட்டும் 500 மில்லியன் டொலர் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 198.1 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்றும் இது முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில்,22 சதவீத அதிகரிப்பு என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆண்டின் முதல் மூன்று மாதங்களில், தேசியப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், வருவாய் 9.8 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பொருளாதாரத்தில் நிலவும் சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கையின் சுற்றுலாத் துறையானது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நிலையான முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. (அ)

# மகிந்த - சீன தூதுவர் திடீரெனச் சந்திப்பு

கொழும்பு, ஏப். 09

சீனா மற்றும் இலங்கைக் கிடையிலான பாரம்பரிய நட்பை வலுப்படுத்தல் மற்றும் பல்வேறு துறைசார் பரிமாற்றங்கள் குறித்து முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென் ஹொங் ஆகியோருக் கிடையிலான சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள சித்தரைப் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் நேற்று சனிக்கிழமை முன்னாள் பிரதமரை சீனத் தூதுவர் சந்தித்திருந்தார்.

இந்த சந்திப்பின்போதே இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் பயங்கரவாதச் செயற்பாடுகள், போருக்குப் பின்னரான மறுசீரமைப்பு, கோவிட்-19 தொற்று நோய்க்கு எதிரான போராட்டம் போன்ற அனைத்து முக்கியமான தருணங்களிலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கவும் இலங்கைக்கு மிகவும் மதிப்புமிக்க உதவிகளைத் தொடர்ந்து வழங்கியதற்காக சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் முன்னாள் பிரதமர் மகிந்த இதன்போது நன்றி தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய நட்பை ஆழமாக்குதல், பல்வேறு துறைகளில் பரிமாற்றங்கள், ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பொதுவான நலன்கள் தொடர்பான மற்ற விஷயங்கள் குறித்து பரந்தளவில் கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்றதாக சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பட்டாசுகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 09

நாட்டில் கடந்த டிசெம்பர் பண்டிகை காலத்துடன் ஒப்பிடுகையில், இந்த புத்தாண்டு காலத்தில் பட்டாசுகளின் விலை சுமார் 40 வீதம் அதிகரித்துள்ளது.

டிசெம்பருடன் ஒப்பிடுகையில் சந்தையில் ஏனைய உணவுப் பொருட்கள், ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி பலமாக காணப்படுகின்றபோதிலும் அதற்கான பலன் கிடைக்கவில்லை என நுகர்வோர் கூறினர். (அ)

# நாடு மீண்டெழுவதை குழப்ப சிலர் முயற்சி!

## சஞ்சீவ எதிரிமான்ன எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 09

ஒரு நாடாக நாம் நெருக்கடிகளிலிருந்து விடுபட்டு முன்னேறி வருகின்றோம். எனினும் அதனைக் குழப்புவதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் சுற்றுலாத் துறையானது ஓரளவு சிறந்த மட்டத்தில் உள்ளது.

எரிசக்தி துறை உள்ளிட்ட வெளிநாட்டு முதலீடு தொடர்பான துறைகளில் புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நாட்டினுள் தற்போது ஏற்பட்டு வரும் சில பொருளாதார சலுகைகளில் அதிக கவனத்தை செலுத்த வேண்டாம் என்று பொதுமக்களை நம்ப வைப்பதற்கான முயற்சிகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக நாடு எவ்வாறான நிலைமையில் இருந்தது என்பதை சகலரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அனுபவித்த பொருளாதாரக் கஷ்டங்களுடன் ஒப்பிடும் போது நாட்டில் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் பொருளாதார நிவாரணம் பற்றி எந்த சந்தேகமும் இல்லை.

இதேவேளை, உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் தற்போது அதிகம் பேசப்படுகின்றது.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமே கொண்டு வரப்படவுள்ளது.

இன்னும் அது சட்டமாக்கப் படவில்லை. அதனை சட்டமாக்கிக்கொள்ளவேண்டுமெனில் பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்று வாக்கெடுப்பு இடம்பெற்று வாக்கெடுப்பில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அதன் பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பமிடவேண்டும். இதுவே முறைமையாகக் காணப்படுகின்றது.

இந்த சட்டமூலத்தில் குடிமக்கள் உரிமை, மனித உரிமை என்பவை சவாலுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாகவே தற்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நவீன அரசியலைப் பின் தொடரும் ஒவ்வொரு நாடும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு சில சட்டங்களை இயற்றியுள்ளன.

உலகில் எந்த நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டாலும் ஒவ்வொரு சட்டமும் மனித உரிமைகளுடன் முரண்படுவதும், ஏதோ ஒரு வகையில் விமர்சிக்கப்படுவதும் இங்கு முக்கியமாகக் காணக்கூடியதாக உள்ளது- என்றார். (அ-கே)

# பசறையில் குளவிக்கொட்டு; 11 தொழிலாளர்கள் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 09

பசறை, கோணக்கலை தோட்ட லோவர் டிவிசனைச் சேர்ந்த 10 பெண் தொழிலாளர்கள் உட்பட 11 பேர் பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த வேளையில் குளவி கூடொன்று கலைந்து தொழிலாளர்களைக் குளவிகள் சராசரியாக தாக்கியுள்ளன.

குளவி கொட்டுக்கு இலக்கான தொழிலாளர்களைக் காப்பாற்றச் சென்ற இளைஞர் ஒருவரும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இவர்கள் தற்போது பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# பண்டிகை காலத்தில் விசேட நடவடிக்கை

கொழும்பு, ஏப்ரல் 09

பண்டிகைக் காலத்தில் விபத்துக்களை தடுப்பதற்கு பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

புத்தாண்டு காலத்தில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 170,000 மதுப்பாவனையை பரிசோதிக்கும் கருவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. தற்போதைய நிலையில் 70,000க்கும் மேற்பட்ட கருவிகள் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள கருவிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் விபத்துக்களை தடுப்பதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

வாகனச் சாரதிகள் மதுப்பாவனையுடன் வாகனங்களை செலுத்துவதன் காரணமாகவே அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# அமைச்சுப் பதவி யாசகம் கேட்போர் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இல்லை!

## ஹெக்டர் அப்புஹாமி எம்.பி

கொழும்பு, ஏப்ரல் 09

அமைச்சுப் பதவி யாசகம் கேட்கும் தரப்பினர் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பது தொடர்பில் அதிகம் பேசப்படுகின்றது.

நாட்டின் ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதியாக இருந்தாலும்கூட பொதுஜன பெரமுனவின் ஆரசாங்கமே ஆட்சியில் உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியை அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு கூறுவதற்கான காரணம் இந்நாட்டை கொண்டு செல்வதற்கு பொது ஜன பெரமுனவில் இருப்பவர்களில் எவருக்கும் திறமை இல்லை என்பதாகவே அர்த்தப்படுகின்றது.

அவர்களிடம் ஏதேனும் குறைபாடுகள் இருக்கலாம் அல்லது அவர்கள் ஆக்கபூர்வ திறனற்றவர்களாக இருக்கலாம்.

அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதால் எவ்விதப் பிரயோசனமும் இல்லை என்பதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்களை அரசாங்கத்தில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றனர் என்றே நாம் கருதுகின்றோம்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த எவரும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு தயாரில்லை.

அமைச்சுப் பதவிக்கு சோரம் போன தரப்பினர் இருக்கின்றனர். அவர்கள் அவ்வாறே செயற்படுவர்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த யாருக்கும் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்குமாயின் அவ்வாறானவர்கள் தயவுசெய்து வெளியேறி சென்று ஐக்கிய தேசிய கட்சியினது அலுவலகத்துக்கு முன்பாக சாக்குப்பையை போட்டு அமர்ந்துகொள்ளுமாறு நாம் கூறுகின்றோம்.

இதன்போது கட்சி காரியாலயத்துக்கு வரும் ஜனாதிபதி, அமைச்சுப் பதவியை யாசகம் கேட்கும் யாசகன் ஒருவர் வாசலில் அமர்ந்து இருக்கின்றார், எனவே அவருக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என்று கரிசனை கொள்வார்.

மக்கள் ஆணை எப்போது கிடைக்கின்றோ அன்று நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்று அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம் என்றே தற்போதைய அரசாங்கத்துக்கு நாம் கூற விரும்புகின்றோம்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டங்கள், திறமைசாலிகள் எம்மிடம் உள்ளனர்.

நாட்டில் புதிய மாற்றமொன்று ஏற்படவேண்டும் என்று இந்நாட்டில் இளைஞர்கள், யுவதிகள் வீதிக்கு இறங்கி கூறினர்.

இளைஞர், யுவதிகள் எதிர்பார்த்த மாற்றம் எம்மிடம் மட்டுமே இருக்கின்றது - என்றார். (அ-கே)

# சைவச் சிறுவர் இல்லத்தில் 2 சிறுவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 09

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்துக்கு சேதம் விளைவித்தனர் என நிர்வாகத்தினரால் பொலிஸாரிடம் பெயர் குறிப்பிட்ட இரண்டு சிறுவர்களை அன்றைய தினம் முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று சனிக்கிழமை வரை காணாமல் இரு சிறுவர்கள் தொடர்பில் எந்தவிதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டது.

கடந்த 27ஆம் திகதி சிறுவர் இல்ல விடுதி முகாமையாளர் சிறுவர் நீதிமன்றால் பணி இடைநிறுத்தப்பட்டார். இதனையடுத்து சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள், இல்ல நிர்வாக கட்டடங்களுக்குச் சேதம் விளைவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சிறுவர்கள் என நான்கு பேரின் பெயர்களைக் குறிப்பிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அவ்வாறு பெயர் குறிப்பிட்ட நான்கு சிறுவர்களில் இருவரே கடந்த 27ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளனர்.

அதேவேளை, சிறுவர் இல்லத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 12 சிறுவர்கள், சிறுவர் நீதிமன்றத்தால் சான்று பெற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் மாசு விவகாரம் சட்ட விவகாரத்தில் இழுபறி நிலை!

கொழும்பு, ஏப். 09

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் அனர்த்தத்துக்கு உள்ளானதால் நாட்டின் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில், எந்த அடிப்படையில் சிங்கப்பூரில் வழக்கு தொடர முடியும் என சமுத்திர மற்றும் கடற்படைச் சட்டம் தொடர்பான சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த கப்பல் நிறுவனத்துக்கு எதிராக வழக்கு தொடர இன்னும் 45 நாட்கள் கால அவகாசமே உள்ளமை சுற்றுச்சூழல் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் தெரியவந்தது.

இந்த அனர்த்தம் தொடர்பில் 6.2 பில்லியன் டொலர் இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கான நிபுணர் குழுவின் அறிக்கையை சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதற்கமைய, வழக்கு தொடரும் நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக இடம்பெறவேண்டும் என சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சபையின் தலைவர், சட்டத்தரணி அசேல ருக்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், கப்பல் அனர்த்தத்தினால் நாட்டின் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில், மதிப்பீடுகளை மேற்கொண்ட குழு, கப்பலை அண்மித்த பகுதிக்கு செல்லவில்லை என சமுத்திர மற்றும் கடற்படைச் சட்டங்கள் தொடர்பான சட்டத்தரணி கலாநிதி டான் மாலிக்க குணசேகர மற்றும் சுற்றாடல் கேந்திர நிலையத்தின் தலைவர் சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், இலங்கையில் வழக்கு தொடர்ந்தால், அதிக நன்மையுள்ளது. இலங்கையின் சட்டம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பில் இந்த வழக்கை தொடரவும் விசாரணைக்கு உள்ளாக்கவும் அனைத்து அதிகாரங்களும் உள்ளன.

இவ்வாறான நிலையில், சிங்கப்பூரில் வழக்கு தொடர்வதன் அடிப்படை என்னவென்பது தெரியவில்லை. எனவே, சிங்கப்பூரில் வழக்கு தொடர்வதில் கிடைக்கும் நன்மை என்பதனை சம்பந்தப்பட்ட தரப்பினர் கூறவேண்டும்.

குறித்த வழக்குடன் தொடர்புடைய சாட்சிகள் இலங்கையில் உள்ளதுடன், சாட்சியாளர்களும் உள்ளனர். எனவே சாட்சியாளர்களுடன் சாட்சிகளைச் சிங்கப்பூருக்கு கொண்டு செல்லும்போது அதிக செலவீனம் ஏற்படும். தற்போதைய நிலையில், சிங்கப்பூர் சட்டத் தரணிகளுக்கு 5 மில்லியன் டொலர் செலுத்த வேண்டும். அத்துடன், ஏனைய செலவுகளும் உள்ளன.

எனவே இந்த அனைத்து செலவுகளையும் நோக்கும்போது, கிடைக்கவேண்டிய இழப்பீடு கிடைக்காவிட்டால், இந்தச் செலவு அனைத்தும் வீணாகும் என சமுத்திர மற்றும் கடற்படைச் சட்டம் தொடர்பான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# தமிழ் - சிங்கள மீனவர் மோதல்; பொலிஸ் விரிவான விசாரணை

கொழும்பு, ஏப். 09

திருகோணமலையில் தமிழ் - சிங்கள கடற்தொழிலாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர். 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது-என்றார்.

திருகோணமலைபொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட திருக்கடலூர் மற்றும் அதனை அண்டிய விஜிதபுர ஆகிய இரு கிராமங்களை சேர்ந்த தமிழ், சிங்கள கடற்தொழிலாளர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 6 பேரும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ் கடற்தொழிலாளர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். அயல் கிராமத்தைச் சேர்ந்த சிங்கள கடற்தொழிலாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுருக்கு வலையைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கூறியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் இரு தரப்புக்கிடையிலும் வாய்த்தர்க்கம் முற்றி, கரையோரத்தில் மோதலாக மாறியது.

இரண்டு தரப்பினரும் கற்கள், கொட்டான்களால் தாக்கிக் கொண்டுள்ளனர். இரண்டு தரப்பிலும் தலா 3 பேர் வீதம் 6 பேர் காயமடைந்ததுடன் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ரணில் ஜனாதிபதியாகாவிட்டிருந்தால் மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பர்!

## கூறுகின்றார் அமைச்சர் பந்துல



கொழும்பு, ஏப். 09

**ரணில் விக்ரமசிங்கவை நாம் ஜனாதிபதியாக தெரிவு செய்யாவிட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பார்கள் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர் மேலும் கூறுகையில்-

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகியவுடன் அன்று பிரதமர் பதவியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானார்.

அவர் இன்று துணிச்சலுடன் சவால்களை எதிர்கொண்டு வெற்றிநடை போடுகின்றார். அவரை அன்று நாம் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யாவிட்டிருந்தால் நாட்டு மக்கள் பட்டினியால் சாவடைந்திருப்பார்கள்.

ரணிலின் ஆட்சியால் நாடு முன்னோக்கிய பாதையில் செல்கின்றது. குறுகிய காலத்தில் நாம் மீண்டெழுந்து வருகின்றோம். சர்வதேசம் எமது நாட்டுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. இலங்கை தொடர்ந்தும் சர்வதேசத்தை நம்பியிருக்கக் கூடாது.

சர்வதேசத்திடம் வாங்கிய கடன்களை மீளச் செலுத்திவிட்டு சொந்தக் காலில் இலங்கை பயணிக்க வேண்டும் என்பதே ரணிலின் விருப்பம். அவருக்கு அனைவரும் தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (அ)

# கட்டுநாயக்காவிலிருந்து நேற்று திருப்பி அனுப்பப்பட்ட விமானம்

கொழும்பு, ஏப். 09

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த விமானமொன்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குவைத்தில் இருந்து வந்த நிலையில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த விமானமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று காலை பெய்த கன மழை பார்வைத்திறனில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன், சில விமானங்களின் பயணங்களும் தாமதமாகியிருந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

குவைத்தில் இருந்து வந்த சிறிலங்கன் எயார்லைன்ஸ் யு.எல் 230 டி விமானம் நேற்றுக் காலை மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டதாக பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் தெரிவித்தது. (அ)

# பேசாலை உணவகத்தில் உணவுக்குள் பூரான்!



மன்னார், ஏப். 09

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பேசாலை கிராமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் காலை கொள்வனவு செய்யப்பட்ட உணவில் பூரான் காணப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் சுகாதாரத்துறை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விரைந்து செயல்பட்ட மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக உணவகத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதனையடுத்து உணவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டதுடன் கடை உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

மேலும், குறித்த சமையலறையை உடனடியாக திருத்தி அமைப்பதற்குரிய வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் அரசியல்வாதியின் மனைவி மீது கத்திக்குத்து!

கொழும்பு, ஏப். 09

பேருவளை உள்ளூராட்சிச் சபையின் முன்னாள் உறுப்பினர் சமித கவிரத்னவின் மனைவி கத்திக்குத்துக் இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. பேருவளை ஹெட்டமுல்ல பிரதேசத்தில் இவர் நடத்தி வரும் கடையில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட 5 அங்குல நீளமான கத்தியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேருவளை ஹெட்டமுல்ல பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான பெண் களுத்துறை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தனிப்பட்ட தகராறே சம்பவத்திற்கு காரணம் என பேருவளை பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ)

# நாணய நிதியக் கடனைப் பெற்ற அரசு கல்வி குறித்து அக்கறை காட்டவில்லை

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 09

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறும் நடவடிக்கையில் அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும், ஆனால் பல வருடங்களாக வீழ்ச்சியடைந்து வரும் கல்வி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்தவில்லை எனவும் ஆசிரியர் சங்கம் ஒன்று குற்றம் சுமத்தியுள்ளது.

அரச சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யாமையால் பாடசாலை அமைப்பில் 30,000ற்கும் அதிகமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் 4ஆம் திகதி வழங்கப்பட்டு 17ஆம் திகதி பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டாலும், மாணவர்களுக்குப் பாடப் புத்தகம் மற்றும் சீருடை வழங்கும் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லலை என அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த ஆண்டு, தேவையான அளவு பாடப்புத்தகங்கள் அச்சிடப்படவில்லை. பயன்படுத்திய பாடப்புத்தகங்கள் மீண்டும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சீருடைக்குத் தேவையான துணியில் 75 வீத சீன அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தோடு சீருடைக்கான முழுத் தேவையும் இதன் ஊடாக பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன், மக்கள் கடும் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து வருகின்ற போதிலும் பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு உணவுத் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை .

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் போசாக்கு உணவுத் திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாதது ஏற்கனவே கடுமையான பிரச்னையாக மாறியுள்ளது.

கடந்த மார்ச் 31ஆம் திகதி ஆசிரியர் அதிபர் சங்கத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது கல்வி அமைச்சரிடம் இவ்விடயங்களை வலியுறுத்தினோம்.

ஏப்ரல் 17ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடப் புத்தகங்களை வழங்குதல், சீருடை வழங்கவும், போசாக்கு உணவுத் திட்டத்தை முறைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டுமென அதிகாரிகளை கோரினோம். ஆயினும் அரசு இவற்றில் அக்கறை கொள்ளவில்லை - என்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
09.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதி?

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று மூன்று வருடங்களை கடந்துவிட்டது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி மேற்படி தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதல் இடம்பெற்று சில தினங்களின் பின்னர் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ், தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தது. இவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறுவதற்கான அறிகுறிகள் உண்டென்னும் முன்னெச்சரிக்கையை இந்திய உளவுத்துறை வழங்கியதாக அப்போது செய்திகள் வெளியாயிருந்தன. அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் முன் கூட்டிய தகவல்கள் இருந்தன - ஆனால் சிறிலங்கா அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் பின்னடைந்திருந்ததாக குறிப்பிட்டிருந்தார்.

280இற்கு மேற்பட்டவர்களின் கொலைக்கு காரணமான குறித்த தாக்குதல் தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இப்போதும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு தொடர்பிருப்பதாக நீதிவான் நீதிமன்றம் சுட்டிக்காட்டி யது. இந்த ஆண்டு இந்த விசாரணையை முன்னெடுத்த இலங்கை உச்ச நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேன பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டது.

மைத்திரிபால சிறிசேனவின் மீதான பிரதான குற்றச்சாட்டு பாதுகாப்பு விவகாரங்களுக்கு பொறுப்பானவரென்னும் வகையில் உரிய நவடிக்கை எடுக்கத் தவறியிருக்கின்றார் என்பதுடன் முன்கூட்டிய தகவல்கள் இருந்தும் அதனை மறைத்து தன்னிச்சையாக செயல்பட்டிருக்கின்றார் என்பது மட்டுமே. ஆனால் ஏன் அவ்வாறு செயல்பட்டார் - என்பதற்கான பதில்கள் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நாட்டில் இடம்பெற அனுமதிக்கப் போவதில்லையென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறுவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கே இதுவரையில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் தோல்விடைந்திருக்கின்றது. இந்த விசாரணையை முன்னெடுப்பது இலகுவான விடயம் ஏனெனில் யுத்தத்தை வழிநடத்தியவர்கள் உத்தரவிட்டவர்கள் அனைவருமே கொழும்பில்தான் இருக்கின்றனர். ஆதாரங்களை திரட்டுவது மற்றும் சந்தேகநபர்களை விசாரணை செய்வது மிகவும் இலகுவானது. அனைத்தையும் அரசாங்கம் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் உள்ளடக்கி விடயங்களை முன்னெடுக்க முடியும். ஆனால் இன்றுவரையில் குறித்த விசாரணையில் சிறிதளவு முன்னேற்றம் கூட இடம்பெறவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால் ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும். ஈஸ்டர் தாக்குதலில் சம்மந்தப்பட்டிருப்பவர்கள் இலங்கை அரசாங்கத்தினால் அணுக முடியாத தூரத்தில் இருக்கும் ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பு. அமெரிக்காவிற்கே மிகவும் சவாலான அமைப்பு. இந்த நிலையில் இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை விசாரணைக்குள்ளாக்குவது என்பது முடியாத காரியம். ஆனால் இவ்வாறானதொரு தாக்குதல் தொடர்பில் முன் கூட்டிய தகவல்கள் இருந்தும் ஏன் இதனை அப்போதைய நிர்வாகம் கண்டும் காணாமல் விட்டிருந்தது. அது உண்மையா? அவ்வாறாயின் கண்டும் காணாமல் விட்டதால் நன்மையடைந்தவர்கள் யார்? எவ்வாறான நன்மைகள்? இந்தக் கோணத்தில் விடயங்களை ஆராய்ந்தால் சில புதிர்களை அவிழ்க்க முடியும். ஆனால் அவ்வாறான முயற்சிகளும் இன்றுவரையில் சரியாக இடம்பெற்றதாகவும் தெரியவில்லை.

மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக தனது சொந்த புத்திலியிருந்து விடயங்களை அணுகியிருப்பாரா என்பது சந்தேகமே! ஆனால் ஒரு விடயம் உண்மை. ஈஸ்டர் தாக்குதல் ரணில் - மைத்திரி அரசாங்கத்தை முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவை பின்னுக்கு தள்ளியது, கோட்டாபய ராஜபக்ஷவின் செல்வாக்கை இரட்டிப்பாக்கியது. அவரது வெற்றியை மிகவும் இலகுவாக்கியது. எண்ணிக்கையில் சிறுபான்மையினரின் ஆதரவில்லாமல் வெற்றிபெறுவதற்கான சூழலை உருவாக்கியது. ஈஸ்டர் தாக்குதலால் நன்மையடைந்த நபரென்றால் - அது கோட்டாபய ராஜபக்ஷ மட்டும்தான் - வேண்டுமானால் மகிந்த குடும்பத்தையும் சொல்லலாம். அதேபோன்று ராஜபக்ஷ குடும்பத்தை இலக்கு வைத்து செயற்பட்ட 'அரகலய' கிளர்ச்சியால் நன்மையடைந்த ஒருவரென்றால் அது ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான். ஈஸ்டர் தாக்குதலால் ஆட்சியை இலகுவாக கைப்பற்றிய கோட்டாபய, அரகலயவினால் விரைவாக கதிரையை இழந்துபோனார்.

# பந்துலவுடன் படம் பார்க்கச் சென்ற மகிந்த



கொழும்பு, ஏப். 09

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தயாரிப்பில் 'சகோ' என்ற திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்படம் நேற்றுமுன்தினம் வன் கோல்பேஸ் திரையரங்கில் விசேட காட்சியாக காண்பிக்கப்பட்டது.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன உட்பட பல பிரமுகர்கள் அமைச்சருடன் திரைப்படத்தை பார்க்கச் சென்றுள்ளனர்.(அ)

# பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்து ஆடு கடத்த முயன்றவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஏப். 09

சாவகச்சேரியில் பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்து ஆடு கடத்த முயன்றவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் யாழ். மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் நூறுக்கும் மேற்பட்ட ஆடுகளை கடத்திச் செல்ல முயன்றவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கடமையில் இருந்த பொலிஸாருக்கு லஞ்சம் கொடுத்து தப்பிக்க முற்பட்டார். ஆயினும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சார்ஜன்ட் தர அதிகாரி 50,000 ரூபாய் லஞ்சத்தை வாங்க மறுத்ததோடு நூறுக்கும் மேற்பட்ட ஆடுகளையும் சந்தேக நபரையும் கைது செய்தார். லொறியுடன் கைது செய்யப்பட்டவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லை எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நீண்ட காலமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு ஆடு,மாடுகள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுளா செனரத்தின் வழிகாட்டுதலில் தொடர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மோசடி ஆவணம் தயாரித்த அரச உத்தியோகத்தர் கைது!

கொழும்பு, ஏப். 09

குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களத்தில் கடமையாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திணைக்களத்தின் தரவு அமைப்பில் தவறான தகவல்களை உள்ளிட்டு தவறான ஆவணங்களைத் தயாரித்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

47 வயதான பெண் குடிவரவுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாவார். அவர் சீதுவ அமுனா வீதியில் வசிப்பவர்.

வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரிக்கும் போது இந்த பொய்யான ஆவணங்களை அவர் பயன்படுத்தினார் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் லஞ்சம் பெற்றுக்கொண்டு இந்தக் குற்றத்தில் ஈடுபட்டாரா என்பது குறித்து விசாரணைகள் தொடர்வதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(அ)

# மருந்துகளின் தரம், பாதுகாப்பு செயல்திறன் குறித்து சந்தேகம்?


கொழும்பு, ஏப். 09

இந்திய கடன் சலுகையின் கீழ் கொள்வனவு செய்யப்படும் மருந்துகளின் தரம், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாகக் கூறி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந் தது.

இரண்டு இந்திய தனியார் நிறுவனங்களிடமிருந்து மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு, அமைச்சர்கள், அமைச்சரவை, சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆகியன எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -75

# ஈழத்து சஞ்சிகைகள் பற்றியது...

**கணபதி சர்வானந்தா**

இதனை ஒரு துயரப் பகிர்வாகத்தான் பகிரவிரும்புகிறேன்.கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி சகல தரப்பைப் பாதித்திருப்பதைப் போல வெளியீட்டுத் துறையையும் பாதித்திருக்கிறது. சஞ்சிகைகளைப் பொறுத்தவரை சில வெளியீடுகள் அவ்வப் போது வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. பல வெளியீடுகள் அறவே நின்றுவிட்டன. ஜீவநதி வெளியீட்டகம் தொடர்ந்து நூல்களையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகிறது. குறித்த காலப்பகுதியில் அவை வாசகர்களைச் சென்றடைகின்றன.

இவ்வாறு வெளியீடுகளின் தொகை நின்றுவிட்டால் அதனால் ஏற்படப்போகும் இடைவெளியையும் சமூகப் பின்னடைவுகளையும் நாம் எப்படிச் சரி செய்யப் போகிறோம் என்பது கேள்விக்குரிய விடயம். எல்லோரும் பொதுவாகச் சொல்வதைப்போல இலத்திரனியல் துறை அந் நெருக்கடியை முழுமையாக ஈடு செய்யும் என்று சொல்வதற்கில்லை. "இணையந்தான் இருக்கிறதே!" என்பது அதற்குரிய சரியான பதிலுமில்லை. ஏனெனில் எல்லோரிடமும் அதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கும் என்று சொல்ல முடியாது. இலங்கை போன்ற வளர்ச்சியடையாத நாடுகளில் எப்பவும் வறுமைக் கோட்டுக்குள் கீழ் இருக்கின்ற மக்கள் இருந்து கொண்டே இருப்பர். எனவே புதிய தொழில் நுட்பத்தால் பயனில்லை.

யுத்தத்துக்குப் பின்னால் ஏற்பட்ட சமூக நெருக்கடிளால் வெளியீட்டுத்துறை பாதிக்கப்பட்டிருந்தாலும் அதனைச் சீர் செய்து பழைய நிலைமைக்குக் கொண்டு வரப் பலர் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். ஈழத்து இலக்கியங்களையும் அவை தொடர்பான வெளியீடுகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அதற்கானதொரு சந்தைப்படுத்தலையும் வடிவமைத்துச் செயற்படத் தொடங்கியது "எங்கட புத்தகங்கள்" நிறுவனம். ஈழத்து வெளியீடுகளில் பெரும்பாலானவற்றை ஒரு இடத்தில் பெற்றுக் கொள்ள அந் நிறுவனம் வழிவகுத்தது. அதற்காகப் பல நடவடிக்கைகளை அவர்கள் எடுத்ததனால் பல புத்தகக் கண்காட்சிகளை அவர்கள் நடத்தினர். அவர்களின் செயற்பாடானது எமது எழுத்தாளர்களுக்கு இடையே ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

அச்சமயத்திலேதான் கொரோனாத் தொற்றும் அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகளும் ஏற்பட்டன. அதனால் இறக்குமதிகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டன. பொருட்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டன. பொதுவாக எல்லாத் துறைகளும் ஒரு வித ஸ்தம்பித நிலைக்குள்ளானது. அவை போன்று அச்சகத் துறையும் பாதிப்புக்குள்ளானது. அச்சகத்துறையின் பாதிப்பால் வெளியீட்டுத் துறையும் பாதிக்கப்பட்டது. அச்சகச் செலவு ஏறத்தாழ நாலு மடங்காயிற்று. அதனால் பல வெளியீடுகள் நிறுத்தப்பட்டன. பல முக்கியமான வெளியீடுகளை தொகை குறைத்து வெளிக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

அச்சிடத் தயாரான நிலையில் இருந்த பல எழுத்தாளர்களின் நூல்கள் வெளிவராது போயிற்று. இன்னும் பலர் எழுதி வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாது அங்கலாய்த்த வண்ணம் இருக்கின்றனர்.சஞ்சிகைகளும் அப்படியே.வெளியிடுவதா, இல்லையா என்று தீர்மானிக்க முடியாதிருப்பதகச் சொல்கின்றனர்.ஏனெனில் சஞ்சிகை வெளிவர அவர்களுக்கு விளம்பரம் கொடுத்துதவுபவர்களே காரணமாயிருந்தனர். அவர்களில் பலர் முன்புபோல் ஆர்வமற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

"வாசிப்போர் தொகை குறைந்து கொண்டு போகின்றது, அதனால் வெளியீட்டுத்துறையில் லாபம் இல்லை." என்ற குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வெளியீடுகளைச் செய்யப் பின்னின்றவர்களை மேலும் பயமுறுத்துவதாகச் சூழ்நிலைகள் அமையுமாயின் அதனால் ஏற்படக் கூடிய சமூகப் பின்னடைவும் எதிர்காலத்தில் எமக்கு ஒரு அச்சுறுத்தலாகக் கூட இருக்கலாம்.

எனவே வெளியீடுகளையும் அது சார்ந்த நடவடிக்கைகளையும் ஒரு சமூகப் பொறுப்போடு பார்க்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டிருக்கிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்ததே இது போன்ற நடவடிக்கைகள் என்ற உணர்வு எம்மத்தியில் ஏற்பட வேண்டும். வளர்முக நாடுகளில் இதனை ஒரு தவிர்க்க முடியாததொன்றாகவே பார்க்கின்றனர். அங்கே இதனை ஒரு பண்பாடாகக் கருதிப் பல இலட்சக் கணக் கான பணத்தைச் செலவு செய்கின்றனர். நூல்களையும் சஞ்சிகைகளையும் சமூக வளர்ச்சிக்குரியனவாக அவர்கள் கருதுவதனால்தான் அங்கே வெளியீடுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இணையவெளிகளையும், புதிய தொழில் நுட்பத்தையும் பூரணமாக அவர்கள் நம்புகிறார்கள் எனக் கருதினால் அவர்கள் எப்பவோ வெளியீடுகளை நிறுத்தியிருக்க வேண்டும், வெளியீட்டகங்களை மூடியிருக்க வேண்டும். ஆனால் அங்கே சிறந்த நூல்கள் அச்சிடப்படுகின்றன. பெருமளவில் விற்கப்படுகின்றன.

எனவே நாம்தான் புதிய பொறிமுறை ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். இதனையும் சமூக வளர்ச்சிக்குரிய முக்கியதொன்றாகக் கருதி கூட்டுறவாக அத் துறையை மீண்டும் சீர் செய்து அதனை வளர்த்தெடுக்கக் கூடிய வழிமுறைகளைக் கண்டடைய வேண்டும். இதனை ஒரு தார்மீகப் பொறுப்பாக எண்ணித் துணிய வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பு.

இது பற்றி எம்மில் சிலர் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது வெளிப்பட்ட சில விடயங்களை உங்களோடு பகிர்கிறேன். எமது வெளியீடுகளுக்குரிய ஒரு பொது வெளியீட்டகத்தை நிறுவி அதன் முக்கியத்துவத்தை வியாபார நண்பர்களோடு பகிர்ந்து அவர்களின் அனுசரணைப் பெற்றுக் கொள்ளுவதே ஒரு சிறந்த வழி.இல்லாவிடில் புலம் பெயர் தமிழர்கள் அதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டு செயற்பட்டால் ஈழத்து வெளியீட்டுத் துறைக்கு உயிரூட்டலாம் என்பது பலரது நம்பிக்கை. •

## இந்தவார ராசிபலன் 09.04.2023 - 15.04.2023

ஏப்ரல் 9 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 26

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மனநிறைவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். மேலிடம் உங்களிடம் நல்ல அணுகுமுறையை நீட்டிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. அனைத்து தடைகளும் அகலும். தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணியாளர்கள் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச்சுமை காரணமாக குடும்பத்தில் மன நிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். காரியங்கள் வெற்றி பெறும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் அகலும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். உழைப்பு அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மனவருத்தம் உண்டாகலாம். வீண் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நன்மை தரும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்யோகத் தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும்போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். கூட்டு தொழில், மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது. பெண்கள் விவேகமாக செயல்படுவது வெற்றியை தரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைசசல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். திருமண முயற்சி கைகூடும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷனும், வீண் அலைச்சலும் இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். கடன் விஷயங்களை தள்ளிபோடுவது நல்லது. புதிய நபர்களுக்கு பொருட்களை சப்ளை செய்யும்போது கவனம் தேவை. எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது. எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பொருட் களை வெளியூருக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது. குடும்பத்தினரினரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில்ஊழியர்களால் நன்மை உண்டாகும். தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். உத்யோகஸ்தர்கள் பயணங்கள் செல்லும்போதும், வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் பிரச்னைகள் தோன்றலாம்.குழந்தைகளிடம் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும். உத்யோகத்தில் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் அமைதி உண்டாக கோபத்தை குறைப்பதுஅவசியம். பெண்கள் அறிவுபூர்வமாக செயல்பட்டு சில முக் கிய முடிவு எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த காரியம் நிறைவேறும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை நீங்கும். இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் எப்போதும் பிசியாக காணப்படுவர். உத்யோகஸ்தர்களுக்கு செவ்வாய் சஞ்சாரம் இட மாற்றத்தை ஏற்படுத்தும். கடன் விவகாரங்களிலும், கொடுக்கல் வாங்கலிலும் எச்சரிக்கை தேவை. பொறுப்புகள் கூடும். குடும்பத்தினரால் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும். பெண்கள் பயணங்கள் செல்ல நேரிடலாம். எடுத்த வேலையை செய்து முடிக்க கால தாமதமாகலாம்.

# தேர்தலுக்கு தயாராகும் இந்தியா!

## மோடியின் வெற்றி உறுதி?



சென்னை மடல்

-பகவான் சிங்-

அடுத்த ஆண்டு மே மாதம் நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது இந்தியா. 543 தொகுதிகளைக்கொண்ட 18ஆவது மக்களவைக்கான இத் தேர்தலுக்குச் சிறிய, பெரிய கட்சிகள் அனைத்தும், தங்களுக்கு மட்டுமல்லாமல், கூட்டணிக் கட்சிகளுக்காகவும் அடிமட்டத் தொண்டர்கள் முதல் மூத்த நிர்வாகிகள்வரை முழு மூச்சில் உழைத்து வருகின்றன. ஆங்கிலோ - இந்திய சமூகத்திலிருந்து இரண்டு இடங்களுக்கான பிரதிநிதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர். ஆக மொத்தம் மக்களவையில் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 545. இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான ராஜ்யசபா எனும் மாநிலங்களவைக்கான அதிக பட்சம் 250 உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். தற்போதைய மாநிலங்களவையில் 245

உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 233 பேர் மாநில சட்டப்பேரவைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 12 பேர், கலை, இலக்கியம், அறிவியில, சமூக சேவைகள் ஆகிய தங்கள் துறைகளில் ஆற்றியுள்ள பங்களிப்பின் அடிப்படையில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டவர்கள்.

அண்மை அரசியல் போக்கின் அடிப்படையில், பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதி என்று நான் சொல்லவேண்டும். 2014இல் 14ஆவது பிரதமராக முதல் முறை அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, இது அவரது மூன்றாவது ஆட்சிக்காலமாக இருக்கும். முன்னதாக, அவர் 13 ஆண்டுகளுக்கும் மேலாக குஜராத் முதல்வராகப் பொறுப்பு வகித்துவந்தார். வரும் மக்களவைத் தேர்தலில் நிச்சயம் வெற்றி என்ற அதீத நம்பிக்கை மோடிக்கும் அவரின் பாஜகவுக்கும் ஏற்படுவதற்குக் காரணம், எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையின்மையும், தங்கள் தரப்பில் ஒருமனதாக பிரதமர் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த இயலாமையும் தான். இருப்பினும், பிரதமரோ, அவரது மாநிலத்தைச் சேர்ந்த அறிவார்ந்த வியூக வகுப்பாளரான இந்தியாவின் சக்தி படைத்த உள் துறை அமைச்சர் அமித்ஷாவோ, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலோ, களத்தில் பாஜகவுக்கு ஆதரவாகப் பணியாற்றும் ஆர் எஸ் எஸ்ஸோ, சுதந்தரத்துக்குப் பிறகான முக்கியமான தேர்தல்களில் ஒன்றான இதில் வெற்றிபெற உழைப்பதில் எந்த மெத்தனத்தையும் காட்டவில்லை.

இந்தத் தேர்தலுக்கு அப்படியென்ன முக்கியத்துவம் என்று நீங்கள் கேட்கலாம். கடந்த இரண்டாண்டுகளாகவே, மோடியும் அவரது அரசும் எதிர்க்கட்சிகளாலும் ஒரு சில இந்திய, வெளிநாட்டு ஊடகங்களாலும் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகிவருகின்றனர். இந்த விமர்சனங்கள், நாட்டின் நிர்வாகத்தில் ஏற்படும் தீவிரமான தவறுகள் மற்றும் ஜனநாயகத்தின் தூண்களான சட்டம், செயலாற்றல், நீதி, ஊடகம் ஆகிய அமைப்புகளின் கண்ணியம் காக்கப்படவில்லை

## அரசு செய்திகளைக் கட்டுப்படுத்த 'உண்மை அறியும் குழு'?

என்பது குறித்தும் எழுகின்றன. இதுதவிர, நிதித் துறை முறைகேடுகள், பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களில் தங்களுக்குப் பிடித்த நிறுவனங்களுக்குச் சலுகைகள் ஆகிய குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன. மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில், பத்தாண்டுகளுக்கு முன், ஒரு சாதாரணமான தொழில்முனைவராக இருந்த கௌதம் அதானி இப்போது தொழில் துறை ஜாம்பவனாக உருவெடுத்தது இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகக் காட்டப்படுகிறது. சிறந்த தொழில்நுட்ப, நிர்வாகத் திறன் பெற்ற பல நிறுவனங்கள் இருந்தும் அனைத்து வாய்ப்புகளும் ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்படுவது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதோடு மற்றொரு விஷயம், பாஜக ஆளாத இந்திய மாநிலங்கள் மட்டுமல்லாது, ஒரு காலத்தில் மௌர்ய சாம்ராஜ்யத்தின் அங்கமாக இருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் மியன்மார் அனைத்தையும் உள்ளடக்கிய அகண்ட பாரதத்தை பாஜகவின் ஒற்றைக்குடையின் கீழ் கொண்டுவருவது குறித்துத் தீவிரமாகப் பேசிவருகிறது காவிப் படை. இந்தக் கம்பு சுற்றும் வேலையை நிச்சயம் நான் பெரிதாகஎடுத்துக் கொள்ள மாட்டேன். ஆனால், அண்மையில் இரண்டொரு மூத்த பாஜக தலைவர்கள் பேசிய பேச்சுகள் என்னைக் கவலை கொள்ளச் செய்கின்றன. திரிபுரா முதல்வரும் முக்கிய பாஜக தலைவருமான பிப்லப் தேப், அண்டை நாடுகளான இலங்கையிலும் நேபாளத்திலும் தனது தடத்தைப் பதித்து ஆட்சி செய்ய பாஜக திட்டமிட்டுள்ளதாக கடந்த ஆண்டு ஓர் அதிர்ச்சிக் குண்டை வீசினார். மீண்டும் கடந்த ஆண்டு




Hattrick?

நன்றி: 'ரைம்ஸ் ஒவ் இந்தியா'

செப்ரெம்பரில் அசாம் முதல்வரும் பாஜக தலைவருமான ஹிமந்த பிஸ்வா சர்மா, பாகிஸ்தானையும் பங்களாதேஷையும் இந்தியாவுடன் இணைப்பது குறித்துப் பேசினார். இந்தியாவை ஒருங்கிணைக்க, ராகுல் மேற்கொண்ட "பாரத் ஜோடோ" யாத்திரைக்குப் பதிலடியாகத்தான் இதைச் சொன்னார் என்றாலும், முதலில் பாகிஸ்தானையும் பங்களாதேஷையும் இணைத்துவிட்டு, இந்தியாவை ஒருங்கிணைக்கலாம் என்று அவர் ராகுலுக்கு அறிவுரை கூறும் வகையில் பேசியிருந்தது பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"தற்போது இருக்கும் சர்வதேச உறவுகள் மற்றும் சட்டங்களைக் கவனத்தில்கொண்டு பார்த்தால், இப்படிப்பட்ட விரிவாக்கக் கனவு முற்றிலும் முரண்பாடாக இருக்கிறது" என்று, மரியாதைக்குரிய டிஜிட்டல் ஊடக மேடையான 'மாடர்ன் டிப்ளமசி' தனது கட்டுரை ஒன்றில் கடந்த ஆண்டு குறிப்பிட்டது. "…இந்தியா, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு மட்டுமில்லை, தெற்காசியாவின் சக்தி பீடமாகவும் திகழ்கிறது. அதன் ஆளும் கட்சியின் இத்தகைய ஒரு விரிவாக்கக் கனவு பாசிஸத்தின் அறிகுறியாகும்" என்று எச்சரித்தது அக்கட்டுரை.

இதையெல்லாம் நான் நினைவு கூர்வதற்குக் காரணம், சில நிகழ்வுகள், ஜனநாயகமற்ற, சட்டப்பூர்வமல்லாத, தர்மமல்லாத வகைகளில் அரசால் அரங்கேற்றப்பட்டதைப் பல தரப்பினரும் கண்டித்ததைக் கண்டு நான் கவலை கொண்டுள்ளமைதான். உதாரணமாக, வியாழக்கிழமை இந்த அரசு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், மத்திய அரசு தொடர்பான ஊடகச் செய்திகளைக் கட்டுப்படுத்தும்

'உண்மை அறியும் குழு' ஒன்றை அமைக்க விருப்பதாகக் குறிப்பிட்டது. வாழ்க்கையின் பெரும்பகுதியைப் பத்திரிகையாளனாகவே கழித்த ஒருவனாக, இது என்னை மிகவும் கவலைகொள்ளச் செய்துள்ளது. என் வாழ்வில் நான் இந்த அளவுக்கு அச்சம் கொண்டதில்லை.

இந்தியப் பத்திரிகைகளின் மூத்த ஆசிரியர்களைக் கொண்ட 'எடிட்டர்ஸ் கில்ட்' இந்த அறிக்கை கொடூரமானது என்று குறிப்பிட்டும், இதை வெளியிட்ட மத்திய தகவல் தொழிநுட்ப அமைச்சகம் இதை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்றும், எந்தக் கட்டுப்பாடும் இன்றி வேகமாக வளர்ந்து வரும் சமூக ஊடகங்களில் சுதந்திரமாக உலவிவரும் செய்திகளை முறைப்படுத்த ஊடக நிறுவனங்களுடன் ஆலோசனை நடத்தவேண்டும் என்றும் கோரும் ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளது.

"அப்படியோர் 'உண்மையறியும் குழு'வுக்கான நிர்வாக முறை, நீதித் துறையின் மேற்பார்வை, மேல் முறையீட்டு வழிமுறை அல்லது ஷ்ரேயா சிங்கலுக்கு எதிரான இந்திய அரசு வழக்கில் (2015இல் இந்தியாவில் கருத்து சுதந்தரத்துக்குப் புத்துயிர் அளித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு) சமூக ஊடகங்களின் கணக்குகளைத் தடை செய்யவோ பதிவை அகற்றவோ உச்ச நீதிமன்றம் வகுத்த வழிமுறைகள் பின்பற்றப்படுமா என்பது குறித்த எந்தத் தகவலும் இல்லை. இது, இயற்கை நீதியின் அனைத்துக் கொள்கைகளுக்கும் எதிரானது மட்டுமல்லாமல், சென்ஸார் போன்ற நடவடிக்கை" என்று, வெள்ளிக்கிழமை எடிட்டர்ஸ் கில்ட் டில்லியில் அறிக்கை வெளியிட்டது.

எது பொய், போலி அல்லது தவறான வழிநடத்தல் என்பதை நிர்ணயிக்கும் இந்த உண்மை அறியும் குழுவை, மத்திய அரசு தனது பத்திரிகைத் தகவல் பணியகம் (Press Information Bureau - PIB) அல்லது அரசால் புதிதாக அமைக்கப்படும் வேறு ஓர் அமைப்பின்கீழ் கொண்டுவரும் இந்த அறிக்கை குறித்து, மற்ற ஊடக நிறுவனங்களும் மூத்த பத்திரிகையாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர். பொதுத் தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன் இந்த அறிக்கை வெளிவருவது, மத்திய அரசு தனது பிம்பத்தைப் பாதிக்கும் எந்த ஒரு செய்தியும் எதிர்வரும் மாதங்களில் வெளியாகக் கூடாது என்று விரும்புவதைக் காட்டுகிறது. யாருக்கு வாக்களிப்பது என முடிவு செய்ய, ஒரு வாக்காளர் ஊடகங்களிடமிருந்து தகவலைப் பெறும் உரிமை இதில் மறுக்கப்படுகிறது என்பது பற்றி அரசு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

ஊடகத்துறை சுதந்திரமாகவும், தேசப்பற்றுடனும் மக்கள் நலன் நாடுவதாகவும் இருப்பதுடன், அச்சமின்றிச் செயலாற்றுவது ஜனநாயகத்திற்கு அவசியம். குறிப்பாக, அடுத்த அரசைத் தேர்ந்தெடுக்கும் தருவாயில் நாடு இருக்கும்போது இந்தப் பொறுப்பு இன்னமும் கூடுதல் தேவையாகிறது. மக்கள் விவரமறிந்து தேர்வு செய்ய வேண்டும். அரசின் தவறான செயல்பாடுகள் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக, தனது பிம்பத்தைக் காப்பாற்றிக்கொள்ள அரசு கட்டுப்பாடு விதிக்காமல் இருந்தால்தான் ஊடகங்கள் உண்மைகளை உரக்கக் கூற முடியும். உண்மைகளை அறிய முக்கிய பங்காற்றும் ஊடகங்கள் அரசின் தணிக்கைக்கு உட்பட்டால், மக்களுக்கு உண்மையறியும் உரிமை மறுக்கப்படுகிறது. இந்த நிலை இந்திரா காந்தியின் அவசர நிலைப் பிரகடன காலத்தில் இருந்தது. இந்திய ஜனநாயகத்தின் அந்த இருண்ட காலத்தில் அதன் வேதனைகளை அனுபவித்த மூத்த பத்திரிகையாளர்களுக்கு இன்னும் அந்த அச்சம் நிலவுகிறது.

சர்ச்சைக்குரிய இந்த அறிக்கையைத் திரும்பப் பெறுமாறு தகவல் தொழில்நுட்ப அமைச்சரைப் பிரதமர் மோடி கேட்டுக்கொள்வார் என்று உறுதியாக நான் நம்புகிறேன். அதேநேரத்தில், முக்கிய ஊடகங்களிலும் டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களிலும் மற்ற பொதுத் தகவல் அமைப்புகளிலும் வெளியிடும் செய்திகளின் உண்மைத் தன்மையை அதிகாரபூர்வமாக உறுதிசெய்த பிறகே பொது மக்கள் பார்வைக்கு அளிப்பது என்பதற்கான வழிமுறைகளை எடிட்டர்ஸ் கில்ட் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஒருங்கிணைந்து வகுக்க முன்வருவார்கள் என்றும் நம்புகிறேன். அப்போதுதான், குறிப்பிட்ட சாதி, சமூக, பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரம் கட்டுப்படுத்தப்படும். நாட்டுக்கு நல்லது நடக்கும். அரசு கட்டுப்பாடுகளை விதித்த பிறகு அலறுவதை விட, தனக்குத் தானே முறைப்படுத்தும் வழிமுறையை வகுத்துப் பொறுப்பான பத்திரிகைத் துறைக்கு வழிவகுக்கலாமே! பொதுத் தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் தயாரிப்பு நடவடிக்கைகள், கூட்டணிகள், மோடியையும் பாஜகவையும் மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் அகற்றும் நோக்கில் ஒருங்கிணைய முயற்சிகள், எனது சொந்த மாநிலமான தமிழகத்தில் நிலவும் அரசியல் களம் இவை குறித்தும் நான் உங்களுடன் உரையாடவேண்டும். இவையெல்லாம் அடுத்த ஞாயிறு சந்திப்பில் பேசலாம். இப்போதைக்கு உங்கள் டிபன் ஆறுவதற்கு முன் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன். வணக்கம்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு அலை



வீரகத்தி தனபாலசிங்கம்

“முதலில் அவர்கள் சோசலிஸ்டுகளைத் தேடி வந்தார்கள். நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு சோசலிஸ்ட் இல்லை.

“அடுத்து அவர்கள் தொழிற்சங்கவாதிகளை தேடி வந்தார்கள். அப்போதும் நான் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு தொழிற்சங்கவாதி இல்லை.

“பிறகு அவர்கள் யூதர்களைத் தேடி வந்தார்கள். அப்போதும் நான் பேசவில்லை. ஏனென்றால் நான் ஒரு யூதன் இல்லை.

“பிறகு அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள். எனக்காக பேச எவரும் இருக்கவில்லை”

- கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நாஜி சிந்தனைகளையும் தீவிர வலதுசாரி இயக்கங்களையும் ஆதரித்தவரும் பிறகு ஹிட்லரின் ஆட்சி புரட்டஸ்தாந்து திருச்சபையில் செய்த தலையீடுகளை வெளிப்படையாக கடுமையாக எதிர்த்தமைக்காக சிறையிலும் சித்திரவதை முகாமிலும் அடைக்கப்பட்டவருமான ஜேர்மனிய போதகர் மார்ட்டின் நிமொல்லர் இரண்டாவது உலகப் போருக்கு பிறகு கூறிய வார்த்தைகள் இவை.

பயங்கரவாத தடைச்சட்டம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக குறிப்பாக நான்கு தசாப்தங்களுக்கு அதிகமான காலமாக தமிழர்களுக்கு எதிராக கொடூரமான முறையில் பிரயோகிக்கப்பட்டபோது விரல் விட்டு எண்ணக்கூடிய சில மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் காட்டிய எதிர்ப்பைத் தவிர, தென்னிலங்கையில் பொதுவில் காணப்பட்ட மௌனத்தையும் பிறகு கடந்த வருடம் “அறகலய” மக்கள் போராட்ட இயக்க தலைவர்களுக்கு எதிராக அதே சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியபோது எழுந்த எதிர்ப்பு ஆரவாரக் குரல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அந்த வார்த்தைகளே நினைவுக்கு வந்தன.

ஆனால், அண்மைய அனுபவங்களுக்கு பிறகு பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்களை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக தென்னிலங்கையில் கிளம்பியிருக்கும் மிகுந்த முனைப்புடன் கூடிய எதிர்ப்பு பெரிதும் வரவேற்கத்தக்க - ஆரோக்கியமான மாற்றத்தை பிரதிபலிப்பதாக இருக்கிறது.

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி வந்திருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் (Prevention of Terrorism Act.) 44 வருங்க ளாக நடைமுறையில் இருந்துவருகிறது. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தீவிரமடையத் தொடங்கிய தமிழ் ஆயுதப்போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தினால் தற்காலிகமானதாக 1979 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு பிறகு 1982 ஆம் ஆண்டு நிரந்தரமானதாக்கப்பட்ட அந்த கொடிய சட்டத்துக்கு பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்வைத்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு (Anti - Terrorism Bill) இப்போது மனித உரிமைகள் அமைப்புக்கள், சிவில் சமூகம், சட்டத்துறை சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புக்களிடம் இருந்து கிளம்பியிருப்பதைப் போன்ற எதிர்ப்புக்கு வேறு எந்தவொரு சட்டமூலமும் அண்மைய தசாப்தங்களில் முகங்கொடுத்திருக்கும் என்று கூறமுடியாது.

எதிர்க்கட்சிகள், சடடத்தரணிகள் மற்றும் சமூக, அரசியல் செயற்பாட்டாளர்களின் வேண்டுகோள்களை தொடர்ந்து சர்ச்சைக்குரிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாமதிப்பதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கடந்தவாரம் அறிவித்தார். புதிய சட்ட மூலம் மார்ச் 23 அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கு உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் போதுமான கலந்தாலோசனை இல்லாமல் சட்டமூலம் வெளியிடப்பட்டிருப்பது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

பாராளுமன்றத்தில் சட்ட மூலத்தின் முதலாவது வாசிப்பு ஏப்ரில் நான்காம் திகதிக்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சட்ட மூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாட விரும்புபவர்கள் ஏப்ரில் 6 ஆம் திகதி தொடங்கிய மூன்று வாரகால நீதிமன்ற விடுமுறை காரணமாக பிரச்சினைகளை எதிர்நோக்குவதை தவிர்க்கும் நோக்குடன் பாராளுமன்றத்தில் அதை சமர்ப்பிப்பதை அரசாங்கம் தாமதிப்பதாக விஜேதாச கூறினார். ஏப்ரில் கடைசி வாரத்தில் அல்லது மே முதல் வாரத்தில் சட்ட மூலம் சபையில் சமர்ப்பிக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னதாக பொது விவாதத்துக்கும் கலந்துரையாடலுக்கும் வசதியாக அதன் வரைவு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த மாதமே சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கும் நீதியமைச்சருக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் கடிதங்களை எழுதியது. ஆனால், அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியதாக சட்ட வரைவை பொது விவாதத்துக்கு உட்படுத்த விரும்பவில்லை. அதற்கான காரணத்தை சட்டமூலத்தின் ஏற்பாடுகளை வாசிக்கும்போது தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.



விஜேதாச ராஜபக்ச

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் பல அம்சங்கள் அபாயகரமானவை. பயங்கரவாத தடைச் சட்டமாக இருந்தாலென்ன வேறு கிறிமினல் சட்டங்களாக இருந்தாலென்ன அவை பரந்தளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவந்த இலங்கையின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சட்டமூலத்தின் பல ஏற்பாடுகள் குறித்து கடுமையான ஐயம் எழுகிறது. அதில் உள்ள பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம் மிகவும் விசாலமானதாக இருக்கிறது என்று கடந்த இரு வருடங்களாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக இருந்த சாலிய பீரிஸ் கடந்த வாரம் நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியின்போது போராட்டக்கார்களின் உரிமைகளுக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்த அவர் புதிய சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு எதிராக பரந்தளவிலான இயக்கம் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் சட்டமூலத்தின் ஆபத்துக்கள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



சாலிய பீரிஸ்

சட்டமூலம் ஜனநாயக ரீதியான எதிர்ப்பையும் தொழிற்சங்கப் போராட்டங்களையும் நசுக்கி (பொருளாதார மீட்சியை சாதிப்பதற்கு அவசியமானது என்று அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறுதலாக நம்பும்) எதேச் சாதிகார ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் வரையப் பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிப்பதை அரசாங்கம் தாமதித்திருக்கின்ற போதி லும் பரந்தளவிலான ஒரு கலந்துரையாடலுக்கு அதை அனுமதிப்பதில் அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பது சந்தேகத்துக்குரியதே. கடுமையான விமர்சனங்கள் கிளம்பியிருப்பதற்கு மத்தியிலும் கூட சட்டமூலத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்படமாட்டாது என்று அமைச்சர் விஜேதாச கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை. பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட உலகளாவிய கருத்தொருமிப்பை இதுவரையில் எட்ட முடியவில்லை.

இத்தகைய பின்னணியில் சட்டமூலம் குறித்து நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட நீண்டதொரு அறிக்கையின் முக்கிய அம்சங்கள் கவனத்தை பெரிதும் தூண்டுபவையாக அமைந்திருக்கின்றன.

“உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளை திட்டமிட்டமுறையில் மீறுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும். சட்டமூலத்தை அரசாங்கம் திரும்பப்பெற்று, பயங்கரவாதத்துக்கு எதிரான எந்தவொரு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களை மதித்துப் போற்றுவதாக அமைவதை கலந்தாலோசனைகள் ஊடாக உறுதிசெய்ய வேண்டும்.

“தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெற்று வந்த துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கிளம்பிய கண்டனங்களையடுத்து மேம்பட்ட சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் கையாளுவதற்கு பதிலாக புதிய சட்ட மூலம் சொத்துச் சேதம், களவு, கொள்ளை போன்ற குற்றச் செயல்களையும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதையும் உள்ளடக்கியதாக பயங்கரவாதத்தின் வரைவிலக்கணத்தை விசாலப்படுத்துகிறது.

“அமைதியான முறையில் வெளிப்படுத்தப்படும் எதிர்ப்பை ஒடுக்குவதற்கும் சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கும் கொடூரமான செயன்முறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தை சட்டமூலம் அனுமதிக்கும். எதிர்ப்பியக்கத்தை ஒடுக்குவதற்கு அண்மைக்காலமாக அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்களை நியாயமற்ற முறையில் தடுத்துவைப்பதற்கு தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற போக்கையும் நோக்கும்போது புதிய சட்டமும் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய வெளிப்படையான பேராபத்தை உணரக்கூடியதாக இருக்கிறது.

“சட்டமூலம் சில முன்னேற்றகரமான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்ற போதிலும் துஷ்பிரயோகத்துக்கு உதவக்கூடிய ஏற்பாடுகளும் இருக்கின்றன. சான்று இல்லாமல் மக்களை தடுத்து வைப்பதற்கும் தெளிவாக வரையறுக்க முடியாத உரைகளை குற்றச் செயலாக்குவதற்கும் மக்கள் ஒன்றுகூடுவதையும் அமைப்புக்களையும் நீதித்துறையின் மேற்பார்வை இல்லாமல் நியாயமற்ற முறையில் தடைசெய்வதற்கும் சட்டமூலம் ஜனாதிபதியையும் பொலிசாரையும் இராணுவத்தினரையும் அனுமதிக்கும்.

“இந்த சட்டமூலம் பெருமளவுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. மனித உரிமைகள் மீதான அக்கறைகளின் நிமித்தம் முனவைக்கப்பட்ட விமர்சனங்களை அடுத்து 2018 சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. புதிய வரைவில் திருப்தி வெளியிட்டிருக்கும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தற்போதைய வடிவத்தில் எந்தவொரு பெரிய மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அண்மையில் கூறியிருந்தார்.

“தங்களைப் பொறுத்தவரை நியாயமான காரணங் கள் இருப்பதாக பொலிசாரும் இராணுவத்தினரும் நம்பினால் எவரையும் தடுத்துநிறுத்தி விசாரிக்கவும் தேடுதல் நடத்தி கைது செய்யவும் எந்தவொரு ஆவணத் தையோ பொருளையோ பிடியாணையின்றி கைப்பற்ற வும் அவர்களுக்கு சட்டமூலம் பரந்தளவு அதிகாரங்க ளை வழங்குகிறது. இராணுவத்தினரால் கைது செய்யப்படும் எவரையும் பொலிசாரிடம் கையளிப்ப தற்கு அவர்களுக்கு 24 மணி நேர அவகாசம் வழங்கப்படு கிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பயிற்சி இல்லாத இராணுவத்துக்கு அத்தகைய அவகாசத்தைக் கொடுப்பது கைதிகள் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடிய ஆபத்தை உண்டாக்கும்.

“பொலிஸ் அல்லது இராணுவத்தின் ஆலோசனையின் பேரில் எந்தவொரு இடத்தையும்” தடைசெய்யப்பட்ட பகுதியாக “ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்த முடியும். இந்த ஏற்பாடு 2022 கொழும்பில் இடம்பெற்றதைப் போன்ற பாரிய அமைதிவழிப் போராட்டங்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை தடுப்பதற்கான ஒரு முயற்சியாக தோன்றுகிறது. பயங்கரவாத செயல்களில் ஈடுபடுமாறு அல்லது அதற்கு தயாராகுமாறு தூண்டுவதாக விளங்கிக்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு பேச்சையும் குற்றச்செயலாக்கக்கூடியதாக பரந்தளவு அதிகாரங்களை அரசாங்கத்துக்கு சட்டமூலம் வழங்குகிறது.

“தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகநபர் ஒருவரை அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சரினால் கைச்சாத்திடப்படும் உத்தரவுகளின் பேரில் ஒரு வருட காலத்துக்கு தடுத்துவைக்கமுடியும். ஆனால் புதிய சட்டமூலம் தடுப்புக்காவல் உத்தரவுகளை வழங்கும் அதிகாரத்தை பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு வழங்குகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தனிப்பெருங் கட்சி ‘சூம்’ வழியாக தலைவரை தேடுகிறது!

பனங்காட்டான்

இலங்கை அரசியல் பற்றி இன்றைய நாட்களில் பேசுபவர்கள் தமிழர் பிரச்னையைத் தவிர்த்து, ரணிலின் அர சாட்சி - அவரின் தந்திரோபாய கெட்டித்தனம், அவர் விரும்பும் ஜனாதிபதி தேர்தல் என்று அவரை மையப்படுத்தியே விமர்சிப்பது மேலோங்குகிறது.

சிங்கள அரசியல் தலைவர்களுக்குள் ரணிலை முடிக்குரியவராகச் சித்தரிப்பதற்கு பல காரண காரியங்களை முன்வைக்கின்றனர். பொருளாதார நெருக்கடியான காலத்தில் பிரதமராகி, ஜனாதி பதியாகி குறுகிய காலத்தில் நாட்டை மீட்டவர் என்று தற்காலிகமாக குறிப் பிடுவது பொருத்தப்பாடுடையது.

ஆனால், தமிழரின் அரசியல் அபி லாசை எனப்படும் இனப்பிரச்சனைத் தீர்வை, உணவுக்கு தொட்டுக் கொள்ள பயன்படுத்தப்படும் ஊறுகாய் போன்று பட்டும்படாமலும் கச்சிதமாக அதனை தடவிச் செல்வதை காணமுடிகிறது. தொல்பொருள் திணைக்களம் தனது கைகளில் தூக்கியிருக்கும் மதவாதம், இனப்பிரச்சனையை மறைத்து அதனை மதப்பிரச்சனையாக்கி தமிழர் தாயகமெங்கும் இனத்துவ மோதலை உருவாக்கி வருகிறது.

இந்த விவகாரத்தில் நேரடியாக கள மிறங்கி மக்களுக்குத் தலைமை தாங்க வேண்டியவர்கள் எங்கே



போனார்கள் என்ற கேள்வி முக்கியமானது. இலங்கை தமிழர்களின் அரசியல் தலைமையாக இன்றும் பார்க்கப்படுவது தமிழரசுக் கட்சியே. நாடாளுமன்றத் தேர்தல்களில் இக்கட்சிக்குக் கிடைக்கும் கூடிய ஆசனங்களைப் பொறுத்தே இந்த முடிவு எட்டப்படுகிறது.

தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்தவர்களால் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி கொழும்பின் மருதானையிலுள்ள அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்க மண்டபத்தில் ஆரம்ப மாநாடு அதன் ஸ்தாபக தலைவர் திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் இடம் பெற்றது. அவ்வேளை அவர் நிகழ்த்திய உரையின் முக்கிய பகுதி பின்வருமாறு அமைந்திருந்தது:

“நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழரசை நிறுவுவது இன்றிய மையாதது என்பது எமது திடமான நம்பிக்கை. பழைய கால சரித்திரத்தை தெளிவாக நன்றாக ஆராய்ந்து பார்த் தால் தமிழ் பேசும் மக்கள் இந்த நாட் டிலே இப்போது எப்படியான நிலைமைகளுக்கிடையில் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள் என்பதை கூர்ந்து நோக்கினால், இதுதான் ஒரேயொரு வழி - வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது”.

இவ்வாறு குறிப்பிட்ட திரு. செல்வநாயகம் அவர்கள் தமது உரையின் பிற்பகுதியில், “ஒரு சுயாட்சித் தமிழ் மாகா ணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாண மும் அமைத்து, இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்க முள்ள - சமஸ்டி அரசு - இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம், பெரிய தேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்க இவ்வித சமஸ்டி ஏற்படுவது அவசியமாகின்றது” என்று குறிப்பிட்டார்.

ஏழரைத் தசாப்தங்கள் ஆகியும் நிலை மையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அடுத்த ஆண்டில் தமிழரசுக் கட்சியின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழா நடைபெறவுள்ளது. கடந்த 74 ஆண்டுகளில் - 1972ல் தமிழர் ஐக்கிய முன்னணி, 1976ல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி - அதன் அடையாளமாக வட்டுக் கோட்டை தீர்மானம், 1977 தேர்தலில் தனிநாடுக்கான மக்கள் ஆணை என்று பயணித்து, விடுதலைப்புலி நிர்வாக




காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் சங்கமித்து இன்று யாவும் இழந்து மீண்டும் தனிக்கட்சியாக நிற்கும் பரிதாப நிலைக்கு தமிழரசுக் கட்சி வந்துள்ளது.

தமிழ் காங்கிரஸ் உருவானபோது அதன் தலைவர் ஜி.ஜி.பொன்னம் பலத்தை இந்து மதத்தவர் என்று எவரும் நோக்கவில்லை. தமிழரசுக் கட்சி உருவானபோது அதன் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை

> **தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைக் கண்டுபிடிக்க புலம்பெயர் கிளைகளுடன் ‘சூம்’ வழியான கூட்டங்கள் நடைபெறுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரனும், சுமந்திரனும் கதிரைப் போட்டியில் களத்தில் குதித்துள்ளதால் கட்சி அடுத்த கட்டப் பிளவை எதிர்நோக்குகிறது.**



ஒரு கிறிஸ்தவர் என்று மக்கள் பார்க்க வில்லை. மதங்களைக் கடந்து தமிழ் மக்களின் அரசியல் விடுதலையை பொறுப்பேற்ற உன்னத தலைவர்களாகவே இவர்களைப் பார்த்தனர்.

தமிழரின் தந்தை என மதிக்கப்படும் செல்வநாயகம் அவர்களின் 125வது ஜனன தினம் இப்போது கொண்டாடப்பட்டு வருகிறது. அவரது இனவிடுதலை அர்ப்பணிப்புக்கான நன்றி கூறும் நிகழ்வாக இடம் பெறும் இவ்வைபவத் தைக்கூட யாழ்ப்பாணத்தில் ஒருங்கமைந்த வைபவமாக நடத்த முடியாத நிலையில் தமிழரசுக் கட்சி காணப்படு கிறது. இதற்குக் காரணம் குறுநில மன்னர்களாக அங்கு பலர் தம்மைத் தாமே முக்கியப்படுத்தி அரசியல் செய்வது.

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை மறந்து அடுத்த தலைவர் யார், தற்போதைய தலைவரை எவ்வாறு இறக்குவது, யாருக்கு யார் ஆதரவு என்ற விடயங்களே இன்று கட்சி வட்டத்துக் குள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின்போது இணைபிரியா நண்பர்களாக வாக்குக் கேட்ட சிவஞானம் சிறீதரனும், சுமந்திரனும் இப்போது இரு தரப்பாக பிரிந்துள்ளனர். தேர்தல் காலத்தில் சிறீதரன் அணியின் இரண்டாவது வாக்கை கேட்டுப் பெற்று வெற்றி பெற்ற சுமந்திரன், அவ்வேளையில் சிறீதரனை கட்சியின் தலைவராக்குவதாக வாக்குறுதி கொடுத் தார் என்பது இப்போது பரகசியமாகியுள்ளது.

அதனை மறந்து இப்போது சிறீதரனுக்குப் போட்டியாக சுமந்திரன் களத்தில் இறங்கியுள்ளதை ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. உள்நாட்டில் கட்சியின் பிரதிநிதிகள் கூடி முடிவெ டுக்க வேண்டிய தலைவர் தெரிவு விவகாரம் புலம்பெயர்ந்து வாழும் கட்சி ஆதரவாளர்களின் கைகளுக்குச் சென்றுள்ளது.

தமிழரசுக் கட்சியின் கிளை அமைந்துள்ள மேற்கு நாடொன்றின் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக இரண்டு ‘சூம்’ கூட்டங்கள் அந்தரங்கமாக நடத்தப்பட்டுள்ளது. முதலாவது கூட்டம் சுமந்திரனோடு நடத்தப்பட்டது. இரண்டாவது கூட்டம் தமிழரசின் மூத்த துணைத்தலைவர் திரு.சீ.வீ.கே.சிவஞானத்துடன் நடத்தப்பட்டது. இக்கூட்டங்களின் முக்கிய பேசு பொருள் தற்போதைய தலைவர் மாவை சேனாதி ராஜாவை எவ்வாறு பதவியிலிருந்து இறக்குவது. அடுத்தது, சுமந்திரனை எவ்வாறு தலைவராக்குவது.

இதற்காக கட்சியின் மாநாட்டை விரைவாக



நடத்துவதற்கு எத்தனை லட்சம் ரூபாவையும் தாங்கள் தரத்தயா ராக இருப்பதாக புலம்பெயர் கிளையின் முக்கிய பிரமுகர் வாக்குறுதி அளித்ததும் தெரியவந்துள்ளது. ஒரு சந்தர்ப்பத்தில் சுமந்திரனை நோக்கி - one man army ஆக செயற்பட்டு கட்சியை அழிக்க வேண்டாமென்று சூடாக அவருக்கு எச்சரிக்கையும் விடப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் நடைமுறை களின்படி தலைவர் மற்றும் செயலாளர் பதவிகள் வடக்குக்கும் கிழக்குக்கும் ஒவ்வொன்றாக இருக்க வேண்டு மென்பது. வடக்கிலிருந்தே தலைவர் தெரிவு செய்யப்படுவாரென்றால் கிழக்கி லிருந்து செயலாளர் தெரிவு செய்யப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்த தமிழரசுக் கட்சி இப்போது அதன் தலைவர் தெரிவில் மேலும் பல பிளவுகளை எதிர்பார்ப்பதாக கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

இதைத் தவிர்ப்பதற்கு கிழக்கு மாகா ணத்தின் கட்சிப் பிரமுகர் ஒருவர் தமது சகபாடிகளுடன் பகிர்ந்த கருத்து முக்கிய மானது. கட்சியின் தலைமைப் பதவி கட்டாயமாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரியது என்றல்ல. கட்சியை ஒற்றுமையாக ஒழுங்காக கட்டுப்பாடாக நடத்தக்கூடிய ஒருவரே தலைவராக வேண்டும். தற்போது கட்சி யின் மூத்த துணைத்தலைவராக இருக்கும் திரு.சி.வி.கே.சிவஞானத்தை தலை வராக்கினால், இப்போது தலை தூக்கி யிருக்கும் பதவிப் போட்டி மோதல்களை தடுக்கலாமென்று அவர் கருத்து வெளியிட்டார்.

பல நிர்வாக பதவிகளை அரச சேவை யில் வகித்தவர் சீ.வீ.கே.சிவஞானம். பலரையும் இணைத்து செயற்படுத்தக் கூடியவர். இந்திய - இலங்கை ஒப்பந்தத் தின் கீழான இடைக்கால நிர்வாகத் தலை வராக விடுதலைப் புலிகளால் பெயரிடப்பட்டவர். வயதாலும், அரசியல் அறிவாலும் மூத்தவர். அவரை கட்சியின் தலைவராக நியமித்தால் பல பிரச்சனைகள் தவிர்க்கப்படுவது மட்டுமன்றி எதிர் நோக்கப்படும் கட்சிப் பிளவும் காப்பாற்றப்படும் என்பது அவரது கருத்து.

உள்நாட்டில் தகுதியான ஒருவர் தலைமைப் பதவிக்கு இருக்கும்போது எதற்காக ‘சூம்’ வழியாக தலைவரைத் தேட வேண்டும்?

# போட்டிப் பரீட்சைகளை வெறுக்கும் பட்டதாரிகள்: நாட்டுக்கு வளமா? சுமையா?



கந்தையா
அருந்தவபாலன்

இலங்கையில் இலவசக் கல்வியின் சாதகமான விளைவுகளுள் ஒன்று ஆண்டுதோறும் அதிகளவான பட்டதாரிகளை நாடு பெற்றுக் கொள்ள முடிவதாகும். அதேவேளை கல்வி முறைமையின் பலவீனம் மற்றும் கல்விக்கும் நாட்டின் ஆளணித் தேவைகளுக்குமிடையில் பொருத்தமான திட்டமிடலின்மை போன்றவற்றால் அச்சாதக விளைவின் பயன்களை நாடு முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருப்பதுடன் அதுவே பல சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவும் மாறிவிட்டது. தற்போது இலங்கையில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எதுவித வேலையும் இல்லாதிருப்பதுடன் வேலையில் இருக்கும் கணிசமான பட்டதாரிகள் கீழுழைப்பு நிலையிலும் இருந்து வருகின்றனர். ஒருபுறத்தில் நாட்டின் பல்வேறு துறைகளிலும் திறன்சார் ஊழியர்களுக்கான தேவை காணப்படுகின்றபோது மறுபுறத்தில் அத்திறன்களைப் பெற்றிராத பட்டதாரிகள் ஏதாவது ஒருவேலையைப் பெறுவதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். இவற்றுள் கலைப் பட்டதாரிகளே அதிகளவில் உள்ளனர். வெறும் ஏட்டுக்கல்வியுடன் பட்டம் பெற்று வெளியேறும் இப்பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் ஒரே நிறுவனமாக அரசாங்கமே உள்ளது என்றால் அது தவறாகாது. அதிலும் குறிப்பாக ஆசிரியர்,அபிவிருத்தி அலுவலர் போன்ற வரையறுக்கப்பட்ட ஒருசில கொள்ளிடங்களே உள்ளன. நீண்டகாலமாக அரச துறைகளில் தொழில் வாய்ப்பு என்பது ஊழியத் தேவைக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்டதாகவன்றி சமூக, அரசியல் தேவைகளுக்காகவும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனால் பெரும்பாலான அரச நிறுவனங்களில் மிகை ஊழியர்களே காணப்படுகின்றனர். இலங்கையின் இன்றையபொருளாதார நெருக்கடிக்கான காரணிகளில் இதுவும் ஒன்று. இதனால் இன்று அரசாங்கம் முன்னரைப்போன்று புதிய நியமனங்களை வழங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன் அரச துறையில் உருவாகும் வெற்றிடங்களும் வற்றிக் கொண்டே செல்கின்றன. பொதுவாக நிறுவனங்கள் ஆற்றல் கூடிய ஊழியர்களைத் தெரிவு செய்வதற்காக போட்டிப் பரீட்சைகளை ஒரு முறையாகக் கையாண்டு வருகின்றன. ஆனால் இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போட்டிப் பரீட்சைகள் எதுவுமின்றி எல்லோரையும் உள்வாங்கி வந்துள்ளன. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அது சாத்தியமற்ற ஒன்றாக மாறியுள்ளதுடன் எதிர்காலத்தில் இன்னும் அது இறுக்கமாகும் போக்கே தென்படுகிறது. எனவே தேவையான ஆளணியைவிட வேலை தேடும் பட்டதாரிகளின் எண்ணிக்கை பல மடங்கு உயர்வாக இருக்கும் இன்றைய சூழ்நிலையில் போட்டிப் பரீட்சையை நடத்துவதே அரசாங்கத்தின் ஒரே தெரிவாக உள்ளது. ஆனால் பெரும்பாலான பட்டதாரிகளுக்கு இம்முறை விருப்பமற்றதொன்றாகக் காணப்படுவதால் பல வடிவங்களில் இதற்கு எதிர்வினையாற்றியே வருகின்றனர். இதற்கான அண்மிய உதாரணந்தான் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிலிருந்து ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு எதிராக அவர்களால் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப் பட்டுள்ள வழக்கு. பட்டதாரிகளின் இந்நிலைப்பாடு எவ்வளவு தூரம் யதார்த்தமானது என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.



பெரும்பாலான பட்டதாரிகளின் மனங்களில் இறுக்கமாகப் பதிந்துள்ள இரு எண்ணக்கருக்கள் அவர்களால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாயுள்ளன. ஒன்று "பட்டதாரிகளாகிய எமக்கு எல்லாம் தெரியும், எல்லாத் தகுதியும் எமக்கிருக்கிறது" என்பது. "பட்டதாரிகளுக்கு அரசாங்கம் கட்டாயம் வேலை தரவேண்டும்" என்பது மற்றது.

அறிவு பூர்வமாகச் சிந்தித்தால் இரண்டு நிலைப்பாடுகளும் தவறானவை என்பதை உணரமுடியும். "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்பதே உண்மையாக இருக்குமிடத்து ஒருசில பாடங்களில் ஒருசில பகுதிகளை மட்டுமே கற்று வெளியேறும் இளநிலைப் பட்டதாரி ஒருவர் தனக்கு எல்லாம் தெரியும் என எண்ணுவது அறிவன்று. அவர் கற்ற பாடத்திற்கூட ஓரளவே அவருக்கும் தெரிந்திருக்கும் என்பதே உண்மையானது. சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சில உதாரணங்களைச் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். ஒன்று பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்வாங்குவதற்கான நேர்முகத் தேர்வின்போது நடந்தது. வரலாற்றுப் பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்ற ஒருவரிடம் தேர்வாளர்களில் ஒருவர் 'நெப்போலியன் பொனபாட்' என்பவரைப் பற்றிக் கேட்டபோது அவர் யாரென்று தெரியாது என்பதே விடையாக அமைந்தது. மற்றொன்று ஆசிரியர் நியமனம் பெற்றுச் சென்ற தமிழில் சிறப்புப் பட்டம் பெற்ற ஒருவரிடம் தரம் பதினொன்றுக்கான தமிழ் இலக்கியப் பாடத்துக்கான நேர அட்டவணை வழங்கிய போது அப்பாடத்தில் வருகிற சில இலக்கியப்பகுதிகளைத்தான் படிக்காததால் தன்னால் அப்பாடத்தைப் படிப்பிக்க முடியாது என்று மறுக்கப்பட்டது. இன்னொன்று ஆங்கிலத்தில் படித்த உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரி ஒருவருக்கு மாணவர் பெயர்களை ஆங்கிலத்தில் பிழையின்றி எழுத முடியாதிருந்தமை. இவற்றை வைத்து எல்லாப் பட்டதாரிகளையும் மதிப்பிடக் கூடாது என்றாலும் அதனை நிராகரிக்க முடியாதவாறு யதார்த்த நிலை உள்ளதையும் ஏற்றேயாகவேண்டும்.

அடுத்த விடயம் தமக்கு எல்லாத் தகுதியும் இருக்கிறது என பட்டதாரிகள் எண்ணுவது. அதாவது பட்டம் ஒன்றைப் பெற்றுவிட்டால் தொழிலுக்கான எல்லாத் தகுதிகளையும் தாம் பெற்றுவிட்டோம் எனத் தவறாக எண்ணுவது. பொறியியல், மருத்துவம் மற்றும் இதுபோன்ற தொழில்சார் பட்டங்கள் தவிர்ந்த ஏனைய பட்டங்களைப் பெற்ற ஒவ்வொருவரும் ஆற அமர்ந்து எனக்கு என்ன தொழில் தகைமை உள்ளது அல்லது என்னால் செய்யக்கூடிய தொழில் என்ன என ஒருகணம் சிந்திப்பார்களாயின் குறிப்பிட்டுக் கூறக்கூடியவாறு தங்களுக்கு எந்த வித தொழில் தகைமையும் இல்லை என்ற முடிவுக்கு அவர்கள் வருவார்கள். உண்மையில் அவர்கள் பெற்ற பட்டச் சான்றிதழ் என்பது சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளுக்கு வழங்கப்படும் பெறுபேற்றுச் சான்றிதழ் போன்றதே. இது வெறும் காகிதச் சான்றிதழ் (Paper Qualification) மட்டுமே. அதாவது ஏதாவது ஒரு தொழிலைப் பெறுவதற்கான அடிப்படைக் கல்வித் தகுதி மட்டுமேயன்றித் தொழில் தகுதியல்ல.

பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக, ஆசிரியர்களாக உள்வாங்குவதில் உள்ள இடர்ப்பாடுகள் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன. தேவைக்கான நியமனம் என்பதைவிடப் பட்டதாரிகளுக்கு வேலை வழங்க வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே 2019இல்அவர்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற பெயரில் நியமனம் வழங்கப்பட்டது என்பதை இருக்க இடமின்றியும் செய்ய வேலைகளுமின்றியும் அலுவலகங்களுக்கு வெளியில் கூட்டம் கூட்டமாக அவர்கள் இருந்து அரட்டையடித்த காட்சிகளே சான்று. இன்று கூட அவர்கள் செய்யும் பணிகளுள் பெரும்பகுதி முகாமைத்துவ உதவியாளர் செய்யும் இலிகிதர் வேலைகள்தான். இது ஒரு வகையில் பட்டதாரிகளின் கீழுழைப்புத்தான். உண்மையில் இது அவர்களின் தவறல்ல. அரசாங்கத்தின் தவறு. அபிவிருத்தி பெயரளவில் இருக்கிறதேயன்றி அதற்கான செயற்றிட்டங்களை விவசாய, கைத்தொழில் மற்றும் சேவைத்துறை களில் உருவாக்கி செயற்படுத்தும் பயனுறுதியான நடவடிக்கைகளை அரசாங்கம் போதியளவில் திட்ட மிடவில்லை. இங்கு வேலைக்கு ஆளை நியமிப்பதற்குப் பதிலாக ஆளை நியமித்து விட்டு அவருக்குவேலை தேடும் படலமே அரங்கேறுகிறது. அவ்வாறு செயற்றிட்டங்கள் உருவாக்கப்படும் ஒருசூழ்நிலையிற்கூட அதற்கு மிகப் பொருத்தமான பட்டதாரிகள் யார் என்பதும் முக்கியமாகும். உதாரணமாக அபிவிருத்தித் திட்டமிடலில் நுண்கலைப் பட்டதாரியின் பங்கு மிகக் குறைவானதே.

இதேவேளை பாடசாலைகளில் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பலர் தற்காலிகமாக கற்பித்தல் பணிகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களே போட்டிப் பரீட்சைக்கு எதிராக வழக்குத்தொடுத்துள்ளனர். இலங்கையின் கல்வித்தரத்தின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளில் ஆசிரிய நியமன முறைகளில் காணப்படும் குறைபாடுகளும் முக்கிய இடத்தை வகிப்பதாக கல்வியிலாளர்கள் சுட்டிக்காட்டி வருகிறார்கள். இலங்கையில் தேசிய ரீதியாக இருவகையினர்க்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகிறது. ஒன்று பட்டதாரிகள். மற்றது தேசிய கல்விக் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் கற்பித்தல் சான்றிதழ்தாரிகள். இதற்குப் புறம்பாக பிரதேச ரீதியாகக் காலத்துக்குக் காலம்வேறு வகையிலும் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. மலைநாட்டில் உயர்தரச் சித்தியுடனும் தமிழ்ப்பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியர் அடிப்படையிலும் வழங்கப்பட்டதைக் குறிப்பிடமுடியும். இவர்களுள் கற்பித்தல் சான்றிதழ்தாரிகளைத் தவிர ஏனைய அனைவரும் தொழில்சார் தகைமை எதுவுமின்றியே வகுப்பறைக்குள் நுழைகிறார்கள் என்பது இலங்கையின் கல்வித்துறையின் மிகப் பெரியபலவீனம். இலங்கையில் எந்தத் தொழிற்றகைமையுமில்லாமல் தொடங்கக்கூடிய ஒரு தொழிலாக ஆசிரியத் தொழில் மாறிவிட்டது. இவ்வாறான ஒரு நிலையில் போட்டிப் பரீட்சை மூலமான ஆசிரியர்தெரிவை எதிர்ப்பது எமது கல்வித் தரம் மேலும் பாதிப்படையவே வழிவகுக்கும் என்பதைப் பட்டதாரிகள் உணரவேண்டும்.

பெரும்பாலான பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தயங்குவதற்கு அவர்களைவிட எமது கல்வி முறையே பிரதான காரணமாக உள்ளது. இங்குள்ள முறைசார் கல்வி முறையானது அடிப்படையில் பரீட்சையை மையமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது இதை மறைப்பதற்கு சில ஒப்பனைகள் செய்யப்பட்டாலும் அடிப்படையில் எந்த மாற்றமுமின்றி உள்ளது. இதை நோக்கியே மாணவர்க ளும் கல்விசார் ஆளணிகளும் நிறுவனங் களும் ஓட அதன் பின்னால் பெற்றோ ரும் ஓடிக் கொண்டிருக்கின்றனர். மாணவர்களின் விரிவான தேடலுக்கும் இயல்பான கற்றலுக்கும் பரந்தளவில் வாய்ப்புகளை வழங்காது தெரிவு செய் யப்பட்ட பாடங்களுக்கான பரீட்சை என்ற குறுகிய சந்துக்குள் மாணவர்களின் கண்களை மூடிக்கொண்டு ஓடவைப்பதையே கல்வித்துறை செய்து கொண்டிருக்கிறது. பல்கலைக் கழகங்கள் கூட

(18ஆம் பக்கம் பார்க்க)

> **பெரும்பாலான பட்டதாரிகளின் மனங்களில் இறுக்கமாகப் பதிந்துள்ள இரு எண்ணக்கருக்கள் அவர்களால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாயுள்ளன. ஒன்று "பட்டதாரிகளாகிய எமக்கு எல்லாம் தெரியும், எல்லாத் தகுதியும் எமக்கிருக்கிறது" என்பது. "பட்டதாரிகளுக்கு அரசாங்கம் கட்டாயம் வேலை தரவேண்டும்" என்பது மற்றது.**

# நேட்டோவில் புதிய நாடுகளின் இணைப்பு புதிய உலக ஒழுங்கை ஏற்படுத்துமா...?

**சிவா முருகுப்பிள்ளை**

2295 கிலோ மீற்றர் (தரை வழியே 1974 கிலோ மீற்றர் நீர் வழியாக 321 கிலோ மீற்றர்) தூரத்திற்கு ரஷ்யாவின் எல்லையில் அமெரிக்க நேட்டோ படைகளை நிறுத்தி ரஷ்யாவின் இருப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நேட்டோவுடனான இணைவு வேண்டாம் என்பதை மீறிச் செயற்பட முனைந்ததே உக்ரேன் ரஷ்யா யுத்தம்.

இன்று அது 1340 கிலோ மீற்றர் தரை வழியேயான ரஷ்யாவிற்கு எதிரான படை நிறுத்தலை பின்லாந்தில் ஏற்படுத்த வழி வகிக்கும் பின்லாந்து நேட்டோவில் இணைதல் என்றாகி இடையறாத யுத்தங்களை நேட்டோ ஏற்படுத்தியிருக்கின்றது.

இதற்கான வரலாற்றை சற்று பின்னோக்கி பார்ப்போம்....

சோசலிச சோவியத் யூனியனினதும் அதன் தோழமை நாடுகளின் ஒத்துழைப்பு, பாதுகாப்பு, உடன்பாடான செயற்பாடுகளுக்காக 1955 இல் உருவாக்கப்பட்டது வார்சோ அமைப்பு.

இது சோவியத்தின் தனித்தனி நாடுகளாக பிரிவடைந்த 1989 இல் இதன் தேவைகள் இல்லாது...? போனதால் ஜூலை 01, 1991 இல் கலைக்கப்பட்டதே வரலாறு.

சோவியத்துடனான பனிப் போரைச் சமாளிக்க அதனைத் தொடர்ந்து இந்த வார்சோ அமைப்பிற்கு எதிராக தம்மை பாதுகாத்துக் கொள்ள ஒத்துழைப்புகளை மேற்கொள்வதற்காக ஏப்ரல் 04 ,1949 உருவாக்கப்பட்டு செயற்படுவதாக நேட்டோ அமைப்பு தன்னை பிரகடனப்படுத்தி உருவானது.

நேட்டோ என்ற வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. இது 30 உறுப்பு நாடுகளான 28 ஐரோப்பிய மற்றும் இரண்டு வட அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான ஒரு அரசுகளுக்கிடையேயான இராணுவக் கூட்டணியாகும். நேட்டோ என்பது ஒரு கூட்டு பாது காப்பு அமைப்பு என்று தன்னை பிரகடனப்படுத்துகின்றது.

அதன் சுதந்திர உறுப்பு நாடுகள் மூன்றாம் தரப்பினரின் தாக்குதல்களுக்கு எதிராக ஒருவரையொருவர் பாதுகாக்க உருவாக்கப்பட்டதாக தன்னை பிரகடனப்படுத்தியிருந்தாலும் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னரும் இந்த கூட்டணி நீடித்து மற்றும் பால்கன், மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் ஆபிரிக்காவில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.




1989 இன் சோவியத் யூனியன் ரஷ்யா என்ற நாடாகவும், இன்னபிற நாடுகளாகவும் தனித்தனியாக சென்ற பின்பு நேட்டோவின் தேவை இல்லாமல் போனது. அது கலைக்கப்பட வேண்டும் என்பதே அன்றைய அமெரிக்க தரப்பிற்கும் சோவியத் தரப்பிற்கும் ஏற்பட்ட உடன்பாடு. ஆனால் சோவியத்தின் உடைவை உறுதிப்படுத்திய அமெக்ரிக்க முதலாளித்வம் நேட்டோவை கலைக்கவில்லை மாறாக அதனை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

சோசலிசம் என்ற கருத்தியல் மீதான் பயம் எப்போதும் இனியும் அமெரிக்காவிற்கும் அது சார்ந்த முதலாளித்துவத்திற்கும் இருந்து கொண்டு இருப்பதினால் உலக மக்களை ஒடுக்கி ஆள இந்த அமைப்பை தனக்குள் கலைக்காது வைத்திருக்கின்றது இன்று வரை.

மனித குல வரலாற்றின் அடிப்படையில் ஆதிப் பொதுவுடமை சமூதாயத்தில் ஆரம்பித்து முதலாளித்துவம் என்ற உச்சக் கட்ட உழைப்புச் சுரண்டல் என்ற சமூக அமைப்பு ஏற்பட்டு அது இறுதியில் கம்யூனிச சமூகமாக மாற்றம் பெறும் என்பது சமூக விஞ்ஞானம் இயங்கியல்.

இந்த முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் சோசலிச கட்டுமானம் உருவாகும் என்பதை சமூக விஞ்ஞானம் நிறுவியுள்ளது.

இதனை முதலாளித்துவமும் நன்கு அறியும். தனது சுரண்டல் மூலம் பிறனின் உழைப்பை சுரண்டி சொகுசாக வாழும் இந்த முதலாளித்துவம் தனது வாழ்நாளைக் எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலத்திற்கு இழுத்துச் சென்று தானே வெட்டிய சவக் குழியில் தன்னை புதைத்துக் கொள்ளும். அதுவரை தனக்கான இருப்பை தக்கவைக்க காலத்தை இழுத்தடிக்கடிவே நேட்டோ என்ற அமைப்பின் இருப்பும் அதன் விரிவாக்கமும்... போர்களும் ஆகும்.

உக்ரேனின் நேட்டோ உடனான இணைவு என்பதுவும் அது சார்பாக ரஷ்யாவின் எல்லைப் புறத்தில் அதனை சுற்றி வளைப்பதாக அமைந்த செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவ்வாறு செயற்படுவது




சோவியத் உடைவின் போது அதனுடன் முன்பு ஒன்றாக இணைந்திருந்த நாடுகள் எக்காரணம் கொண்டும் நேட்டோவிலோ அதுசார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்பதை மீறிய ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்த செயற்பாடுகளை உக்ரேன் முன்னெடுக்க முற்பட்டதற்கு எதிர்வினையாகவே ரஷ்யா தனது படைகளை உக்ரேனுக்குள் உள்ளே அனுப்பியது.

நேரடியாக ரஷ்யாவுடன் முன்னரங்கில் செயற்பட திராணி அற்ற அமெரிக்காவும் அதன் நேட்டோ நாடுகளும் உக்ரேனை முன்னிறுத்தி ஆயுதம், நிதி, இராணுவ ஆலோசனை, உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் ஆலோசனை, நேரடிச் செயற்பாடுகளாக விரிந்து சென்ற ரஷ்யா, உக்ரேன் யுத்தம் உண்மையில் ரஷ்யா நேட்டோ நாடுகளுக்கு இடையிலான யுத்தமாகவே நடைபெறுகின்றது.

இதன் ஒரு அங்கமாக மேலும் நாடுகளை நேட்டோவில் அதுவும் ரஷ்யாவின் எல்லையில் உள்ள அல்லது அதற்கு அருகாமையில் ரஷ்யாவை தாக்கி அழிப்பதற்குரிய இலக்குகளாக உள்ள நாடுகளை இதில் அவசரம் அவசரமாக இணைக்கும் செயற்பாடுகளில் அண்மையில் பின்லாந்தை நேட்டோ இல் இணைத்துள்ளது.

இதனை விட வேகமாக சுவீடனை இதில் இணைப்பதற்கு முயன்றும் வருகின்றது.

பின்லாந்து சுவீடன் போன்ற நாடுகளுடன் சோவியத் யூனியன், ரஷ்யா போன்ற நாடுகள் 1800 கள், 1900 களில் யுத்தங்களும் சமாதானங்களும் ஒப்பந்தங்களுமாக இருந்து வருவதே வரலாறு. இது பற்றிய விரிவான வரலாற்றிற்குள் தற்போது போகவிரும்பவில்லை. ஆனால் சோவியத்தின் கட்டுப்பாட்டிற்குள் யுத்தங்கள் மூலம் வந்த அல்லது வருவதற்குரிய வாய்ப்புக்களை எற்பட்ட போது எல்லாம் சோவியத், ரஷ்யா இந்த இரு நாடுகளுடனும் சமான ஒப்பந்தம் எழுதி இனி தங்களின் பாதுகாப்பிற்கு அச்சுறத்தலான எந்த செயற்பாடுகளில் ஈடுபடமாட்டோம் எதிர்காலத்தில்....

கூடவே அவ்வாறான செயற்பாடுகளை அன்று பிரிதானியாவுடன் தற்போது அமெரிக்கா போன்ற நாடுகள் எமது நாட்டில் இராணுவத் தளங்களை அமைக்க அனுமதிக்கமாட்டோம் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டே இந்த இரு பால்டிக் அல்லது ஸ்கண்டினேவியன் நாடுகள் சமதானமாகவும் பெயர் சொல்லும் அளவிற்கு இதுவரை உலகத்தில் தமது வாழ்வை நகர்த்தியும் வந்தனர்.

ஆனால் இன்று எல்லாவற்றையும் கடாசிவிட்டு அமெரிக்காவின் சொல்லை நம்பி நேட்டோவுடன் இணைவது சார்பில்லாத நாடாக இல்லாது ரஷ்யாவிற்கு எதிரான நேட்டோ யுத்தத்தில் இணைவது பாரிய எதிர் வளைவுகளை உலகத்தில் ஏற்படுத்தப் போகின்றது.

இதன் அடிப்படையில்தான் தற்போதைய பின்லாந்தின் இணைவும்.

புதிதாக அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் தமது இராணுவ நிலைகளை 1380 கிலோ மீற்றர் நீளத்திற்கு எல்லையில் ரஷ்யாவை நோக்கி வைக்கவும் போகின்றன.

கூடவே சுவீடனும் இணையும் (இதற்கு ஹங்கேரி துருக்கி தமது எதிர்பை தெரிவிக்கும் நிலையில்) பட்சத்தில் உலகிற்கு பொதுவான கடல் பயணத்திற்கான பால்டிக் கடல் பிரதேசத்தில் ரஷ்யாவின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பெரிதும் உதவப் போகின்றது.


அமெரிக்காவின் பார்வையில் சுவீடன் தரையால் நேரடியாக ரஷ்யா இணைப்பைக் கொண்டிராவிட்டாலும் ரஷய்யாவின கடல் பயணத்தை தடுக்கும் கடலின் ஆதிக்கத்தை சுவீடன் மூலம் ஏற்படுத்துவதில் காணும் அக்கறை சுவீடனையும் இந்த நேட்டோ நாடுகள் பட்டியிலில் இணைக்கவே முயலும்.

பால்டிக் கடலின் ரஷ்யா நாட்டுப் பக்கம் 6 மாதம் உறைபனியாகவும் சுவீடன் நாட்டுப் பக்கம் 3 மாதங்கள் மட்டும் உறைபனி யாக இருக்கும் சாதகங்களை அமெ ரிக்கா தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முனையும். இதனால் அமெரிக்கா சுவீடனை எப்பாடுபட்டாவது நேட்டோவில் இணைப்பதற்கு முழமூச்சாக செயற்படும்.

அவ்வாறு இணைதல் என்பது நீர் மூழ்கிக் கப்பல் தொழில் நுட்பத்தில் உலகில் உயர் நிலையில் இருக்கும் ரஷ்யாவின் செயற்பாடுகள் பாரிய பின்னடைவுகளைச் சந்திக்கலாம்.

இந்த துறைமுக தீவு நகரில் நேட்டோவின் இராணுவத் தளங்கள் எற்கனவே இருக்கின்றன.

அதிலும் சிறப்பாக சுவீடன் இன் கொற்லான்ட் (Gotland) தீவுப்பகுதியில் இருக்கும் பால்டிக் கடற்பயணங்களின் கட்டுப்பாடு இணைப்புச் செயற்பாடுகளின் தளம் ரஷ்யாவின் இரகசிய செயற் பாடுகளை இடையூறு செய்யும் என்பது பிரதான இடத்தையும் பிடிக்கின்றது.



இந்த புதிய நாடுகளை நேட்டோவில் இணைப்பது சமாதானமாக வாழும் இந்த ஷ்கன்டிநேவியன், பால்டிக் நாடுகளில் இனிவரும் காலத்தில் அமைதியின்மையும் சுபீட்சமான வாழ்வுகளையும் இல்லாமல் செய்யும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான கடந்த அரை நூற்றாண்டு காலமாக அமெரிக்காவும் அதன் நேசபடைகளும் புகுந்த எந்த நாடும் உருப்பட்டதாகவும் சிறப்பாக வாழுவதாக வரலாறு இல்லை. மாறாக புகையும் சதையும் இரத்தமும் வறுமையுமாகவே கடக்கின்ற இந்த நாடுகள்.

அது ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்து சோமாலியா, ஈராக், லிபியா என்று பெரிய பெயர் பட்டியலை நாம் முன்வைக்க முடியும்.


பின்லாந்தின் இணைவும் சுவீடனை இணைக்க முயலும் செயற்பாடும் உலக ஒழுங்கில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி சமாதானத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

ஏற்கனேவே பொருளாதாரத்தில் பெருந்தொற்றல் தள்ளாடும் உலகம் இன்னும் அதிகம் தள்ளாடப் போகின்றது.

உலகத் தலைவர்களே மக்களை யோசியுங்கள் மாறாக கருவிகளை விற்பனை செய்வதையும், உற்பத்தி செய்த கறள் பிடித்த கருவிகளை விற்று காசாக்குவதையும், இதனைப் பாவித்து அழிவுகளை ஏற்படுத்துதல் பின்பு கட்டுமானம் என்று பணம் பண்ணுவதையும் நிறுத்துங்கள்.

இந்த யுத்தங்களில் மக்களின் உயிர்கள் அது அப்பாவி மக்களாக இருக்கலாம் ஏன் இராணுவமாகவும் கொன்றொழ்ப்பதில் இருந்து விடுபட உதவுகள்.

●




**திரைப்படம் - 1947**
**இயக்கம் - என். எஸ். பொன்குமார்**
**இசை - ஷான் ரோல்டன்**
**நடிப்பு - கௌதம் கார்த்திக், ரேவதி, புகழ்**

இந்திய சுதந்திரப் போராட்டத்தை மையப்படுத்தி, அந்தக் காலங்களில் தான் கொஞ்சம் படங்கள் வந்தன. அவை உண்மை சம்பவங்களைத் தழுவியவையாக இருந்தன. ஆனால், கற்பனையான ஒரு கதையை வைத்து நெகிழ வைக்கும் சம்பவங்களுடன் இந்தப் படத்தைக் கொடுத்துள்ளார் இயக்குநர் பொன் குமார்.




தமிழகத்தில், திருநெல்வேலிக்கு அருகில், மலை களுக்கு நடுவில் உள்ள செங்காடு என்ற கிராமம். அந்த கிராமத்தில் வெள்ளையர்க ளிடம் அடிமைப் பட்டுக் கிடக்கும் ஊர் மக்கள். பருத்தியிலிருந்து, நூல் எடுக்கும் தொழிலைச் செய்பவர்கள். அந்த கிராமத்தை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கொடூர குணம் கொண்ட ஆங்கிலேயே அதிகாரி, இளம் பெண்கள்மீது ஆசைப்படும் அவரின் மகன், ஆங்கி லேயனுக்கு விசுவாசமாக இருக்கும் ஜமீன்தார் என படத்துக்கான கதைக்களத்தை, கதாபாத்திரங்களை அந்தக் காலத்துக்கே செல்லும்படியாக உருவாக்கி யிருக்கிறார் இயக்குநர்.

இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கும் சமயத்தில் செங்காடு கிராமத்தில் உருவாகும் பருத்தி நூ லுக்கு அடுத்த 30 வருடங்களுக்கு இலாபத்தில் பங்கு தர வேண்டும் என சென்னை மாகாண ஆங்கிலேயே அதிகாரி ஆலோசனை சொல்லி அதை செயல்படுத்த நினைக்கிறார். அது சம்பந்தமாகப் பேச செங்காடு கிராம ஆங்கிலேயே அதிகாரியான ரொபேர்ட்டை (ரிச்சர்ட் அஷ்டன்) அழைக்க கடிதம் அனுப்புகிறார் கள். கடிதம் கொண்டு செல்பவர்கள் புலி தாக்கி இறந்து போகிறார்கள். ரொபேர்ட்டின் மகனான ஜஸ்டின் (ஜேசன் ஷா) அந்த கிராமத்தில் எந்தப் பெண் வயதுக்கு வந்தாலும் அவர்களை தனது படுக்கைக்கு அழைத்துச் செல்லும் கொடியவன். அவன் கண்ணில் தனது மகள் தீபாலி (ரேவதி) பட்டுவிடக் கூடாது என ஜமீன்தார் (மதுசூதன ராவ்) சிறு வயதிலேயே இறந்துவிட்டதாகப் பொய் சொல்கிறார். ஆனால், ஒரு சூழலில் ஜஸ்டின் கண்ணில் தீபாலி பட்டுவிட, அவளை தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கட்டளை யிடுகிறான். அதனால், தனது மகளை உயிரோடு பூமியில் புதைத்து பூமி தானம் செய்கிறார் ஜமீன். தீபாலி மீது சிறு வயதிலிருந்தே ஆசைப்படும் பரமன் (கௌதம் கார்த்திக்) அவளைக் காப்பாற்றி அழைத்துச் செல்கிறான். இதன்பின் என்ன நடக்கிறது என்பது தான் மீதிக் கதை.

இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தி மலைகளுக்கு நடுவில் எங்கோ ஒரு மூலையில் உள்ள செங்காடு கிராம மக்களுக்கு தெரிந்துவிடக் கூடாது என்ற 'சஸ்பென்ஸ்'தான் இந்தப் படத்தில் முக்கியமானது. அதைச் சுற்றி திரைக்கதை அமைக் கப்பட்டிருந்தால் படம் இன்னும் விறுவிறுப்பாக நகர்ந்திருக்க வாய்ப் புள்ளது. அதைத் தவிர்த்து மற்ற விசயங்களுக்கும் அதிக முக்கியத்து வம் கொடுத்துள்ளதால் ஊர் மக்களுக்கு அது பற்றித் தெரிந்தால் என்ன தெரியா விட்டால் என்ன என்ற உணர்வே ஏற்படுகிறது.

தன் அம்மாவை ஆங்கிலேயனிடம் காட்டிக் கொடுத்த ஊர் மக்கள் மீது எப்போதும் வெறுப்புட னேயே இருப்பவர் கௌதம். ஜஸ்டின் வீட்டில் வேலை பார்ப்பவர். சிறு வயதிலிருந்தே ஜமீன் மகள் ரேவதியைக் காதலிப்பவர். இருந்தாலும் தனது காதலி நன்றாக இருக்க வேண்டும் என அவரைக் காப்பாற்று கிறார். காதலிக்காத காதலிக்காக அவர் செய்யும் ஒரு விசயம்தான் படத்தின் திருப்பு முனை.

ஜமீன் மகள் தீபாலியாக புதுமுகம் ரேவதி. ஒப் பனை இல்லாமல் அழகாகவே இருக்கிறார். படத்தில் இவர் மட்டும்தான் காட்சிக்குக் காட்சி புது ஆடை யில் வருகிறார். மற்றவர்களுக் கெல்லாம் ஒரே ஆடை தான். முதல் படம் என்று சொல்ல முடியாதபடி கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார்.

கௌதம் கார்த்திக்கின் நண்பராக புகழ். குணச்சித் திரக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். உச்சக்கட்ட காட்சி யில் கண்கலங்க வைக்கிறார். ஆங்கி லேயே அதிகாரி ரொபேர்ட் ஆக ரிச்சர்ட் அஷ்டன், அவரது மகன் ஜஸ்டின் ஆக ஜேசன் ஷா கதாபாத் திரங்களை தமிழ் பேசுபவர்களாகவே காட்டியிருக்கிறார் இயக்குநர். இரு வரும் வில்லத்தனத்தில் மிரட்டுகி றார்கள். ஆங்கிலேயர்களுக்கு விசுவாச மாக இருக்கும் ஜமீன்தாராக மதுசூதன ராவ் விசுவாசத்தை மீறி அடிமை யாகவே மாறிவிட்டார்.

ஷான் ரோல்டன் பின்னணி இசை குறிப்பிடும்படி இருக்கிறது, பாடல்க ளில் இன்னும் கவனம் செலுத்தி யிருக்கலாம். கலை இயக்குநர் மறைந்த சந்தானத்துக் குத்தான் படத்தில் அதிக வேலை. அதை கவனமா கவே செய்தி ருக்கிறார். இயக்குநர் செல்வகுமார் அந்த காலகட்டத்தை கண்முன் காட்டியிருக்கிறார்.

கொஞ்சம் குடிசை வீடுகள், ராபர்ட் வீடு, ஜஸ்டின் வீடு என குறுகிய வட் டத்திற்குள்ளேயே மொத்த பட மும் நகர்கிறது. சுதந்திரம் கிடைப்பது ஊர் மக்க ளுக்கு எப்படியும் தெரிந்துவிடும் என்ற உச்சக்கட் டத்தை ஆரம்பத்தி லேயே ஊகித்துவிடலாம்.

ஆனால், அது எப்படி தெரிய வரப் போகிறது என்ற பதை பதைப்பை திரைக்கதை யில் சேர்க்கத் தவறிவிட்டார் கள். இருப்பினும் 1947 காலகட்டத்தை ஓரளவுக்கு கண்முன் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்கள். அந்த உழைப்புக்காகப் பாராட்டலாம்.



# ரஜினி - கமல் இணைவு?

நடிகர் ரஜினிகாந்த் இப்போது நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் தயாராகி வரும் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறார். அடுத்த படத்தை அவரின் மூத்த மகள் இயக்குகிறார்.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்பு ரஜினிகாந்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் சந்தித்துள்ளார். ரஜினியின் 171ஆவது படத்தை இயக்குமாறு லோகேஷ் உடன் பேச்சு நடைபெற்ற தாக கூறப்படுகிறது. இந்தப் படத்தை நடிகர் கமல்ஹாசனின் ராஜ் கமல் நிறுவனம் தயாரிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

# ஒரே மாதம் இரு படங்கள்

தமிழ், மலையாள திரையுலகில் கடந்த 18 வருடங்களாக தனக்கென தனி யான இடத்தைத் தக்க வைத்துள்ளார் ரம்யா நம்பீசன்.

திரையுலகில் நடக்கும் பெண்களுக்கு எதிராகவும் அவர் குரல் கொடுத்து வருகின்றார். இதனால், மலையாள திரை யுலகில் இருந்து மறைமுகமாக ஓரம் கட்டப்பட்டார்.

இந்த நிலையில் அண்மையில் வெளியான மலையாளத்தில் கேரள திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் தயாரிப்பாக உருவாகியுள்ள "பி 32 முதல் 44 வரை" படத்தில் நாயகியாக நடித் துள்ளார். இதேநேரம், விஜய் ஆண்ட னியுடன் இவர் நடித்த தமிழரசன் பட மும் வரும் 14ஆம் திகதி வெளியாகிறது.





# த்ரிஷாவின் புதிய படம்

தற்போது, விஜயுடன் லியோ படத்தில் நடித்து வரும் திரிஷா, மலையாளத்தில் ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மோகன்லால் நடித்து வரும் ராம் என்ற படத்திலும் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தின் முதல் பாகத்தின் படப்பிடிப்பு துனிசியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் நடைபெற்று வரும் நிலையில் மோகன்லாலுடன் இணைந்து த்ரிஷாவும் நடித்து வருகிறார். இந்த நிலையில் இந்த ராம் படமும் இரண்டு பாகங்களாக உருவாக இருப்பதாக தற்போது தகவல் வெளியாகியிருக்கிறது.

# ரூ. 100 கோடி வசூல்!

சிறீகாந்த் ஒதலா இயக்கத்தில், சந்தோஷ் நாராயணன் இசைய மைப்பில், நானி, கீர்த்தி சுரேஷ் மற்றும் பலர் நடிப்பில் கடந்த வாரம் வெளிவந்த தெலுங்குப் படம் "தசரா".

இந்தப் படம் 100 கோடி (இந்திய) ரூபாய் வசூலைக் கடந்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்கள். நானி கதாநாயகனாக நடித்த பட மொன்று 100 கோடி வசூலைக் கடப்பது இதுவே முதல் முறை. இதன் மூலம் தெலுங்கில் முன் னணி நாயகனாக அவர் மாறி யுள்ளார்.



# அடுத்த பருவத்தில் மெஸ்ஸியின் அணி எது?

உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவனாக வலம் வருபவர் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி. கழக அணிகளில் பாரிஸ் சென் ஜெர்மைன் அணிக்காக விளையாடி வருகின்றார். இந்த நிலையில் அடுத்த பருவ காலத்தில் மெஸ்ஸி இன்னோர் அணிக்காக விளையாடக்கூடும் என்று கூறப்படுகின்றது.


ஆர்ஜென்ரீனாவின் தலைவரான மெஸ்ஸிக்கு சவூதி அரேபியா, அமெரிக்காவின் பிரபல கழகங்களிடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவரின் தாய் அணியான பார்ஸிலோனாவும் அவரை மீண்டும் அழைக்கிறது.

2024 கோபா அமெரிக்க கிண்ண தொடர் வரை பாரிஸ் சென் ஜெர்மைன் அணியில் மெஸ்ஸி விளையாடுவார். இந்த நிலையில், அடுத்த பருவத்துக்காக மெஸ்ஸியை தற்போதைய சம்பளத் தொகையிலேயே விளையாடுமாறு கேட்கிறது. ஆனால், உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் மெஸ்ஸியின் மதிப்பு கணிசமாக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், அவர் தொடர்ந்தும் அதே தொகையில் ஆட விரும்பவில்லை என்று தெரிகிறது.

இந்த நிலையில் மெஸ்ஸி, “ஒப்பந்த காலம் முடியும்வரை பி. எஸ். ஜி. அணிக்காக விளையாடுவேன். அடுத்த ஒப்பந்தம் என்பது இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்”, என்று கூறியுள்ளார்.

இந்த நிலையில், மெஸ்ஸியை ஒப்பந்தம் செய்ய உலகெங்கிலும் பல கழகங்கள் முண்டியடிக்கின்றன. இதில், கட்டார் நாட்டின் அணிகளின் உரிமையாளர்களின் அழுத்தம் அதிகமாகவுள்ளது. அவர்கள் அதிக பணத்தை மெஸ்ஸிக்காக வழங்க தயாராக உள்ளார்கள். ஆனால், இப்போதைக்கு மெஸ்ஸி அணி மாற உடன்படவில்லை.

இதேவேளை, 2021ஆம் ஆண்டு நிதிச் சிக்கல்களால் பார்ஸிலோனா அணி மெஸ்ஸியை விடுவித்தது. இதன் பின்னர், அந்த அணி ஐரோப்பிய கழக போட்டிகளில் பெரும் தோல்விகளை சந்தித்து வருகின்றது. இந்த நிலையில், மெஸ்ஸியின் தந்தையான ஜோர்ஜ் மெஸ்ஸியை பார்ஸிலோனாவின் தலைவன் ஜோன் லபோர்டா விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசியுள்ளார். இந்த சந்திப்பு மெஸ்ஸியை மீண்டும் பார்ஸிலோனாவுக்கு அழைப்பதாகும் என்று பேச்சடிபடுகிறது.






இரு ஆண்டுகளுக்கு முன்னர் குறைக்கப்பட்ட ஊதியத்துடன் பார்ஸிலோனா அணிக்காக விளையாட மெஸ்ஸி தயராக இருந்தார். ஆனால், இறுதியில் பார்ஸிலோனா நிர்வாகம் மனம் மாறியது. இதனால், மெஸ்ஸி விடுவிக்கப்பட்டார். எனினும், இப்போதும் பார்ஸிலோனாவின் நிதி நிலைமை பெரியளவில் மாறவில்லை. இந்த நிலையில், மெஸ்ஸி போன்ற பெரிய வீரர்களை அந்த அணி எப்படி கொண்டு வரும் என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

ஆனால், பார்ஸிலோன அணி தரப்பு, நிச்சயமாக மெஸ்ஸி தரப்புடன் பேசுகிறோம் என்று கூறியுள்ளது. எனினும், மெஸ்ஸியை கவரக்கூடிய நிதிச் சலுகையை பார்ஸிலோனா அறிவிக்கவில்லை என்றும் அணித் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம், சவூதி அரேபிய அணிகளில் ஒன்றான அல் ஹிலாலுடன் ஒப்பந்தம் செய்யும் வாய்ப்பு மெஸ்ஸிக்கு கிட்டியுள்ளது.

சவூதியில் ஏற்கனவே உதைபந்தாட்டத்தின் மற்றொரு ஜாம்பவானான கிறிஸ்ரியானோ றொனால்டோ விளையாடி வருகிறார். 400 மில்லியன் யூரோக்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 14 ஆயிரத்து 101 கோடி ரூபாய்க்கு மேல் ஒரு பருவ காலத்துக்கு பெறுகிறார். இந்த நிலையில், அமெரிக்காவின் மியாமியை மையமாகக் கொண்ட இன்ரர் கழகம் மெஸ்ஸியை 400 மில்லியன் யூரோவை வழங்க முன்வந்துள்ளது. இதனிடையே, மெஸ்ஸியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான செர்ஜியோ புஸ்கெட்ஸ் அந்த அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார். இதுவும் மெஸ்ஸி இன்ரர் அணிக்காக விளையாடும் வாய்ப்பை அதிகரித்துள்ளது என்றே கூறலாம்.



•

# ஐ. பி. எல்லுக்கு உற்சாகமூட்டும் மங்கையர்!



ஐ. பி. எல். எனப்படும் இந்தியன் பிறீமியர் லீக் உலகில் மிகவும் பிரபலமான கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றாகும். இதில் இந்திய மற்றும் சர்வதேச வீரர்கள் ஐ. பி. எல். கிண்ணத்துக்காக - மிகப்பெரிய பணப் பரிசுக்காக விளையாடுகின்றனர். மக்கள் ஐ. பி. எல்லை பார்ப்பதற்கு மற்றொரு காரணம் கவர்ச்சியான சியர்லீடர்கள் எனப்படும் உற்சாகமளிக்கும் மங்கையர் தான் .

ஐ. பி. எல். போட்டிகள் எப்போதும் அழகான மற்றும் கவர்ச்சியான உற்சாகமூட்டும் பெண்களுக்கும் பிரபலமானது. அவர்கள் போட்டிகளின்போது கூட்டத்தை மகிழ்விக்கின்றனர். இந்த ஆண்டும் வழமை போன்றே உற்சாகமூட்டும் மங்கைகள் துள்ளலான நடன அசைவுகள் மற்றும் கண்கவர் அழகுடன் ஜொலிக்கிறார்கள். இவர்களின் உடைகள் பெரும்பாலும் அந்தந்த அணிகளின் சீருடையை ஒட்டியே வடிவமைக்கப்பட்டிருக்கும்.

உற்சாகமூட்டும் பெண்கள் தங்கள் அழகிய நடை மற்றும் நடனத்தால், கிரிக்கெட் மைதானத்தில் அமர்ந்திருக்கும் ஒட்டுமொத்த ரசிகர்களின் கவனத்தையும் ஈர்க்கிறார்கள். வீரர்கள் சிக்ஸர்கள், பௌண்ட்ரிகள் விளாசும்போதும் மற்றும் விக்கெட்களை வீழ்த்தும் போதும் ரசிகர்களை மகிழ்விக்கிறார்கள். அதே உற்சாகமூட்டும் பெண்கள் வீரர்களுக்கும் உற்சாகமளிக்கிறார்கள்.

இந்தியன் பிறீமியர் லீக்கில் உள்ள பெரும்பாலான உற்சாகமூட்டும் பெண்கள் இந்தியாவை சேராத வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். அனைத்து அணிகளிலும் இந்திய முகங்கள் அரிதாகவே உள்ளன.

ஊடக அறிக்கைகள் மற்றும் ஆதாரங்களின்படி, ஒவ்வோர் அணிக்கும் ஐ. பி. எல். உற்சாகமூட்டும் பெண்கள் ஒரு போட்டிக்கு 63 ஆயிரம் ரூபாய் (இலங்கை மதிப்பில்) முதல் ரூ.76 ஆயிரம் வரை ஊதியம் பெறுகிறார்கள். அவர்களின் செயல்திறன் சிறப்பாக இருந்தாலோ அல்லது அவர்களின் அணி போட்டியில் வெற்றி பெற்றாலோ ஊக்கத் தொகையையும் பெறுகின்றனர்.

சம்பளம் தவிர, அவர்கள் இந்தியாவில் தங்கியிருக்கும்போது ஆடம்பர தங்குமிடம், தினசரி உணவு மற்றும் பிற வசதிகள் போன்ற சலுகைகளையும் பெறுகிறார்கள். ஐ. பி. எல். உற்சாகமூட்டும் அழகிகள் நடனம், மொடலிங் ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் ஒரு குழுவின் ஒரு பகுதியாக இருந்து ஒரு குழுவாக தேர்வில் சிறப்பாக செயல்பட்டால் அது ஒரு கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது. ஐ. பி. எல். உற்சாகமூட்டும் பெண்களுக்கான தேர்வு செயல்முறை கடுமையானது மற்றும் நேர்காணல்கள் மற்றும் சில தேர்வுகளை கொண்டுள்ளது.

உற்சாகமூட்டும் பெண்களை தெரிவின்போது ஒரு செயல்திறனுக்கு தயாராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உற்சாகமூட்டும் பெண்கள் ரசிகர்களை உற்சாகப்படுத்துவது மட்டுமின்றி, ஒரு தடகள வீரருக்கான தகுதிகளுடன் இருக்க வேண்டும் என்கிற கருத்துரு நிலைப்பெறத் தொடங்கியுள்ளது.

அமெரிக்காவில் உருவான பல படங்களில் உற்சாகமூட்டும் பெண்கள் பற்றி 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு காட்சிப்படுத்தப்பட்டன. அதன்பிறகு, உற்சாகமூட்டும் பெண்களின் புகழும் பரவத் தொடங்கியது.



உற்சாகமூட்டுதல் என்பதை ஒரு விளையாட்டாக சர்வதேச ஒலிம்பிக் சங்கம் டிசெம்பர் 2016இல் அங்கீகரித்தது. கடினமான நடன அசைவுகள் மட்டுமல்லாது, உயிருக்கே ஆபத்தான சில பயிற்சிகளையும் செய்யக் கூடிய இவர்களது பணி, பல நேரங்களில் அவர்களுக்குக் கடுமையான காயங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. தற்போதைய சூழலில் தொழில்முறையாக மட்டுமல்லாது தனித்துவமாகவும் உலக அளவில் உற்சாகமூட்டும் பெண்கள் இலட்சக்கணக்கான குழுக்கள் இயங்கி வருகின்றன.

# வரலாற்றின் சாட்சியாக திகழும் ஓவியங்கள்

## கமலா வாசுகியின் படைப்புகளின் கடந்துவந்த காலத்தைப் பார்த்தல் (1983 - 2023)



ஆங்கிலத்தில் - பொன்னி அரசு
தமிழில் - இரா.சுலக்ஷனா

கமலா வாசுகி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் வடஇலங்கையில் நவீன ஓவியங்களைப் பிரபலப் படுத்திய முன்னோடிக் கலைஞரும், ஓவிய ஆசிரியரு மான அ.மாற்கு (மார்க் மாஸ்டர்) அவர்களால் பயிற்று விக்கப்பட்டவர். உள்நாட்டு யுத்தம் இலங்கையின் கிழக்கு வடக்கில் பலவீனமான சூழ்நிலைகளை உரு வாக்கியிருந்தபோதிலும், யுத்த சூழலில் வாழ்ந்து கொண்டு தொடர்ச்சியான ஓவியச் செயற்பாடுகளைத் தக்கவைத்துக் கொண்ட ஒரே பெண் காண்பியக்கலை ஞராக இவர் உள்ளார்.

இவர் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியினதும், யாழ் பல்கலைக்கழகத்தினதும் மாணவி யாகவும், பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் முற்போக்குக் குழுக்களின் இளம் தன்னார்வலராகவும் பல அனுபவங்களைப் பெற்று வளர்ந் தவர். 1995ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர், சமாதானம், வன்முறையற்ற வாழ்வு மற்றும் நீதிக்கான பெண் செயற் பாட்டாளர்களின் ஓர் அங்கமாகப் பயணப்பட ஆரம்பித்தார்.



இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த சமூக மாற்றத்திற்கான காண்பியக்கலை ஞர்கள் மற்றும் கலை இலக்கிய ஆர்வ லர்களுக்கு வழிகாட்டியாகவும் செயற் பட்டு வருகின்றார். மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக் கான நண்பர்கள் குழு, பாடினிகள் (சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலை யத்தினது கலாசாரக் குழு), வன்முறை யற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைஞர்கள், மற்றும் சமதை (இலங்கை யில் நீதிக்கான பறை அறையும் ஒரேயொரு பெண்கள் குழு) போன்ற பல்வேறு சமூக மாற்றத்திற்கான குழுக்களை உருவாக்குவதில் மட்டக்களப்பில் ஒரு பங்காளராக இருந்து வருகிறார்.

வாசுகியின் ஓவிய நுட்பங்கள் உயிர்ப்பானவை, மற்றும் காலத்துடன் மாறி வந்துள்ளவை. வாசுகியின் படைப்புகளை ஒன்றாகப் பார்க்கின்றபோது அவற்றின் நுட்பம், பாணி மற்றும் நிறப்பயன்பாட்டின் மூலம் அவற்றின் பயணத்தை கண்டுபிடிக்க முடியும். அவர் கலையை உருவாக்கும் சூழல்கள் சார்ந்த பிரதிபலிப்பாக இவை இருப்பதாக விளக்கம் கொள்ளலாம், அந்த விளக்கம் உண்மையானதாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவுமே இருக்கின்றது.

இந்தத் தெரிவுகளைப் பற்றி வாசுகியிடம் கேட்டால், "எனக்குக் கிடைக்கக் கூடியதாக அல்லது பயன்படுத்தக் கூடியதாக இருக்கிற எந்தப் பொருட்களைக் கொண்டும் நான் கலைப்படைப்புகளை உருவாக்குகிறேன்" என்று மிகச் சாதாரணமாக சொல்லுவார்.
கலையாக்கத்துக்கான பொருட்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத யுத்த சூழலிலும், வாசுகியாலும் ஏனையோராலும் மார்க் மாஸ்டர் என்று அன்பாக அழைக்கப்படும் ஆசிரியரான அ.மாற்குவின் வழிநடத்தல் ஊடாக கையில் கிடைக்கக்கூடிய காகிதத்தாள்கள், நிறங்கள் என எந்தவொரு மூலப் பொருட்களைக் கொண்டும் கலைப்படைப்புகளை இவர் செய்திருந்தார்.

இவர் முடிந்த பேனைகள் மற்றும் சவக்காரக்கட்டிகளில் சிற்பங்களை யும் செய்திருந்தார். போர்ச்சூழலில் சவக் காரங்கள் வாங்கமுடியாத சூழ்நிலையில் அந்தச் சவக்காரச் சிற்பங்கள் அவரது வீட்டிலுள்ளவர்க ளால் பயன்படுத்தப் பட்டன. தனது கையில் கிடைக்கும் எந்தக் கடதாசி யிலும் அவர் வரைந்தார். வாசுகியின் படைப்புகளை ஒன்றாகப் பார்க்கும் போது, அவை நிலவுருக்கள் கோட்டோவியங்கள், கழுவுதல் பாணி ஓவியங்கள், கேலிச்சித்தி ரங்கள் மற்றும் தாபானக்கலைகள் எனப் பலவாக இருப்பதை அவ தானிக்க முடியும்.

இலங்கைத்தீவின் பல்வேறு பிர தேசங்களில் வாழ்கின்ற பெண்களு டன் இணைந்து அவர்கள் தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் துணிகள், பொருட்கள், சேலைகள், பூக்கள், தானியங்கள் மற்றும் இன்னும் பிற பொருட்களைக் கொண்டு அவர்களது சொந்தக்கதை களை சொல்வதற்காக உருவாக்கப்பட்டவையாக இவரின் கூட்டுக்கலைச் செயற்பாடுகள் இருக்கின்றன.

வாசுகியின் முதலாவது தனியான ஓவியக்கண்காட்சி 1989இல் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது. பின்னர் தனியாகவும், கூட்டாகவும் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும், அதேநேரம் நேபாளம், அவுஸ்ரேலியா மற்றும் நெதர்லாந்து போன்ற வெளிநாடுகளிலும் பல்வேறு காண்பியக்காட்சிகளை நடாத்தியுள்ளார்.

வாசுகியின் கலைச்செயற்பாடுகள் அவரின் வாழ்வி யல் அனுபவங்கள் மற்றும் பெண்ணிலைவாத நோக்கி லான உலகம் பற்றிய பார்வையில் வேர் கொண்டவை. அவர் தனது கலைப்படைப்புகளை உருவாக்கத்



தொடங்கியதிலிருந்து கிட்டதட்ட 35 வருடங்களுக்குப் பிறகு அவர் வாழ்ந்த காலத்தின், கடந்து வந்த பாதை யில் அவரின் கலைப்படைப்புகள் வரலாறுகளின் சாட்சியங்களாகின்றன.

அவருடைய ஓவியங்களில் குறிப்பாக "1996 இல் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி", "என் குழந்தை போருக்கல்ல" போன்ற ஓவியங்கள் பெண் மற்றும் பெண்ணிலைவாத நோக்கில் யுத்தவரலாற்றின் முக்கிய குறியீடுகளாகின் றன. சமீபகாலமாக இவரின் ஓவியங்கள் இலங்கையில் நடந்த போர் உட்பட கடந்த 30 வருட வரலாறுகளை கற்பிப்பதற்கான கற்பித்தல் ஊடகமாக பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

வாசுகியின் செயற்பாடுகள் கடந்த நான்கு தசாப்தங் களாக இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கின் வரலாறு களை அறியவும், புரிந்துக்கொள்ளவும், உய்த்துணர்வு மான சுவடியாக்கமாகவும், வழிமுறையாகவும் அமை கின்றன. வாசுகி சமகால இலங்கையில் தொடர்ந்தும் கலைத்துவ சாட்சியாகவும் - வர்ணணையாளராகவும் இருந்து வருகின்றார். சமகால யதார்த்த நிலைமைகளை பொறுப்புடன் அணுகும் வகையில், குறிப்பாக கொவிட் தொற்று, பொருளாதார நெருக்கடி, சமூகமாற்றம் மற்றும் நீதி தொடர்பாகத் தொடரும் போராட்டங் களை அவரது படைப்புகளாக உருவாக்கியுள்ளார்.

கமலா வாசுகியின் "கடந்துவந்த காலத்தைப் பார்த் தல் - 2023" ஒரு தனியாளின் படைப்புப் பற்றி சொல் லும் தனியாள் வரலாறல்ல. மாறாக இலங்கைத்தீவின் கிட்டதட்ட நான்கு தசாப்த வரலாறுகளின் சாட்சியங்க ளாகவும், இந்த மண்ணின் சாதாரண மக்களின் வரலாறு களின் சாட்சியங்களாகவும், அவர்கள் தொடர்ந்து அனுபவித்து வரும் அவலங்கள், வன்முறைகள், எதிர்ப்புகள், நீதிக்கான கோரிக்கைகளின் நிலையான வரலாற்று சாட்சியங்களாகவும் விளங்குகின்றன.

அதேநேரம் எளிமையான மற்றும் தூய்மையான இந்தத்தீவின் முழுமையான அழகும், இத்தீவின் மக்க ளும் வாசுகியின் கோடுகள் வண்ணங்கள்வழி எட்டிப் பார்க்கின்றன. வாசுகியின் இக்கலைப்படைப்புகள் கடந்து வந்த காலத்தை வெளிப்படுத்துவதனூடாக முழுமையானதும் தொகுக்கப்பட்டதுமான வரலாற்றை எமக்கு வழங்குகின்றன.

---




**ம. பிரதீபன் குருநகர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** வெடுக்குநாறி மலையில் உடைத்தழிக்கப் பட்ட ஆதிசிவன் கோவிலில் சிவலிங்கத்தை மீண்டும் பிரதஷ்டை செய்வேன் என்று சூழுரைத்திருந்த அமைச் சர் ஜீவன் தொண்டமான், கடந்த ஞாயிறன்று அங்கு விஜயம் செய்திருந்தபோதிலும் அங்கு அவர் முன்னர் குறிப்பிட்டதுபோல சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்யாமலே கொழும்பு திரும்பிவிட்டாரே?

**வியுக்தியார்:** அந்த ஆலய விவகாரம் நீதிமன்றில் இருப்பது அவருக்கு அங்கு வந்த பின்னர்தான் தெரிய வந்ததோ என்னவோ. ஆனாலும் அவர் அங்கு வரும் போது தன்னுடன் சிவலிங்கத்தை எடுத்து வந்ததாகவும் தெரியவில்லையே. இப்படித்தான் சில வருடங்களுக்கு முன்னர் கன்னியா வென்னீரூற்று கோவில் விவகாரம் திருகோணமலையில் பற்றி எரிந்துகொண்டிருந்தபோது, அந்த விவகாரத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, இடைக்காலத் தடை பெற்றதும் பரபரப்பாக பேசப்பட் டது. ஆகா பார்த்தீர்களா நாங்கள் எங்கள் சட்ட அறி வால் சாதித்துவிட்டோம் என்று துள்ளிக்குதித் தார்கள். ஆனால் இப்போது அந்த விவகாரம் முடிந்துவிட்டது.

அதுபோலத்தான், இன்னும் கொஞ்ச நாளில் வெடுக் குநாறி விவகாரம் நமக்கு மறந்தே போய்விடும், பிறகு வெடியரசன் கோட்டை பிரச்சினையை கையில் எடுப் போம், பிறகு அதைவிட்டு மற்றுமொன்று. இப்படியே ஒவ்வொரு இடங்களும் பறிபோய்க் கொண்டிருக்க நாமும் இடங்களை மாற்றி மாற்றி போராடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

---

**வை. தனராஜ் உவர்மலை, திருகோணமலை.**

**கேள்வி:** புதிய பயங்கரவாத தடைச்சட்டம் முன்னை யதைவிட ஆபத்தானது என்று அனேகமாக எல்லோ ருமே சொல்கிறார்களே? அப்படியெனில் முன்னர் இருந்தது ஆபத்தானது என்பது இவர்களுக்கு இப்போதுதான் தெரிந்ததா?

**வியுக்தியார்:** அது தமிழர்களை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு அது ஆபத்தானது என்பது தெரியவில்லைப்போலும். அது அரகலய காரர்களுக்கு எதிராக பாய்ந்தபோதுதான் அதன் ஆபத்து அவர்களுக்கு புரிந்திருக்கவேண்டும். தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தீவிரம டைந்திருந்த போது தனது பதவியை அவர்களிடமி ருந்து பாதுகாக்க பயங்கரவாத தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தார் ஜே.ஆர். ஜெயவர்த்தன. இப்போது தனது பதவியை தக்கவைக்க தனக்கு எதிராக போராடும் சிங்கள இளைஞர்களை இலக்குவைத்து புதிய சட் டத்தை கொண்டுவருகிறார் அவரது மருகர் ரணில் அவ்வளவுதான்.

---

**கே. தினேஸ், பெரிய உப்போடை, மட்டக்களப்பு.**

**கேள்வி:** இலங்கையின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும் என உலகவங்கி குறிப்பிட் டுள்ளது. ஆனால், இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் வீழ்ச்சியடைந்த பின்னரே மீண்டும் 2024 இல் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளதே. இவர்கள் ஏன் இப்படிக் குழப்புகிறார்கள்?

**வியுக்தியார்:** சவால்களை எதிர்கொள்ளும் என்று மிரட்டிக் கொண்டிருந்தால் தான், இலங்கை அவதான மாக இருக்கும் என்று உலக வங்கி நினைக்கிறதோ தெரியவில்லை. வரி அதிகரிப்பு, அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது என்று கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வைப்பதற்காக உலக வங்கி மிரட்டுவதா கவே தெரிகின்றது. மற்றைய வங்கி, தற்போதைய மாற்றங்களைத் தொடர்ந்து ரணிலுக்கு கிடைத்திருக்கும் மக்கள் ஆதரவை தக்கவைக்க நினைக்கின்றதோ என்னவோ?

# ஒரு விநாடி

தேவகி கருணாகரன்
(சிட்னி)



(கடந்த வாரத் தொடர்ச்சி)

யு.ரி.எஸ் பல்கலைகழகத்தில் முகுந்தன் பொறியியலும் நான் வர்த்தகமும் படித்துக் கொண்டிருந்தோம். அங்கு தான் எங்கள் நட்பு ஆரம்பித்தது. நாளடைவில் எங்கள் நட்புக் காதலாக மாறியது. முகுந்தனின் பெற்றோர் முத லில் எங்கள் கல்யாணத்திற்கு இணங்கவில்லை. அவர்க ளைச் சம்மதிக்க வைக்க ஒரு வருடம் சென்றது. இப்போ எங்களுக்கு கல்யாணமாகிப் பத்து வருடங்கள் ஆகிறது. எங்களுக்கு இடையே அடிக்கடி வாக்கு வாதம் நடக்கும். இரண்டு நாட்களுக்கு ஒருவரோடு ஒருவர் கதையாமலே இருப்போம், பிறகு நேசமாயிடுவோம். ஊடலுக்குப் பின் கூடல் இருக்கிறதே அது ஒரு தனி சுகம், ஒரு சுகமான இன் பம். ஆனால் சமீபத்தில் ஊடல் அதிகரித்துக் கொண்டு போகக் கூடல் குறைந்து கொண்டே போயிற்று. எங்கள் தாம்பத்திய உறவில் ஒரு பெரிய இடைவெளி வந்துவிட் டதை உணர்ந்தேன்.

அவுஸ்திரேலியாவில் கணவன் மனைவி இருவருமே வேலைக்குப் போகிறார்கள். முன்னேறிச் செல்லும் நாட் டிலே பணம் இருந்தால் தான் நாமும் முன்னேறலாம் இல் லையேல் எங்களை எங்கட சனமே மதிக்காது. பெரிய பெரிய ஆசைகள். அதை மெய்யாக்க குடும்பத்தில் இருவ ரின் சம்பாத்தியம் ஒரு கட்டாயமாகிவிட்டது. ஊரிலே போல் ஒன்பது மணியிலிருந்து ஐந்து மணியோடு வேலை முடிவதில்லை. இங்கே இரவு ஏழு எட்டு மணி வரை இருந்து வேலை முடிக்க வேண்டிய நிலை. இல்லையேல் வேலையை இழக்க வேண்டி வரும். வேலை முடித்து வீட்டே வரும் போது தலைக்குள்ளே வேலையின் பளு வையும் காவிக் கொண்டு வந்திடுறோம். வீட்டே வந்தா சமையல், வீட்டு வேலை, பிள்ளைகளின் வேலை இப்ப டியே ஓயாத ஓட்டம். இயந்திரமாக இயங்கிறோம். வீட் டிலே வேலைக்கு ஆள் வைக்கவும் கட்டுப்படியாகாது. இத்தனை அழுத்தங்களுக்கிடையே கணவனுக்கும் மனை விக்கும் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாக ஒரு அன்பு வார்த்தை சொல்ல எங்கே நேரம். கதைத்தால்.. அதை செய்தியா? இதை எடுத்தியா? என்ற அத்தியாவசியமான கேள்விகள் தான். அதுவும் வாக்கு வாதத்தில் தான் முடி கிறது.

முந்த நாள் ஆபிசில் நிறைய வேலை. உடல் களைப் போடு மன ரீதியாகவும் களைத்திருந்தேன். குழந்தைக ளைப் பகல் பராமரிப்பிலிருந்து அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். சமைத்து அவர்களுக்கு உணவு ஊட்டி, குளிக்க வார்த்து படுக்கையில் போடவும் முகுந் தன் வேலையால் வீட்டே வந்து சேர்ந்தார். அவரும் சாப் பிட்டு முடியும் வரை பொறுத்திருந்து விட்டு,

“முகுந்தன், என் அப்பாவுக்குக் குடுக்க வேண்டிய பத்தாயிரம் டாலரை அவர் எக்கவுண்டில் போடுவதற்காக பாங்கிற்கு போனேன். எங்கள் எக்கவுண்டில் அறுபது டாலர் தான் இருந்தது. பத்தாயிரத்தை நீங்கள் எடுத்தீங்களா?”

“மறந்தே போனேன் மது. வாணி அவசரமாகப் பத்தாயிரம் டொலர் வேணும் என்று கேட்டாள். அவசரம் என்றபடியால் உடனே குடுத்திட்டேன். உன்னிட்ட பிறகு சொல்லலாம் என்று நினைத்தேன், ஆனால் மறந்திட்டேன். அவள் திருப்பித் தந்ததும் மாமாவுக்குத் திருப்பிக் குடுத்திடலாம்” வெகு சாதாரணமாகச் சொன்னார். அவர் கவனம் புரட்டிக் கொண்டிருந்த ஆபீஸ் பைல் மேல் இருந்தது.

“அப்போ அப்பாவிற்கு மட்டும் காசு அவசரமில்லையா? நான் அவசரம் என்று கேட்டதால் அப்பா காசைத் தந்தார். நேற்று டெலிபோன் பண்ணிய போது பணத்தைத் திருப்பித் தந்தா உதவியாக இருக்கும் என்று சொன்னார். அப்பாவிற்குக் குடுக்க வேண்டியதை எப்படி உங்கள் தங்கைக்குக் குடுக்கலாம். அதுவும் என்னைக் கேட்காமல். உங்க தங்கை அல்லது உங்க ஆட்கள் என்ன கேட்டாலும் தூக்கிக் குடுத்திடுவீங்கள். என்னுடைய சொந்தங்கள் உங்களுக்கு இளக்காரம் தான்.” உடல் அலுப்பும் மன உளைச்சலும் சேரக் கட்டுப்பாடில்லாமல் வார்த்தைகளைக் கொட்டினேன்.

“தொடங்கியிட்டியே உன் சொந்தங்கள் என் சொந்தங்கள் என்று.”

“அது என் சம்பளப் பணத்திலே கொஞ்சம் கொஞ்சமாகப் சேர்த்துப் போட்ட பணம்.”

“ஆரம்பிச்சிட்டியா என் காசு உன் காசு என்று. சம்பாதிக்கிறோம் என்ற இறுமாப்பு உனக்கு”. உரத்துப் பேசினார் முகுந். அவர் இறுக்கமான முகமும் அக்கினிப் பார்வையும் என்னை மேலும் பேச வைத்தது.

“அப்பாவிடமிருந்து வாங்கும் போது காசை ஒரு மாதத்தில் திருப்பிக் குடுத்திடுவோம் என்று சொல்லித் தானே எடுத்தீங்க. இப்போ மூன்று மாதத்திற்கு மேலாகிறது. குடுத்த வாக்கைக் காப்பாத்த வேண்டாமா?”

“நான் மாமாவிடம் சொல்லிக் கொள்கிறேன். வாணி காசைத் திருப்பிக் குடுத்ததும் குடுத்திடலாம். அவசரமில்லை.”

“போன முறை வாணி கடனாக வாங்கிய காசை எங்கே திருப்பிக் குடுத்தா? பத்தாயிரத்தை நாளைக்கே அப்பாவின் பாங்கிலே போட்டிடுங்கோ. இல்லையேல் என்ன செய்வேனோ தெரியாது.” நான் பேசவில்லை. வேலையின் அழுத்தங்கள் பேசியது.

“என்ன செய்வாய்?” என்று என்னை முறைத்துப் பார்த்தார்.

எனக்கு உடம்பு ரத்தம் முழுவதும் தலைக்கு ஏறின மாதிரிச் சூடாயிற்று.

“முறைத்துப் பார்த்தா பயந்திடுவேனா? வாணியிடம் போய் நீ அதுக்கு இதுக்கு என்று கை மாத்தாக வாங்கின எல்லாக் காசையும் உடனே திருப்பத் தருமாறு கேட்கப் போறேன்.” வார்த்தைகளால் மல்லுக் கட்டிக் கொண்டு உடல் நடுங்க முகுந்தன் முன் நின்றேன்.

அடுத்து ‘பளார்’ என்ற ஒரு சத்தம். நான் கதி கலங்கிப் போனேன். தலைச் சுற்றியது.

“உனக்குப் பயித்தியம் பிடித்திட்டுதா?” முகுந்தன் கர்ஜித்தார்.

என் கன்னத்தில் விழுந்திருந்த ஐந்து விரல்களின் தழும்பைத் தடவியபடி அழுது கொண்டு ஓடிப் போய் பிள்ளைகளின் படுக்கையில் விழுந்தேன். கன்னத்தின் வலியை விட நெஞ்சிலே விழுந்த அடி சுரீர் என்று வலித்தது. இதயமே வெடித்து விடும் போல் அழுதேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் இரவு நான் தூங்கவேயில்லை. முகுந்தனுக்கு என் மேல் இருந்த காதல் முடிந்து விட்டது. அவருக்கு அவர் தங்கை தான் முக்கியமாகப் போய்விட்டாள். இல்லையேல் இப்படி அடித்திருப்பாரா? அவர் பேச்சும் செய்கையையும் என்னை வாட்டியது. கனத்த மனதோடு காலையிலே வேலைக்குப் புறப்பட்டு விட்டேன். இதயத்தின் வலியைப் போக்க வழி தெரியாது தவித்தேன். ரோட்டைக் கடக்கும் நடைபாதைக்கு வந்தேன். ஏதோ ஒரு உணர்ச்சி என்னை ஆட்டிப்படைத்து. ஒரு விநாடி என் சுய புத்தியை இழந்து வேகமாக வந்து கொண்டிருந்த டிரக் முன் சட்டென்று பாய்ந்தேன். என் பிள்ளைகளைப்பற்றியோ என் கணவரைப் பற்றியோ நினைத்தேனா? எனக்கு என் மன வேதனை முக்கியமாய்ப் போயிற்று இந்தச் செய்கையால் விளையப்போகிற பாரதூரமான விளைவுகளை எங்கே சிந்தித்தேன். ஒரு சின்னக் காசு விசயம். மேற்கத்திய தேசத்தின் வாழ்க்கைச் சூழ்நிலை என் குடும்பத்தை எப்படிப் பாதித்து விட்டது. வாழ்க்கையில் எதை இழந்தாலும் திரும்பப் பெற்றிடலாம். ஆனால் உயிர் போனால் திரும்பப் பெற முடியுமா?

என்னைச் சார்ந்தவர்கள், என் மேல் பாசம் வைத்திருந்தவர்களின் சந்தோசத் தையும், தாயில்லாமல் என் பிள்ளைக ளின் பிஞ்சு மனம் படும் வேதனையைப் பார்த்து நான் பதைக்கிறேன். என் இழப்பால், என்மேல் பிரியமானவர்கள் படும் துக்கம். என் முகுந் படும் அவஸ் தையைக் கண்டும் எதுவுமே செய்ய முடியாது இருக்கிற கொடுமையிருக்கி றதே, அது கொடுமையிலும் கொடுமை. அனலில் இட்ட புழுவாகத் துடிக்கி றேன். இந்த வசனத்தைக் கதைப் புத்தகங் களில் வாசித்திருக்கிறேன், நீங்களும்தான் வாசித்திருப்பீர்கள். அந்தப் புழுவின் வேதனையை இப்போது நான் நிஜமா கவே அனுபவித்துக் கொண்டிருக்கி றேன். தற்கொலை பண்ணிக் கொள்பவர்களின் நிலை இது தானா? இறைவனின் தண்டனை இதுதானோ?

●

ஈழநாடு



# நேபாள மக்கள் போராட்டத்தின் பின்னடைவும் மன்னர் ஆட்சி அகற்றிய விளைவும் - படிப்பினைகளும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இமாலயத்தின் உச்சத்தில், இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் 1996 இல் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டமானது நேபாள மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சியை உருவாக்கும் நோக்குடன் இடதுசாரி மாவோயிசவாத போராளிகளால் நடத்தப்பட்ட எழுச்சியாகும்.

சமவுடமைவாத போராளிகள் இப்போரை "நேபாள மக்கள் போராட்டம்" என அழைத்தார்கள். 1996 பெப்ரவரி 13 இல் ஆரம்பிக்கப்பட்ட நேபாளத்தின் கிராமப்புறங்களில் மாவோயிஸ்டுகளின் மக்கள் யுத்தம் குறிப்பிட்ட கட்டத்துக்கு முன்னேறியிருந்த நிலையில், மன்னராட்சிக்கு எதிராக நகர்புறங்களில் இலட்சக் கணக்கில் மக்கள் திரண்டு போராடினர்.

**நேபாள மக்கள் இயக்கம்**

நேபாள மக்கள் இயக்கம் நேபாளத்தின் ஷா வம்ச மன்னர்களின் முடியாட்சி மற்றும் அரசியல் கட்சிகள் சார்பற்ற தேசியப் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பை அகற்றி, அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட்பட்ட பல அரசியல் கட்சிகள் கொண்ட ஜனநாயக ஆட்சியை நிறுவிட வலியுறுத்தி நேபாளி காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து இடதுசாரி முன்னனி அரசியல் கட்சிகள் இணைந்து நடத்திய மக்கள் போராட்டமாகும்.

இப்போராட்டங்களை நசுக்குவதற்காக, மன்னரின் கைப்பாவையான, தேசியப் பஞ்சாயத்து ஆட்சியினர், 17 பெப்ரவரி 1990 அன்று, அனைத்து அரசியல் கட்சிகளின் தேசிய மற்றும் மாவட்டத் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்ததுடன், நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளையும் தடை செய்தது. மேலும் அனைத்து ஊடகங்களின் செய்திகளும் தணிக்கை செய்த பிறகே வெளியிடப்பட்டது. செய்தித் தொடர்புகள் முழுமையாக துண்டிக்கபட்டது.

பின்னர் 1990 பெப்ரவரி இறுதியில் பக்தபூர் நகரத்தில் காவல்துறையினர் போராட்டக்காரர்களை சுட்டதில் 12 பேர் கொல்லப்பட்டனர். இதனால் ஜனநாயக அமைப்புக்கான போராட்டங்கள் நாடு முழுவதும் கலவரமாக மாறியதால், அனைத்து வணிக, கல்வி, தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன.

இறுதியாக நேபாள மன்னர் பிரேந்திரா போராட்டக்கார்களின் கோரிக்கைகளை ஏற்றார். போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. 8 ஏப்ரல் 1990ல் நேபாள அரசியல் கட்சிகள் மீதான தடை நீக்கப்பட்டது.

19 ஏப்ரல் 1990ல் நேபாளி காங்கிரஸ் கட்சியின் நேபாள பிரதம அமைச்சர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தலைமையில் புதிய அரசியல் அமைப்பு நிர்ணய மன்றம் அமைக்கப்பட்டது. நேபாளத்தில் மன்னரின் இறுதி முடிவுக்குட்பட்ட நேபாள அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றபட்டு, பல அரசியல் கட்சிகள் கொண்ட நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

**மன்னராட்சியை வீழ்த்திய போராட்டம்**



மன்னராட்சியை வீழ்த்த "மக்கள் நேபாள குடியரசு" என்ற இலக்கை கொண்டு போராடினார்கள். நேபாளத்தின் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்த அவர்களை 1998 ஜூன் தொடக்கம் ஆகஸ்டு வரை அப்போதைய பிரதமர் செர் பகதூர் தேவ்பாவினால், போராளிகளை கைப்பற்றி அழிக்கும் நோக்குடன் நடைமுறைப் படுத்தப்பட்ட "கிலோ சேரா 2" என்ற மூர்க்கமான நடவடிக்கை காரணமாக போராளிகள் தலைமறைவாகினர். அதன் பின் போராட்டம் மேலும் வலுக்கவும் வழிவகுத்தது.

அதன்பின் 2001 இல் நேபாள மன்னர் மாவோயிச போராளிகளுக்கு எதிராக இராணுவத்தை பயன்படுத்த ஆரம்பித்தார். அது முதல் 12,700க்கும் மேற்பட்டவர்கள் இறந்தும் 100,000 - 150,000 பேர்வரை இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

**அரசர் பிரேந்திரா கொலை**

அரசர் பிரேந்திரா மற்றும் அவரது குடும்பம் அவரது மகனான முடிக்குறிய இளவரசன் திபெந்திராவால் அரண்மனைக்குள் ஜூன் 1, 2001இல் கொலை செய்யப்பட்டார்கள். இளவரசர் தன்னை தானே சுட்டுக் காயங்கள் காரணமாக கோமா நிலைக்கு தாள்ளப்பட்டார்.

அதன்பின் ஜூன் 2, 2001 - முடிக்குரிய இளவரசன் தீபேந்திரா கோமா நிலையில் இருக்கும் போதே அரசராக அறிவிக்கப்படுகிறார். ஜூன் 4, 2001 - திபெந்திரா இறந்தார், பின்னர் கயனேந்திரா மன்னராக அறிவிக்கப்பட்டார். கயனேந்திராவுக்கு எதிரான ஆர்பாட்டங்கள் கத்மந்துவில் இடம்பெற்றதன் காரணமாக ஊரடங்குச்சட்டம் பிரப்பிக்கப்பட்டது.

ஆகஸ்டு 30, 2001 - அரசு, போராளிகள் சமதான பேச்சுவர்த்தையை ஆரம்பித்தனர். போராளிகள் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை தமது கோரிக்கையாக முன்வைத்தனர். நவம்பர், 2001 - மாவோயிசவாதிகள், 4 மாத போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் 15 இடங்களில் நடத்திய தாக்குதல்கள் காரணமாக 24 காவல் துறையினர் கொல்லப்பட்டனர்.

**நேபாள மன்னரின் அதிகாரம் பறிப்பு**

நவம்பர் 26, 2001 - கயனேந்திரா மன்னர் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார். நீண்ட போராட்ங்களின் பின்னர் இரண்டாம் ஜனநாயகப் போராட்டத்தின் முடிவில், 28 மே 2008ல், நேபாளத்தில் மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு, நாடாளுமன்ற சனநாயக ஆட்சி முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. நேபாளத்தை சமயசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

24 ஏப்ரல் 2006ல் தற்காலிக இடைநீக்கம் செய்திருந்த பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் செயல்பட நேபாள மன்னர் அனுதித்தார். நேபாளத்தின் தேசிய ஒற்றுமை மற்றும் வளமைக்கு நேபாளி காங்கிரஸ் - நேபாள கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் ஒன்றியம்) உள்ளிட்ட ஏழு கட்சிகளின் கூட்டணி அரசு அமைப்பதற்கு நேபாள மன்னர் ஞானேந்திரா அனுமதி வழங்கினார்.

28 ஏப்ரல் 2006ல் நேபாளப் பிரதம அமைச்சர் கிரிஜா பிரசாத் கொய்ராலா அறிவித்த மூன்று மாத போர் நிறுத்த ஒப்பந்தத்தை, மாவோயிஸ்டுகள் ஏற்றனர்.

**நேபாளம் சமய சார்பற்ற நாடானது**

18 மே 2006ல் நேபாள நாடாளுமன்றம், பெரும்பான்மையான வாக்குகள் பெற்று, நேபாள மன்னரின் அனைத்து அதிகாரங்களை பறித்து சட்டம் இயற்றிய போது, இராணுவத்தின் 90,000 படையினர் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் வந்தனர்.

நேபாள மன்னர் குடும்பங்கள் மற்றும் சொத்துகள் மீது வரி விதிக்கப்பட்டது. அரசவைக் குழு மற்றும் அரசவை ஆலோசனைக் குழு கலைக்கப்பட்டது. இராணுவத்தினர் மற்றும் ஆட்சியாளர்கள், அரசப் பட்டங்களை விலக்கினர். நேபாளம் சமய சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. புதிய தேசிய கீதம் இயற்றும் வரை, தற்போதுள்ள தேசிய கீதத்தை இசைப்பது நிறுத்தப்பட்டது.

நேபாள மன்னரிடம் இருந்த, இராணுவத்தின் உச்ச தளபதி பதவி பறிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தின் புதிய சட்டம், 1990 நேபாள மக்கள் இயக்கத்தால் உருவான 1990ம் ஆண்டின் நேபாள அரசியலமைப்பு சட்டம் நீக்கபட்டது.

மே, 18ம் நாள் ஜனநாயக நாளாக அறிவிக்கபட்டது. 29 மே 2008 அன்று நேபாள நாடாளுமன்றம் புதிய அரசியலமைப்பு சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியதால், நேபாளத்தில் முடியாட்சி முறை அகற்றப்பட்டு, நேபாளத்தை குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது.

**நேபாளப் போராட்டத்தின் பின்னடைவு:**

நேபாள மக்கள் புரட்சியின் முக்கிய பின்னடைவானது நேபாள ஜனநாயகக் குடியரசுக்கான புதிய நகல் அரசியல் சட்டமியற்றும் பணி, தீர்மானிக்கப்பட்ட காலக்கெடுவாகிய 2008 மே 27ஆம் தேதிக்குள் நிறைவுறாமல் போனது.

2008இல் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடந்தபோது,நேபாள மாவோயிஸ்டு கட்சியிடம் சக்திவாய்ந்த செம்படை இருந்தது. அது கலைக்கப்பட்டு, அப்படையின் ஒரு சிறுபிரிவு நேபாள இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பின்னர் இணைக்கப்பட்டது.

கடைசியில், இருப்பதையும் இழந்து புதிதாக எதையும் பெறாத நிலைக்கு நேபாள மாவோயிஸ்டு கட்சி தள்ளப்பட்டுள்ளது. இதுவும் நேபாள மக்கள் புரட்சியின் முக்கிய பின்னடைவாகவே கருத வேண்டும்.

நேபாள மன்னர் ஞானேந்திராவை அரண்மனையை விட்டு வெளியேறக் கோரி இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு நடத்திய மிகப் பெரிய போராட்டம், இறுதியில் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தையும் தியாகத்தையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்தது.

பின்னர் வந்த இடைக்கால அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தைக் கண்டு மக்கள் வெறுப்புற்றுனர்.

**செம்படை நேபாள இராணுவ இணைப்பு**

ஏறத்தாழ 19,000 பேர் கொண்ட செம்படையில் வெறும் 6,500 பேரை மட்டும் நேபாள இராணுவத்தில் சேர்க்கலாம் என்று பிற அரசியல் கட்சிகள் நிர்ப்பந்தித்ததை அப்படியே பிரசந்தாவும் பட்டாராயும் ஏற்றுக் கொண்டனர். எஞ்சியோரைக் கட்டாயமாக விருப்ப ஓய்வு பெறச் செய்து செம்படையிலிருந்து வெளியேற்றினர்.

இச்சரணடைவை ஆதரிப்போருக்கும் எதிர்ப்போருக்குமிடையே சக்திகோர் செம்படை முகாமில் மோதல்கள் நடந்தன. அதைத் தொடர்ந்து, ராயல் நேபாள இராணுவத்தை 15 செம்படை முகாம்களுக்கும் அனுப்பி ஆயுதங்களைக் கைப்பற்றி நடவடிக்கை எடுக்குமாறு பட்டாராய் உத்தரவிட்டார்.

**செம்படை கலைப்பு:**

இறுதியில், பிரசந்தாவும் பட்டாராயும் கட்சியால் அம்பலப்பட்டுப் போனார்கள். செம்படை கலைக்கப்பட்டு ஆயுதங்களும் பறிக்கப்பட்ட பிறகு, பிரசந்தாவும் பட்டாராயும் இதர கட்சிகளுடன் பேரம் பேசுவதற்கான ஆற்றலையே இழந்து விட்டனர்.

நேபாள மக்கள் புரட்சியின் மூலம் மன்னராட்சி அகற்றப்பட்டாலும், மக்களின் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை என்பதே வரலாற்றுப் படிப்பினையாக அறியப்படுகிறது. •







# உணவுப்பொருள்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டும்

கொழும்பு, ஏப். 09

உணவுப் பொருட்களை உரிய முறையில் பார்த்து கொள்வனவு செய்யுமாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சந்தையில் தற்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 25ஆம் திகதி வரை, உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் உணவுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

விசேடமாக பண்டிகை காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் மற்றும் அவற்றுக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பில் ஆராயப்படும்.

இதற்காக நாடளாவிய ரீதியில் சுமார் மூவாயிரத்து 200 அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதன்போது முறைகேடான சம்பவங்கள் இடம்பெற்றால் அவை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

அதேநேரம் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஏதேனும் செயற்பாடுகள் இடம்பெற்றால், அவற்றை 011 263 5675 என்ற பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தொலைபேசி இலக்கத்துக்கு பொது மக்கள் அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் - என்றார். (அ)

# சந்தையில் போட்டித்தன்மை ஏற்படுத்துவதால் பொருட்களின் விலைகளைக் குறைக்கமுடியும்

## வர்த்தக அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, ஏப். 09

சந்தையில் போட்டித்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உலக சந்தையில் விலை குறைவடைதல், மொத்த விற்பனை விலைகள் குறைவடைதல் - சில்லறை விற்பனை நிலையங்களில் விலை குறைவடையாமை ஆகிய காரணிகளுக்கிடையிலான முரண்பாடுகளைச் சந்தை போட்டித்தன்மையினூடாக மாத்திரமே நிறுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் மற்றும் நிறுத்தல் அளவை திணைக்களத்தின் மாவட்ட முகாமையாளர்கள் ஆகியோரை இணைத்து விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி, இந்த மாதம் முழுவதும் சந்தை நடவடிக்கைகளை கண்காணிக்கவும், முரண்பாடுகள் காணப்படுமாயின் அவற்றில் தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்மூலம், நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீளப்பெறுங்கள்!

## தொழிற்சங்க கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 09

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசு உடன் மீளப்பெற வேண்டும் என்று தொழிற்சங்க கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே தொழிற்சங்க பிரதிநிதிகள் இவ்வாறு வலியுறுத்தினர்.

"கடும் எதிர்ப்பால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசு தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது. இவ்வாறு ஒத்திவைக்காமல் அதனை வாபஸ் பெறுமாறு வலியுறுத்துகின்றோம்.

எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் மாநாடு நடத்தப்படும். அனைத்து தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. இதன்போது அடுத்தக் கட்ட நகர்வுகள் குறித்து முடிவெடுக்கப்படும்." - என்று அவர்கள் கூறினர். (அ)

# ஹற்றனில் ஆலங்கட்டி மழை

கொழும்பு, ஏப். 09

ஹற்றனில் நேற்று பிற்பகல் சுமார் 2.15 மணியளவில் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது.

இந்த ஆலங்கட்டி மழை சுமார் மூன்று நிமிடங்கள் நீடித்ததுடன் அதன் பிறகு கடும் காற்று, இடி மற்றும் மின்னலுடன் கடும் மழை பெய்தது.

ஆலங்கட்டி மழை காரணமாக தகரக் கூரைகளைக் கொண்ட வீடுகளில் அதிக சத்தம் காணப்பட்டது. (அ)

# வாகன விபத்தில் மாணவன் மரணம்

கொழும்பு, ஏப். 09

மாத்தளையில் உள்ள பாடசாலை ஒன்றில், உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர் குழுவொன்று பயணித்த, கப் ரக வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தளை - தொட்டகமுவ பகுதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, 9 மாணவர்கள் காயமடைந்த நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் பலாபத்வல பகுதியைச் சேர்ந்த 19 வயதான மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த மாணவர்கள், பலபாத்வல பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில், நட்புறவு ரீதியான சந்திப்புக்குச் சென்று மீண்டும் திரும்பும் வழியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







# படகு கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் தொழில் திறனை மேம்படுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 09

இலங்கையில் படகு கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில் திறனை மேலும் மேம்படுத்த இலங்கை கடற்படை முன்வந்துள்ளது.

குறிப்பாக படகுகளை சர்வதேச தரத்தில் வடிவமைப்பதில் புதிய யுக்திகளையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவது தொடர்பில் சந்திப்பொன்றை கடற்படையினர் நடத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வு வெலிசரவில் உள்ள கடற்படையினரின் படகு கட்டும் வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக தொழில்சார் தரப்பினர் புதிய முறைமைகளை அறிவதற்கான வாய்ப்புக்கள் எட்டியுள்ளன.

மேலதிக ஆலோசனைகளையும் கடற்படை எதிர்காலத்தில் வழங்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் கப்பல் கட்டும் பணிக்காக மென்பொருள் மற்றும் திறமையான மனித வளத்தை கடற்படையினர் பயன்படுத்துகின்றனர்.

கடற்படைத் தளபதியின் பணிப்புரைக்கு அமையவே இந்த நிகழ்வு கடற்படை பொறியியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# விவசாயத்துறைசார் உத்தியோகத்தர்களுக்கு நீண்டகால வெளிநாட்டுப் பயணங்கள் தடை!

கொழும்பு, ஏப். 09

விவசாயத்துறைசார் உத்தியோகத்தர்களுக்கு, நீண்டகால வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதி வழங்காதிருக்க அமைச்சர் மகிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து மாகாண விவசாய நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களும், இந்தத் தீர்மானத்துக்கு உட்பட்டவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

விவசாய ஆலோசகர்கள் போன்ற பல பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

எனவே, அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள், நீண்டகால வெளிநாட்டுப் பயணங்களுக்குச் சென்றால், நாட்டின் விவசாயத்துறையை வீழ்ச்சியடையச் செய்யும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

(அ)

# விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்கு கொடுப்பனவை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஏப். 09

2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி 500 ரூபாவாக இருந்த பரீட்சை விடைத்தாள் மதீப்பிட்டு கொடுப்பனவு தற்போது 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 81 கிலோமீற்றரை விட அதிக தூரத்தில் இருந்து மதிப்பீட்டுப் பணிகளுக்கு வருகின்ற ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு 2900 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வர்த்தக நிலையங்களில் பொருட்கள் விலை குறையவில்லை

வவுனியா, ஏப். 09

வவுனியாவில் பல வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை என்பதனால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நுகர்வோர் கேட்டுள்ளனர்.

பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகத்த நிலையில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை குறைப்பை அடுத்து சில பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் அவ்வாறான நிலைப்பாடுகள் இல்லை என தெரிவித்த நுகர்வோர், சதோச விற்பனை நிலையங்களிலும் பல பொருட்களைப் பெறமுடியாமல் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினர். (அ)

# போட்டிப் பரீட்சைகளை...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஓட்டத்திலிருந்து விலகிச் செல்வ தாகத் தெரியவில்லை. விதிவிலக்காக மிகக் குறைந்தளவிலான மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் உள்ளனர். இவ்வாறான ஒரு கல்வி முறையின் கீழ் வளர்க்கப்பட்வர்கள் தமது பாடங்களுக்கு அப்பால் உள்ள பொது விடயங்களிலும் நுண்ணறிவிலும் பின்தங்கியிருப்பதிலும் நம்பிக்கையுடன் போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்ள தயங்குவதிலும் ஆச்சரியப்பட இடமில்லை.

அடுத்த விடயம் பட்டதாரிகள் தமக்கு அரசாங்கம் கட்டாயம் வேலை வழங்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது. இந்த எதிர்பார்ப்பும் கூட மாணவர்கள் தமது பரந்துபட்ட அறிவையும் தனிப்பட்ட திறன்களையும் வளர்ப்பதற்குத் தடையாக உள்ளது. தனது ஒவ்வொரு குடிமகனுக்கும் வருமானம் பெறுவதற் கான வாய்ப்பை வழங்குதல் சமூக நலஞ்சார் அரசொன்றின் கடமையாகும். முன்னேறிய ஜனநாயக நாடுகளில் வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகளையும் உள்ளடக்கி 'வாழ்வதற்கான உரிமை' அடிப்படை உரிமைகளிலொன்றாக அரசியலமைப்பினால் உறுதி செய்யப் பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் அவ்வாறான ஏற்பாடுகள் அரசியலமைப் பில் இல்லை. எனவே பட்டதாரிகளுக்கு வேலைவழங்க வேண்டிய சட்டக் கடப்பாடு அரசாங்கத்துக்கு இல்லை. இலவச மாக கல்வியையும் தந்து வேலையும் தரவேண்டும். தரும் வேலையும் வீட்டுக் குப் பக்கத்தில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் மனநிலையிலிருந்து உயர் கல்வி கற்போர் விடுபட வேண்டும். வழங்கப்படும் கல்வி தொழிற் சந்தைக்கு ஏற்றவாறு மட்டுமல்ல சுயமாகத் தொழில் செய்வதற்கான அறிவையும் திறனையும் அதற்கு மேலாக மனப்பாங் கையும் வழங்கும் வகையில் மாற்றப்பட வேண்டும்.

உயர் கல்வி கற்க விரும்புவோர் இலங்கையில் மாறிவரும் அரசியல் பொருளாதார நிலைப்பாடுகளையும் தொழிற் சந்தை வாய்ப்புகளையும் புரிந்து கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும். பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக் கொள்கை விரிவடைவது டன் கல்வி போன்ற அடிப்படை தேவை களை வழங்குவதில் கூட தனியார் துறை ஊக்குவிக்கப்படும் நிலைமையே உருவாகி வருவதை உணரத் தவறக்கூடாது. இதனால் எதிர்காலத்தில் அரச வேலை வாய்ப்புகள் சுருங்கி தனியார் துறை வேலை வாய்ப்புகள் விரிவடையும் போக்குத் இப்போதே தொடங்கி விட் டது. தனியார் துறை என்பது ஆற்றல் கூடியவர்க்கே கதவைத் திறக்கும். தேவையான பல்துறை ஆற்றல்களைப் பாடசாலைக் காலங்களிலிருந்தே வளர்க்க முயல்வதுடன் தொழில் தகைமைகளுடன் கூடிய உயர்கல்வி யைப் பெறவேண்டும். அப்போது மட்டுமே பட்டதாரிகள் நாட்டின் வளமாகக் கருதப்படுவர். மாறாக ஏட்டுக் கல்வியுடன் போட்டிப் பரீட்சைகளின்றி அரசாங்கம் வேலை தரவேண்டும் என்று எதிர்பாப்போர் வருங்காலத்தில் நாட் டுக்கு மட்டுமல்ல வீட்டுக்கும் சுமையாகவே இருக்க வேண்டிவரும் என்பது கசப்பான உண்மையாகும்.

●

# புதிய பயங்கரவாத...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது பாரதூரமான துஷ்பிரயோகம் இடம்பெறுவதற்கான ஆபத்தை அதிகரிக்கிறது. சந்தேகநபரை விசாரணைக்கு முன்னரான தடுப்புக்காவலில் இருந்து தங்களின் காவலுக்கு பொலிசாரினால் திரும்ப எடுத்துக்கொள்ளமுடியும். சந்தேகநபரை "எந்தவொரு அதிகாரியின்" காவலுக்கும் பாதுகாப்பு செயலாளரினால் மாற்றமுடியும். இது சந்தேக நபர் சித்திரவதைக்கும் துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாகக் கூடிய ஆபத்தை தோற்றுவிக்கும்.

"சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதை தாமதிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு சட்டமா அதிபர் தீர்மானிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு "புனர் வாழ்வு" அளிப்பதற்கான திட்டங்களுக்கு ஒழுங்குவிதி களை பிறப்பிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு புதிய சட்டமூலம் வழங்குகிறது. பிறகு சட்டமா அதிபர் எந்தவொரு குற்றச் செயல் தொடர்பிலும் குற்றவாளியா கக் காணப்படாத நபர் மீதும் புனர்வாழ்வை திணிக்க முடியும். இதேபோன்ற ஒழுங்கு விதிகளை 2021 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது

"மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யக்கூடியதாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் வரையப்படும் வரை தற்போதைய பயங்கர வாத தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் முழு அளவிலான முடக்கத்தை செய்யவேண்டும்.

"பயங்கரவாதத்துக்கு எதிரான அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்த இலங்கையின் வரலாற்றினதும் அமைதிவழிப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளினதும் வெளிச்சத்திலேயே புதிய சட்ட மூலத்தை நோக்கவேண்டியது அவசியமாகும். இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு வாணிப முன்னுரிமைகள் மற்றும் ஆதரவு மூலம் "வெகுமதி" வழங்கப்பட மாட்டாது என்பதை இலங்கைக்கு அதன் சர்வதேச பங்காளிகள் தெட்டத்தெளிவாக உணர்த்தவேண்டும்" என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்சி கங்குலி அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, சட்டமூலம் வரவேற்கத்தக்க சில புதிய பாதுகாப்பு செயன்முறைகளை உள்ளடக்கியிருப்பதை அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. பொலிசாருக்கு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சான்றாக முன்வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படப்போவதில்லை. பெண் சந்தேகநபர்களை பெண் அதிகாரிகளே சோதனை செய்ய வேண்டும். கைதுக்கான காரணத்தை கூறுவதை வலியுறுத்தும் புதிய நடைமுறையும் உள்ளது. தங்களால் விளங்கிக் கொள்ள முடியாத மொழியில் இருக்கக்கூடிய ஆவணத்தின் மொழிபெயர்ப்பை சந்தேகநபர்களினால் பெற்றுக்கொள்ளமுடியும். தடுப்புக்காவலில் உள்ள நபர்களை 14 நாட்களுக்கு ஒரு தடவை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தவேண்டும். கைதி சித்திரவதை செய்யப்பட்டிருப்பதாக தோன்றினால் மாஜிஸ்திரேட் பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் சட்டமூலம் விளக்கியிருக்கிறது.

எது எவ்வாறிருந்தாலும், தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் கொடூரமானதாக புதிய சட்டமூலம் அமைந்திருக்கிறது என்பதே உண்மை. அரசாங்கத்துக்கு எதிரான எந்த வகையான போராட்டத்தையும் பயங்கரவாதச் செயல் என்று வியாக்கியானப்படுத்துவதற்கு வகை செய்வதாக அது அமைந்திருக்கிறது.

அரசாங்கத்தின் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிராக கேள்வியெழுப்புவதையோ அல்லது விமர்சிப்பதையோ பயங்கரவாத செயல் என்று வியாக்கியானப்படுத்த முடியும். அமைதிவழிப் போராட்டங்கள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் உட்பட அரசாங்கம் ஒன்றை பதவி விலகுமாறு அல்லது தவறான ஆட்சி முறைக்கு பொறுப்பான ஜனாதிபதியொருவரை வீட்டுக்கு செல்லுமாறு கோருவது முற்றிலும் நியாயபூர்வமானதே. ஆனால் புதிய சட்டமூலத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்தி அவற்றை பயங்கரவாத செயல்களாக வர்ணிக்க முடியும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டுவந்தபோது அது தமிழ் தீவிரவாத இயக்கங்களின் பிரிவினைவாத ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதையே முற்றிலும் நோக்கமாக கொண்டது என்று கூறி அன்றைய ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தென்னிலங்கையில் எதிர்ப்புக் கிளம்பாதிருப்பதை உறுதிசெய்துகொண்டது. அந்தச் சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்யப்பட்ட பல ஒழுங்குவிதிகள் குடியியல் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறுபவையாக இருந்தபோதிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் பேரில் தென்னிலங்கை அமைதியாக இருந்தது.

அதேபோன்றே இப்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்படுகின்ற வேளையில் பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாத அரசியல் உறுதிப்பாட்டுக்கு பாதகமாக அமையக்கூடியவை என்று மக்களின் நியாயபூர்வமான அமைதிவழிப் போராட்டங்களை வர்ணித்து அரசாங்கம் தென்னிலங்கையை அமைதியாக வைத்திருக்க முயற்சிக்கிறது.

ராஜபக்ச ஆட்சியில் படுமோசமான ஊழல் முறைகேடுகளுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்பானவர்களாக இருந்த அரசியல்வாதிகளும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டு பிறகு விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்ததும் மீண்டும் அதிகாரத்தை அனுபவிக்கத் தொடங்கியிருக்கும் ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகளும் புதிய சட்டமூலத்தின் தீவிர ஆதரவாளர்களாக குரல்கொடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஈழநாடு
Eelanadu

# பள்ளிவாசல் நிர்வாக தெரிவு கூட்ட மோதலில் ஒருவர் பலி!

## மூவர் கைது; சம்மாந்துறை பகுதியில் சம்பவம்

அக்கரைப்பற்று, ஏப். 09

பள்ளிவாசல் ஒன்றின் நிர்வாகத் தெரிவுக்கான ஆலோசனை கூட்டம் ஒன்றின் பின் இடம்பெற்ற சச்சரவில் ஒருவர் பலியானதுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செந்நெல் கிராமம் -2 பகுதியில் அமைந்துள்ள மஜ்ஜிதுல் முனீர் பள்ளிவாசல் முன்றலில் இடம் பெற்றுள்ளது.

சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பள்ளிவாசல்களுக்கு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற நிர்வாக தெரிவுக் கூட்டம் ஒன்றில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் சிலர் எதிர்வரும் நோன்பு பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறு கோரியதுடன் மற்றுமொரு குழுவினர் சில தினங்களில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவேண்டுமென தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யத் தீர்மானித்த நிலையில் குறித்த கூட்டம் நிறைவடைந்திருந்தது.

கூட்டத்தை நிறைவு செய்து திரும்பியவர்கள் இரு குழுக்களாக பிரிந்து மோதலில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் 65 வயது மதிக்கத்தக்க சம்மாந்துறை மலையடி கிராமம் கிராம சேவையாளர் பிரிவு 4 பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி பலியாகியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற சம்மாந்துறை பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (அ)

# புலிகளுக்கு புத்துயிரூட்ட முயற்சி; சென்னையில் ஒருவர் கைதானார்

சென்னை, ஏப். 09

தமிழீழ விடுதலைப் புலிகளை புத்துயிர்பெறச் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் சென்னையில் ஒருவரை கைது செய்துள்ளதாக இந்திய தேசிய புலனாய்வு மையம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தக மோசடியை ஒடுக்கும் நடவடிக்கையில், சென்னையில் சந்தேக நபர்களுக்கு சொந்தமான பல இடங்களில் சோதனைகளை மேற்கொண்டதாக இந்திய தேசிய புலனாய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த சோதனையின்போது ஏராளமான பணம், தங்கக் கட்டிகள், டிஜிற்றல் சாதனங்கள், போதைப்பொருள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்டவற்றையும் தேசிய புலனாய்வு மையம் கைப்பற்றியுள்ளது.

2022 ஜூலை இல் இந்த மோசடி தொடர்பான விசாரணைகளை தொடங்கியது தேசிய புலனாய்வு மையம் இதுவரை 14 நபர்களை கைது செய்துள்ளது.

சமீபத்தில் பறிமுதல் செய்யப்பட்டதில் 6.8 மில்லியன் இந்திய ரூபாய், 1,000 சிங்கப்பூர் டொலர்கள் மற்றும் ஒன்பது தங்க கட்டிகளும் அடங்குவதாக தேசிய புலனாய்வு மையம் கூறியுள்ளது.

சோதனைகளை தொடர்ந்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இலங்கை அகதி ஒருவரின் சார்பாக போதைப்பொருள் வர்த்தகத்தை நிர்வகித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.சிறைச்சாலையில் நூலகம் திறக்கப்பட்டது!






யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப் பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று நேற்று சனிக்கிழமை காலை 10:00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசி ரியர் சி.சிறிசற்குணராஜாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைகழகம் தனது கற்றல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காகச் சமூகப் பொறுப்பாண்மை மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகளில் அண்மைக் காலமாக ஈடுபாட்டு வருகின்ற நிலையில் பல்கலைக் கழகத்தின் சமூகப் பொறுப்பாண்மையின் ஒரு அம்சமாக யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக நூலகம் தனது சமூக வலுவூட்டல் செயற்றிட்டத் தின் கீழ் யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான 2500 புத்தகங்களை கொண்ட நூலகம் யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் நூலகர் ஸ்ரீகாந்தலக்சுமி அருளானந்தம் சிவ நேசன் குடும்பம், ஐ.பி.சி தமிழ் மற்றும் தன்னார்வலர்கள்,யாழ் பல்கலைக் கழக நூலகத்தின் பங்க ளிப்புடன் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா ,யாழ்.பிரதேச செயலர் சா.சுதர்சன்,யாழ்.சிறைச் சாலை அத்தியட்சகர் உதய குமார, யாழ் சிறைச்சாலை ஜெயிலர் ஹேரத், யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர்கள்,யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை மருத்துவர், கைதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ். பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு 80 வீத சீருடைகள் விநியோகம்

கொழும்பு, ஏப். 09

பாடசாலை மாணவர்களுக்கு தேவையான சீருடைகளில் 80 வீதமானவை விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 20 வீத சீருடைகள் இந்த மாத இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக சீனாவிலிருந்து இலங்கைக்கு கிடைத்த சீருடைகளில் 70 வீதமானவை வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக 05 மாகாணங்களில் 30 வீதமான சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன. 41 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கும் பிக்கு மாணவர்களுக்கும் இந்தச் சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

# வெதுப்பக உற்பத்திகள் விலை விடயத்தில் தலையிட நேரிடும்

## நுகர்வோர் அதிகார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 09

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகள், சிமெந்து மற்றும் பால்மா ஆகியவற்றின் விலைகளைத் தீர்மானிக்கும் விடயத்தில், எதிர்காலத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபை தலையீடு செய்யவேண்டி ஏற்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரிஎல்ல தெரிவித்தார்.

குறித்த தொழிற்துறையை சார்ந்தவர்கள், அவற்றின் விலைகளை குறைக்காமையே இதற்கு காரணம் என அவர் குறிப்பிட்டார்.

இணையத்தள முறைமையில் பொருட்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் எதிர்காலத்தில் புதிய ஒழுங்கு விதிகளை அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது அந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரிஎல்ல கூறினார். (அ)

# நலன்புரி கொடுப்பனவுக்கான கணக்கெடுப்பு நாளை நிறைவு

கொழும்பு, ஏப். 09

நலன்புரி நன்மைகள் கொடுப்பனவிற்கான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நாளை திங்கள்கிழமை நிறைவடையவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

37 இலட்சம் வரையான விண்ணப்பங்கள் இதற்காக கிடைக்கப்பெற்றுள்ளதாக அதன் தலைவர் பி.விஜேரத்ன தெரிவித்தார்.

மதிப்பீட்டு அதிகாரிகளால் விண்ணப்பதாரர்களிடம் பெற்றுக்கொள்ளப்படவேண்டிய தகவல்கள் இதுவரை 32 இலட்சம் வீடுகளுக்கும் சென்று சேகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எஞ்சிய தரப்பினரிடம் இருந்து நாளைக்குள் தகவல்களை சேகரிக்க முடியும் என தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். (அ)

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குள் குழப்பம்

## ஜனாதிபதியிடம் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 09

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் ரோஹிணி மாரசிங்கவுடன் இணைந்து பணியாற்ற முடியாது எனக் குறிப்பிட்டு, ஆணையாளர்கள் மூவரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , பிரதமர் தினேஷ் குணவர்தன, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையாளர்களான கலாநிதி விஜித நாணயக்கார, கலாநிதி நிமால் கருணாசிறி மற்றும் கழுபஹண பியரத்ன தேரர் ஆகியோர் கையெழுத்திட்டு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்துக்கு முரணாக செயற்படுகிறார் என்றும் , ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை செவிமடுக்காது தன்னிச்சையாக அவரது விருப்பத்திற்கமைய செயற்படுகிறார் என்றும் அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எடுக்கும் தீர்மானங்களைத் தொடர்ச்சியாக உதாசீனப்படுத்தி அவர் செயற்படுகின்றமையால், கடந்த பெப்ரவரி மாதம் முன்வைக்கப்பட்ட ஆணைக்குழுவின் யோசனைக்கு மார்ச் மாதமாகியும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஆணைக்குழுவின் தலைவர் ஏனைய உறுப்பினர்களின் குரல்களைச் செவிமடுக்காமையின் காரணமாக , அவரால் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் அனுமதி வழங்காதிருப்பதற்கு ஏனைய உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அவர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உயர் பதவியை இலக்காகக் கொண்டே இவ்வாறு செயற்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். எனவே இது குறித்து உடனடியாக அவதானம் செலுத்துமாறு ஆணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருடன் உறுப்பினர்கள் ஐவர் காணப்படுவதோடு, அவர்களில் மூவர் இவ்வாறு தமது கையெழுத்துடன் கடிதம் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.